IIIT

# அல்-குர்ஆனிய அகில நாகரிக நோக்கு

## மானிட சீர்திருத்தத்தின் தொடக்கப் புள்ளி



பேராசிரியர்
அப்துல் ஹமீத் அபூ ஸுலைமான்

# அல்-குர்ஆனிய
# அகில நாகரிக நோக்கு

## மானிட சீர்திருத்தத்தின் தொடக்கப் புள்ளி

பேராசிரியர்
அப்துல் ஹமீத் அபூ ஸுலைமான்

தமிழாக்கம்
கலாநிதி பீ.எம்.எம். இர்பான் (நளீமி)
எம். கே. இஹ்ஸான் (நளீமி)

# **Al-Qur'aniya Akhila Nagarika Nokku**
Maanida Seerthiruththaththin thodakkap Pulli

Tamil edition of

الرؤية الكونية الحضارية القرآنية

By
**AbdulHamid AbuSulayman**

Published by
**The International Institute of Islamic Thought**
P.O. Box 669, Herndon, va 20172, USA
www.iiit.org
London Office
P.O. Box 126, Richmond, Surrey tw9 2ud, uk
www.iiituk.com

Tamil Translation from Arabic
**Dr. P.M.M. Irfan**
**M.K. Ihsan**

ISBN 978-955-8398-30-2

Tamil Edition
Published by Fuzin Texts
*23/3 Market Road, Dharga Town – 12090, Sri-Lanka*
*Printed by Millennium Graphics, Maharagama*
© Abd-al-Jabbar Muhammad Zaneer (2018)

# உள்ளடக்கம்


- அல்-குர்ஆனிய அகிலநாகரிக நோக்கு.
- அல்-குர்ஆனிய அகில நோக்கே சீர்திருத்தத்திற்கான முதல் அடிப்படை.
- முழுமையான இஸ்லாமிய அகில நோக்கு உருக்குலைந்தது எவ்வாறு?
- அறிவும் வஹீயும் முரண்படுகின்றன என்பது ஊகமா? உண்மையா?
- நபித் தோழர்களுக்கும் நாட்டுப்புற அறபிகளுக்கும் மத்தியில் இஸ்லாமிய நோக்கு.
- அல்-குர்ஆனிய அகில நாகரிக நோக்கு என்பது என்ன?
- அல்-குர்ஆனிய அகில நோக்கில் ‘நாமும் பிறரும்’.
- அல்-குர்ஆனிய அகிலநோக்கு என்பது உலக சமாதானநோக்கு.
- நிலையானதும் மாறக்கூடியதும்: காலம், இடம்.
- யதார்த்த லட்சியவாதம்.
- அல்-குர்ஆனிய அகில நோக்கின் அடிப்படைக் கோட்பாடுகள்.
- அல்-குர்ஆனிய அகிலநோக்கு: சீர்திருத்தத்திற்கும் வளப்படுத்தலுக்குமான தூண்டுகோலும் தொடக்கப் புள்ளியும்.
- அகிலநாகரிகநோக்கும் பண்பாட்டு மானிடவியல் எண்ணக் கருக்களும்.
- பாரிய உழைப்புகள் வீணாவதைத் தவிர்க்க இன்னும் சற்று தொலைநோக்கு அவசியம்.
- இஸ்லாமிய சமூகவியல் கலைகளை கட்டியெழுப்புவதும் இஸ்லாமிய நோக்கை செயற்படுத்துவதும் எவ்வாறு?
- இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனத்தின் பங்களிப்புகள்.
- இறுதியாக...

# பதிப்புரை

*‘அல்குர்ஆனிய அகில நாகரிக நோக்கு’ எனும் தலைப்பில் பேராசிரியர் அப்துல் ஹமீத் அபூ ஸுலைமான் அவர்கள் ஆக்கிய அறபு மூல நூலின் சுருக்கப் பதிப்பின் தமிழாக்கமே இப்போது வெளியாகியுள்ளது. இன்ஷா அல்லாஹ், வசதி வாய்ப்புகள் கிட்டக் கூடுமாயின் இந்த நூலின் பூரண வடிவினைத் தமிழில் கொண்டு வரும் எண்ணம் உள்ளது.*

*வாசகர்கள் தம் சிந்தனைத் திறனை மேலும் வளர்த்துச் செல்ல இந்த எமது முயற்சி சிறிதேனும் துணையாக அமையும் என்பது எமது நம்பிக்கை.*

*வல்ல அல்லாஹ் எமது முனைவுகள் மூலம் நன்மைகளே விளைய நல்லருள் பாலிப்பானாக.*

Fuzin Texts

*ஜூலை 2018*
23/3 Market Road,
Dharga Town – 12090,
Sri-Lanka

## வாசகர் கடன்

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் குறிப்பிடப்படும் போதெல்லாம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் (அல்லாஹ்வின் சாந்தியும் சமா தானமும் அவர் மீது அருளப்படுவதாக) எனவும், அண்ணலாரின் தோழர்கள் யாரும் குறிப்பிடப்படும்போது ரழியல்லாஹு அன்ஹு (அன்ஹா, அன்ஹும்) (அல்லாஹ் அவர்கள் மீது கருணை காட்டு வானாக) எனவும் முஹம்மத் (ஸல்) அவர்கள் தவிர்ந்த ஏனைய நபிமார்கள் குறிப்பிடப்படும்போது அலைஹிஸ்ஸலாம் (அவர் மீது அல்லாஹ் நல்லருள் பாலிப்பானாக) எனவும் கூற வேண்டுவது.

# அல்-குர்ஆனிய அகில நோக்கே சீர்திருத்தத்திற்கான முதல் அடிப்படை

ஒவ்வொரு நாகரிக ஒழுங்குக்கும் ஓர் அகில நோக்கும் அதனை செயலூக்கப்படுத்தும் சிந்தனா முறைமையும் காணப்படும். அதே போல் ஒவ்வொரு சிந்தனா முறைமைக்கும் அதனை நெறிப் படுத்துகின்ற கோட்பாடுகளும் காணப்படும். சிந்தனா முறைமை என்பது ஒவ்வொரு சமூகத்தினதும் அகில நாகரிக நோக்கை செய லூக்கப்படுத்தும் கருவியாக கருதப்படுகின்றது.

இஸ்லாமிய அகில நாகரிக நோக்கே இஸ்லாத்தின் கோட் பாடுகளும் பெறுமானங்களும் எண்ணக்கருக்களும் கிளை பிரியும் வேராகும். அவற்றின் இயல்பை வரையறை செய்யக் கூடியதாக வும், அவற்றின் மூலாதாரத் தன்மையையும் முழு மொத்த இலக்கு களையும் பிரதிபலிக்கக் கூடியதாகவும் அந் நோக்கு அமைந் துள்ளது.

பலபோது இஸ்லாமிய அகில நோக்கு குறித்தும், அதன் சிந்தனா முறைமையின் அடிப்படைக் கோட்பாடுகள் குறித்தும் மக்களிடம் போதிய அறிவும் கவனமும் இருப்பதில்லை. இந்நிலையானது சிந்தனா முறைமையில் ஏற்படும் தவறுளையும் திரிபுகளையும் கண்டறிவதைக் கடினமாக்கி விடுகிறது.

முறைமைகளிலும் அவற்றின் சிந்தனா உற்பத்திகளிலும் தேக்க மேற்பட இதுவே பிரதான காரணம். முஸ்லிம் உம்மாவிடம் நாகரிக கோட்பாடுகளும் பெறுமானங்களும் தாராளமாக காணப் பட்ட போதும், அவை செயல்திறன் அற்றவையாகமாறிப் போன தற்குக் காரணமும் இதுவே.

இஸ்லாமிய சமூகத்தின் சிந்தனா முறைமையின்வேர்கள் அதன் அல்-குர்ஆனிய அகில நோக்கிலிருந்தே தோற்றம் பெறுகின்றன. அதிலிருந்தே அதன் கோட்பாடுகளும் பெறுமானங்களும் கிளை பிரிகின்றன. அந்தவகையில், தனிமனிதனையும் சமூகத்தையும் இயக்குவிக்கின்ற உள்ளார்ந்த உந்து விசை இந்த அகில நோக்கே. வாழ்வின் நோக்கையும் போக்கையும் நெறிப்படுத்துவதும் அது தான். பிரபஞ்சத்திலும் வரலாற்றிலும் நாகரிக வளப்படுத்தலுக் கான பயணத்தையும் அதன் செயல்திறனையும் நெறியாள்கை செய்யும் சக்தியும் அதுதான்.

எனவே எப்போதும் இந்நோக்கு தெளிவாகவும் மயக்கங்கள் அற்றதாகவும் இருக்க வேண்டும். இலகுவில் புரிந்து கொள்ளக் கூடியதாகவும், முரண்பாடுகளோ ஊகங்களோ அற்றதாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் அது தனிநபர்களையும் சமூ கத்தையும் இயக்குகின்ற உந்து சக்தியாகவும் உள்ளார்ந்த நம்பிக் கைப் பலமாகவும் இருக்கும். எப்போது இந்நோக்கு தெளிவற்ற தாகவும் போலித்தன்மை நிரம்பியதாகவும் மாறுகிறதோ, அப் போது உம்மாவை இயக்குவிக்கின்ற அதன் கோட்பாடுகளுக்கு எந்தத் தாக்கமும் இல்லாது போய் விடும்.

முஸ்லிம் உம்மாவில் இன்று நாம் புரிதல் குறைபாட்டையும் இஸ்லாமிய அகில நோக்கு பற்றிய அறிவியல் ஈடுபாடின்மை யையும் எதிர்மறை மனப்பாங்கையும் காண்கிறோம். அன்று தொட்டு இன்று வரை முஸ்லிம் உம்மா அனுபவித்து வரும் வீழ்ச் சிக்கும் பின்னடைவுக்குமான காரணங்கள் இவையே.

அவ்வாறே முஸ்லிம் புலமையாளர்கள் வாழ்வு பற்றியும் பிர பஞ்சம் பற்றியும் மேற்கு நாகரிகம் கொண்டிருக்கின்ற கண்

ணோட்டத்தை தெளிவாகப் புரிந்து கொள்ளாமல், அதனை முழு மையாக உள்வாங்கியமையும் இஸ்லாமிய நோக்கு வீழ்ச்சியுறு வதற்கு பெருமளவு பங்காற்றியுள்ளது.

எனவே முஸ்லிம் புலமையாளர்கள் இத்தகைய மயக்கத்தி லிருந்து முற்றாக விழித்துக் கொள்ள வேண்டும். சிந்தனையாளர் களும் பயிற்றுவிப்பாளர்களும் சீர்திருத்தவாதிகளும் வினைமை யோடு செயலாற்ற வேண்டும். தமது முதுசங்களையும் நாகரிகப் பிரதிகளையும் ஆக்கபூர்வமான விமர்சன நோக்கோடு அவர்கள் ஆய்வு செய்ய வேண்டும். இல்லையெனில், உம்மாவைப் பீடித் துள்ள பின்னடைவையும் தோல்வியையும் நாம் செயல்திறனோடு எதிர்கொள்ள முடியாது போய்விடும்.

இஸ்லாமிய நோக்கு பற்றியும், அதன் யதார்த்த நிலை பற்றியும் ஆய்வு செய்தலே தமக்குள்ள முதற் கடமை என்பதை இவர்கள் மனங்கொள்வது அவசியம். ஏனெனில் இந்நோக்குதான் மனி தனை இயக்குவிக்கின்ற உள்ளார்ந்த சிந்தனைத் தூண்டியாகவும் நம்பிக்கையாகவும் உள்ளது. அந்த வகையில், பிரபஞ்சம் பற்றிய உம்மாவின் கண்ணோட்டம் தேக்க நிலைக்கும் சிதைவுக்கும் உட்பட்டு, எதிர்மறை விளைவுகள் தோற்றம் பெற்றமைக்கான காரணங்களை அவர்கள் கண்டறிய வேண்டும். இன்றேல், தனிமனித -சமூக வாழ்வின் சாதகமான இயக்கியாகவும் தூண்டி யாகவும் செயற்படும் தன்மை கொண்ட அகில நாகரிக நோக்கின் பால் உம்மாவை மீட்டுவருவது சாத்தியமற்றுப் போகும். முஸ் லிமின் சுயத்தையும் பூரணப்படுத்த முடியாது போகும். இஸ்லாத் தின் தூதையும் அதன் பிரபஞ்ச-ஆன்மீக-அபிவிருத்தி நோக்கை யும் முழுமைப்படுத்தக் கூடிய உம்மாவின் முதுசங்களை செய லூக்கப்படுத்தவும் இயலாது போகும். கட்டுருவாக்கத்தின் முழு முதல் அடிப்படையே இந்த அகில நோக்கும் அதன் சிந்தனா முறைமையும்தான் என்பது இங்கு கவனத்துக்குரியது.

# முழுமையான இஸ்லாமிய அகில நோக்கு உருக்குலைந்தது எவ்வாறு?

நபித்துவக் காலம் தொட்டு உம்மாவின் நாகரிக ஆரம்பம் வரையான கீர்த்தி மிக்க வரலாற்றை நாம் அறிந்துள்ளோம். அதே போன்று பிற்பட்ட காலத்தினதும் தற்போதைய உலகினதும் அவல நிலையையும் நாமறிவோம். முன்னைய மனிதர்களிடம் முழுமையான அகிலநோக்கு இருந்ததனால்தான் உலக வாழ்வுக் கும் மனித நாகரிகத்துக்கும் புத்துயிரளிக்கக் கூடிய சாதனைகளை அவர்களால் படைக்க முடிந்தது. அந்தக் கண்ணோட்டம்தான் அவர்களுக்கு உடன்பாட்டு சக்தி, தூண்டற் சக்தி, சிந்தனா சக்தி, மனோபலம் என்பவற்றை வழங்கியது. இவ்வாறான இயலுமைகள் மூலம்தான் அக்காலத்தில் வாழ்ந்த பிறர் பிரமிக்குமளவு அற்புத மாகச் செயற்பட அவர்களால் முடிந்தது. இதன் காரணமாகவே உம்மாவின் புகழும் அடையாளமும் இன்று வரை நிலைத்து நிற்கின்றன. இந்த அற்புதமான மாற்றம் நம்பிக்கைக் கோட்பாடு களோடும் கலாசார அம்சங்களோடும் மாத்திரம் சுருங்கியதல்ல. இஸ்லாமிய வெற்றிகள் சென்றடைந்த பிரதேசங்களின் மொழி களைக் கூட மாற்றுமளவுக்கு அதன் விளைவுகள் நீட்சியடைந் திருந்தன.

இப்போது நாமும் முழு மனித சமூகமும் அவசியம் விடை காண வேண்டிய கேள்விகள் இவைதான்: முன்னைய அப்பரம் பரை கொண்டிருந்த நோக்கின் யதார்த்தம் என்ன? அந்த நோக்கு எங்கிருந்து பிறந்தது? பின்னர் அதுகால ஓட்டத்தில் எவ்வாறு பலவீனமடைந்தது? ஏன் பலவீனமடைந்தது? உம்மாவின் மீதான தாக்கத்தையும் செயல்திறனையும் அது எவ்வாறு இழந்தது? முஸ்லிம் உம்மா உடன்பாட்டுச் சக்தியையும் செயலூக்கத்தையும் தூண்டற் சக்தியையும் இழந்தது எவ்வாறு? ஒடுக்கப்பட்ட, நாக ரிகப் பங்களிப்பற்ற, விளிம்பு நிலை சமூகமாக அது மாறியது எப்படி? இன்று நாம் காண்கின்ற அவல நிலைக்கு காரணம் என்ன?

இவ்வினாக்களுக்கு விடை காண முன்னர், உம்மாவின் முதல் தலைமுறையினரிடம் காணப்பட்ட கண்ணோட்டம் இன்று நாம் கொண்டிருக்கின்ற அதே கண்ணோட்டமாக இருக்கவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இன்று நம் மத்தியில் செல்வாக்குச் செலுத்தும் அகில நோக்கானது ஊகங்களையும் குதர்க்க வாதங்களையும் கொண்ட எதிர்மறைக் கோட்பாடுகளால் கட்டமைக்கப்பட்ட கண்ணோட்டம். அது முஸ்லிமின் சுயத்தை மறுத்து, கண்மூடித்தனமாக அவன் மீது பொறுப்புகளையும் சுமை களையும் ஏற்றுகிறது.

இத்தகைய பண்புகளைக் கொண்ட எந்தக் கண்ணோட்டமும் அனேகமாக எதிர்மறைக் கண்ணோட்டமாகவே அமைந்திருக்கும். அது ஒடுக்கப்பட்ட மனநிலையையும், ஒதுக்கப்பட்ட உணர்வை யுமே ஏற்படுத்தும். அறிவுத்தேடல், ஆர்வம், பிரபஞ்ச நியதி களைப் புரிந்துகொள்ளும் திறன் என்பவற்றை உள்ளங்களிலிருந்து அது அழித்து விடும். பிரதிநிதித்துவ செயல்திட்டத்துக்கும் நலன் பயக்கும் நாகரிக வளப்படுத்தலுக்கும் பங்களிப்பதற்கான விருப் பையும் அழித்து விடும். இவ்வாறான மனப்பாங்கினால் எதிர் மறைச் சிந்தனை கொண்ட, தாக்க சக்தி குன்றிய சமூகமே உரு வாகும். அந்த சமூகத்தின் அங்கத்தவர்கள் சுயநலம், எதிர்மறைச் சிந்தனை, உதவா மனப்பாங்கு, சமூகப் பிரக்ஞையின்மை போன்ற பண்புகளைப் பெற்றிருப்பர். சர்வாதிகாரத் தன்மை கொண்ட இத்தீவிர சுயஅழிப்புப் போக்கானது பாதகமான எதிர்வினை யையும் இழுபறிப் போராட்டத்தையும் உருவாக்கி விடுவது ஆச்சர்யமான ஒன்றல்ல.

முன்னைய காலங்களில் 'அல்-குர்ஆனிய அகிலநாகரிக நோக்கு' நிகழ்த்திய அத்தனை சாதனைகளுக்கும் காரணம், அது உத்வேக மளிக்கும் பண்பு கொண்ட நேர்நிலை நோக்காக அமைந்திருந் ததே. தனிநபர் மற்றும் சமூகம் சார் சுய அடையாளத்தை சாத்தி யப்படுத்துகின்ற கண்ணோட்டமாக அது அமைந்திருந்தது. அச்ச மூட்டல், பயமுறுத்தல் என்பவற்றை விட அன்பு, விருப்பம், சுய திருப்தி என்பவை சார்ந்த ஊக்கிகளே அதில் மிகைத்து நின்றன.

அதன் மூலம் மனிதன் தனது வாழ்வின் நோக்கையும் சுயத்தையும் நாகரிக அபிவிருத்திக்கூடாக சாதித்துக் கொண்டான். தனது வாழ் வியற் பணியை தனிநபர்-சமூக-லௌகீக-ஆன்மீகப் பரிமாணங் களோடு நிறைவேற்றிக் கொள்ள அவனால் முடிந்தது. வேறு வகை யில் சொல்வதாயின், அல்-குர்ஆனிய நாகரிகம் சார்ந்த அபிவிருத்தி நோக்கைக் கொண்டிருந்த அத்தலைமுறையானது சடவாதம், சுயநலம், பகையுணர்வு, அடக்குமுறை, அநியாயம் என்பவற்றை ஊக்கிகளாகக் கொண்டு செயற்படவில்லை. மாறாக, அது தனது இயல்பான சடவாழ்வுத் தேவைகளுக்கும், சமநிலையான ஆன்மீக- உளவியல் தூண்டல்களுக்கும் இடமளித்துச் செயற்பட்டது. நீதி, உபகாரம், சகோதரத்துவம், சமாதானம் எனும் பெறுமானங்களை அடியாகக் கொண்ட சமநிலையான ஆன்மீக வழியில் தனது இயல்பான தேவைகளை அது தீர்த்துக் கொண்டது.

ஆக, இத்தகைய அம்சங்களின் மூலமாகத்தான் மனிதன் தனது சுயத்தையும் இறை திருப்தியையும் இயல்பாகவும் சமநிலை யோடும் சாத்தியப்படுத்திக் கொள்ள முடியும்; தனது ஆன்மீக -சடத் தேவைகளை நாகரிக- அபிவிருத்தி சார்ந்த நலன்களுடன் கூடிய வகையில் தீர்த்துக் கொள்ளவும் முடியும். அல்லாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறுகின்றான்:

‘‘உம் முகத்தை மார்க்கத்தின் பால் முழுமையாக திருப்புவீராக! அல்லாஹ் மனிதர்களை எந்த மார்க்கத்தில் படைத்தானோ அந்த இயற்கை மார்க்கத்தில் நிலைத்திருப்பீராக! அல்லாஹ்வின் படைப் பில் எதுவித மாற்றமும் இல்லை. இதுவே மிகச் சரியான மார்க் கம். எனினும், அதிகமான மனிதர்கள் இதனை அறிவதில்லை’’. (ஸூரா அர்-ரூம்: 30)

தூதைச் சுமந்திருந்த ஒப்பற்ற ஆசானும் அழைப்பாளருமாகிய முஹம்மத் (ஸல்) அவர்களால் அல்-குர்ஆனிய வழிகாட்டலின் கீழ் பயிற்றுவிக்கப்பட்ட தோழர்கள் நபித்துவக் காலத்தின் பின்ன ரும் நேர்வழி நடந்த கலீபாக்களின் காலத்திலும் இயற்கை மரணம் மற்றும் யுத்தங்களால் மறையத் தொடங்கியிருந்தனர். இதனால் இஸ்லாமிய அகில நோக்கின் மீது படிப்படியாக

எதிர்மறையான, தெளிவற்ற சிந்தனைகள் பரவத் தொடங்கின. மௌட்டீக நாடோடி அறபிகளின் எதிர்ப் புரட்சிகளை இராணுவ ரீதியாக அடக்க வேண்டி ஏற்பட்டமை, அக்காலத்திலிருந்த எதேச் சாதிகார வல்லரசுகளாகிய பாரசீகம், ரோம் ஆகியவற்றை எதிர் கொண்டமை போன்றனவும் அதிகமான நபித்தோழர்களின் உயிர் காவு கொள்ளப்பட காரணமாக அமைந்தன. இந்நிலையானது முழுமையான ஈமானியப் பயிற்றுவிப்பைப் பெறாத கோத்திரங் களைச் சேர்ந்தோரை இஸ்லாமியப் படையணியில் இணைக்க வேண்டிய நிலைக்கு இட்டுச் சென்றது. இதனால் இஸ்லாமியப் படையணியிலும் முஸ்லிம்களின் அரசியல் வாழ்விலும் நாடோடி அரபுக் கோத்திரங்களின் செல்வாக்கு அதிகரித்தது. அவர்கள் இஸ்லாத்துக்குப் புதியவர்களாகவும், கோத்திரவாத உணர்வு மிகைத்தவர்களாகவும் இருந்தனர்.

இஸ்லாமிய சமூகத்தின் அரசியல் வாழ்வில் நாடோடி அறபி களின் செல்வாக்கு வளர்ந்தது. சன்மார்க்க வாழ்வை அரசியல் மேலாதிக்கம் மிகைத்தது. இதனால் ஏற்பட்ட அடக்குமுறையும் குழப்பமும் நபி (ஸல்) அவர்கள் ஏலவே எதிர்வு கூறிய குழப்பங் களையும், அவை உம்மாவின் அரசியல்-பொருளாதார வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கங்களையும் உண்மைப்படுத்தின. இந்நிலை உம்மாவின் இஸ்லாமிய அகிலநோக்கையும் பாதித்தது.

அறபுத் தீபகற்பத்தின் இயல்பினாலும், சூழமைவு காரணமாக வும், உயர்ந்த மலைகளுக்கும் அகன்ற பாலைவனங்களுக்கும் மத்தியில் தனித்து வாழ்ந்ததனாலும் நாட்டுப்புற அறபிகள் இஸ் லாத்துக்கு முந்திய அறியாமை யுகம் தொட்டே நாகரிகப் பின்ன டைவுக்கு உட்பட்டிருந்தனர்.

இஸ்லாமிய அரசியல் வாழ்வின் மீதானநாட்டுப்புற அறபி களது ஆதிக்கத்தின் பாதகமான விளைவுகள் கிலாபா ராஷிதா வின் வீழ்ச்சியிலும், அதன் பின்னரும் வெளிப்பட்டன. இயல் பாகவே அவர்களிடம் காணப்பட்ட மௌட்டீக கோத்திரப் பண்பு கள் நபித்தோழர்கள் செயற்படுத்திய அல்-குர்ஆனிய அகில நோக் கைப் பாதித்ததோடு, அதன் இடத்தையும் பிடித்துக் கொண்டன.

இந்நிலையானது சமூக வாழ்விலும் அரசியல் ஒழுங்கிலும் இஸ்லாமிய அகில நோக்கிலும் சீர்குலைவையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியது. மட்டுமன்றி, தன்னளவிலும் அந்நோக்கு பலவித சீர்குலைவுக்கு உட்பட்டது. ஆட்சியாளர்களதும் அவர்களது அடிவருடிகளதும் நலனுக்காக மதத்தைப் பயன்படுத்தல், பொது நிறுவனங்களின் வீழ்ச்சி, அடக்குமுறை ஆட்சியின் நிலைபேறு, பொது வாழ்விலும் அரசியல் - பொருளாதார - சமூக கட்டுமானத்திலும் ஏற்பட்ட சரிவு போன்றனவும் இதற்கு துணை நின்றன.

கிரேக்க தர்க்கவியல் நம்பிக்கைக் கோட்பாடுகளையும், வேறு நாகரிக பகைப்புலங்களையும், கலாசாரக் கூறுகளையும் கொண்டிருந்த அதிகமான மக்கள் இஸ்லாத்தினுள் நுழைந்தபோது இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடுகள்மேலும் பாதிப்படைந்தன. இது கால ஓட்டத்தில் இஸ்லாமிய அகில நோக்கை இன்னும் மயக்க நிலைக்கு உட்படுத்தியது. இந்த அனைத்து நிலைகளாலும் முஸ்லிம் உம்மாவின் ஆன்மா நலிவுற்றது. உமையா ஆட்சியின் வீழ்ச்சியுடன் முஸ்லிம் உம்மாவின் அரசியல் ஒழுங்கு சிதைவடைந்த போது இது தெளிவாகப் புலப்பட்டது.கிலாபத் கண்ணோட்டம், ஏகத்துவக் கொள்கை, படைப்பின் இலக்கு, படைப்பின் இயல்பு, விழுமிய நடத்தை, நீதி, சகோதரத்துவம், கலந்தாலோசனை செய்தல், சுதந்திரம், பொறுப்புணர்வு, வளப்படுத்லுக்கும் வசப்படுத்தலுக்குமான முயற்சி, மனித நாகரிகத்தை மீட்டுருவாக்குதல் என்பவற்றில் ஏற்பட்ட பின்னடைவும் இந்நலிவை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியது.

இஸ்லாமிய சிந்தனையின் வரலாற்றுப் போக்கை கூர்ந்து அவதானிக்கும் போது மேற்குறித்த அனைத்துக் காரணிகளின் தாக்கத்தையும் நாம் ஒரு சேரக் காண முடியும். குறிப்பாக, கிரேக்க கோட்பாட்டுத் தர்க்கவியலும் தத்துவமும் அதனை மோசமாகப் பாதித்திருந்ததை நாம் அவதானிக்கலாம். இருந்த போதிலும், இஸ்லாமிய அறிஞர்களும் தத்துவஞானிகளும் அதே கிரேக்க தத்துவத்திலிருந்தே தமது அறிவுக்கு விருந்து தேடிக் கொண்டிருந்தனர்.

# அறிவும் வஹீயும் முரண்படுகின்றன என்பது ஊகமா? உண்மையா?

வரலாற்றுச் சூழ்நிலைகள் இஸ்லாமிய சிந்தனையின் மீது திணித்த மிக ஆபத்தான பிறழ்வுகளுள் ஒன்றுதான், 'வஹீ சார்ந்த அறிவுக்கும் பகுத்தறிவுக்கும் இடையிலான முரண்பாடு' என்னும் கோட்பாட்டு நெருக்கடியாகும். இப்பிறழ்வானது பிறரது சிக்கலான புராண கோட்பாட்டுவாதங்களுக்கு எதிர்வினையாற்றும் சமருக்குள் இஸ்லாமிய சிந்தனையைதள்ளி விட்டது. இத்தகைய சிக்கலான வாதங்கள் இஸ்லாமிய அகில நாகரிக நோக்கை அன்று கடுமையாகப் பாதித்தன. இன்று வரை முஸ்லிம் உம்மா அப்பாதிப்பிலிருந்து  மீளவில்லை. யதார்த்தமாகப் பார்த்தால் இது -இஸ்லாத்தின் பிரபஞ்ச நியதி சார் நோக்கில்- எந்த அடிப்படையுமற்ற போலி நெருக்கடியே. ஆயினும், பொருளற்ற இத்தத்துவச் சமரில் முஸ்லிம் உம்மாவை அது வீழ்த்தி விட்டது. பகுத்தறிவுக்கும் வஹீ சார் அறிவுக்கும் இடையில் கற்பிக்கப்படும் எந்த முரண்பாடும் போலியானதுதான். ஏனெனில் அறிவின் அடிப்படைப் பணியானது தரவுகளையும் நிகழ்வுகளையும் ஒப்பீடு செய்யும் தராசின் ஊசி போன்றது. தராசின் ஒரு தட்டு மறு தட்டுடன் எவ்வளவு தூரம் சமநிலையாக உள்ளது என்பதை அந்த அறிவே உறுதிப்படுத்துகிறது.

தராசின் இரு தட்டுகள் என நாம் இங்கு குறிப்பிடுவது அறிவையும் வஹீயையும் அல்ல. மாறாக, வஹீயின் வசனங்களையும், மனித இயல்பு மற்றும் பிரபஞ்ச நியதிகள் சார்ந்த உண்மையையுமே இரு தட்டுகள் என்கிறோம். வஹீயும் சிருஷ்டியின் இயல்பும் எவ்வளவு தூரம் ஒத்திசைகின்றன என்பதைக் கண்டறிவதே இங்கு பகுத்தறிவின் பணி. எழுத்துருவான வஹீயானது கட்புலனான உலகியல் நியதிகளை வெளிப்படுத்துகிறதா என்பதை பகுத்தறிவு கண்டறிய வேண்டும். வஹீ என்னும் 'நக்ல்' படைப்பியல்பு என்னும் 'பித்றா' வின் இலக்கையும் பணியையும் ஆற்றுப்படுத்துகிறதா என்பதை அப்பகுத்தறிவு உறுதிப்படுத்த வேண்டும்.

ஆக-‘வஹீ’க்கும், (தராசு அல்லது மீஸான் என்னும்) பகுத் தறிவுக்கும் இடையில் முரண்பாடு உருவாதல் சாத்தியமில்லை என்பது தெளிவு. எனினும், ‘வஹீ’க்கும் ‘பித்றா’ சார்ந்த நியதி களுக்கும் இடையில் முரண்பாடு உள்ளதாக -கோட்பாட்டு ரீதி யாக- ஒருவர் கற்பிதம் செய்வதற்கான சாத்தியப்பாட்டையும் நாம் மறுப்பதற்கில்லை. அந்தவகையில், ‘வஹீ’யிற்கும் ‘பித்றா’வுக் கும் இடையிலான நேர்நிலைத் தொடர்பை உசாவி உறுதி செய்வது பகுத்தறிவின் பணியாக மாறுகிறது.

‘வஹீ’ என்பது படைப்பாளனிடமிருந்து வந்தது. மனிதனது ‘பித்றா’வும், (ஸுனன் என்னும்) பிரபஞ்ச நியதிகளும் படைப் பாளனது படைப்பியல் உண்மைகள். எனவே இந்த இரண்டுக் கும் இடையில் முரண்பாடு ஏற்பட எந்த வாய்ப்பும் இல்லை. பகுத்தறிவு இந்த உண்மையை வரலாறு நெடுகிலும் உண்மைப் படுத்தி வந்திருக்கிறது. ஏனெனில் ‘வஹீ’ என்பது ‘பித்றா’வின தும் ‘ஸுனன்’களதும் பிரத்தியட்ச வெளிப்பாடு. அது மனிதனின் சுயத்தைச் சீரமைத்து அவனது இயல்பான தேவைகளையும் வாழ் வியல் நோக்கங்களையும் நிறைவேற்றுவதற்கான வழிகாட்டல். ‘‘அல்லாஹ், மனிதர்களைப் படைத்த மார்க்கமே இயல்பானது. அல்லாஹ்வின் படைப்பில் எவ்வித மாற்றமும் கிடையாது. இதுவே சீரிய மார்க்கமாகும்’’. (ஸூரா அர்-ரூம்: 30)

கிரேக்க தத்துவவியல் கோட்பாடுகள் முஸ்லிம் அறிவைத் தாக்கியதால் தோன்றிய புனைவே ‘பகுத்தறிவுக்கும் வஹீக்கும் இடையில் முரண்பாடுள்ளது’ என்னும் விவகாரமாகும். அது உம்மாவின் சிந்தனைப் போக்கிலும், அகில நாகரிக நோக்கிலும் ஏற்பட்ட அபாயகரமான திருப்பம் என்றே கூறல் வேண்டும். இவ்விவகாரத்தினால் உம்மாவின் சிந்தனையிலும், பிரபஞ்சம் பற்றிய அதன் தெளிவான நோக்கிலும் ஏற்பட்ட எதிர்மறை விளைவுகளை நாம் சரியாகப் புரிந்துகொள்வது அவசியம். இல்லையெனில், உம்மாவின் நோக்கையும் உத்வேகத்தையும் அறிவியல் -நாகரிக தலைமைத்துவத்தையும் நம்மால் என்றுமே மீட்க முடியாது போய் விடும்.

கிரேக்க தத்துவமும் தர்க்கவாதமும் வெறும் பௌராணிக கோட்பாட்டு அணுகுமுறையாகவும், 'சுதந்திர' கனவான்களின் வித்துவ விளையாட்டாகவுமே அடிப்படையில் இருந்தது. அது யதார்த்தத்துடனோ இயற்கை நியதிகளுடனோ பிரபஞ்ச விதி களுடனோ எவ்வகையிலும் தொடர்புபட்டிருக்கவில்லை. இத னால் நிலைப்பாடுகளிலும் கண்ணோட்டங்களிலும் முரண்பாடு கள் தோன்றின. இதனடியாகத் தோன்றிய சிந்தனா முறையானது அவசியமற்ற பிரிவினைகளுக்கும் முரண்பாடுகளுக்கும் வழி திறந்தது. சொந்த விருப்பு வெறுப்பையம் மனோஇச்சையையும் தவிர வேறெதுவும் அங்கிருக்கவில்லை. இதன் பாதக விளைவு களே சத்தியத்தையும் ஒருமைப்பாட்டையும் ஏகத்துவத்தையும் கொண்டிருக்க வேண்டிய நமது உம்மாவில் இன்று நீக்கமற நிறைந்திருக்கின்றன. விடயதான அடிப்படையே அற்ற பிரிவி னைகளும் குழுவாதங்களும் உம்மாவில் பரவிக் கிடப்பது இதனால்தான். இம்முரண்பாடுகளின் தோற்றுவாய் தனிப்பட்ட கண்ணோட்டங்களும் விருப்பு வெறுப்புகளும் மட்டுமே. ஆனால் அவற்றின் மீது சத்தியம் என்றும், புனிதத் தன்மை என்றும் போலி ஆடைகள் போர்த்தப்பட்டிருக்கின்றன. இவ்வாறு முரண்படு வோர் தமது நிலைப்பாடுகளை வஹீயையும் பிரபஞ்ச நியதி களையும் நோக்கி கொண்டு வருவார்களாயின், அவற்றில் பெரும் பாலானவை கானலாய் மறைந்து விடும்.

உம்மாவின் சிந்தனா முறையில் ஏற்பட்ட இப்பிறழ்வும் சறுக்க லும் மார்க்க முரண்பாடுகளுக்கான வாயிலை அகலத் திறந்து விட்டமை ஒரு பேரனர்த்தமே. பௌராணிகவாத முறைமைகளும், தத்துவ ஊகங்களும், அறிவுக்கு ஒவ்வாத பிதற்றல்களும், சுய நலனும், அறியாமைக் கால மௌட்டீகங்களுமே இம்முரண் பாடுகளின் வேராக இருந்தன. இவை உம்மாவின் ஒற்றுமையை சீர்குலைத்தன; அதன் பாதையை வேறுவேறாக்கின; பல குழுக் களாகவும் பிரிவுகளாகவும் அதனைத் துண்டாடின.

பகுத்தறிவு என்பது கணினி போன்றது. உள்ளீடுகளின் தன்மை யைப் பொறுத்தே அதன் வெளியீடுகள் அமையும். உள்ளீடுகள்

சரியாக இருப்பின் வெளியீடுகளும் சரியாக அமையும். கோட் பாடுகளும் வாதங்களும் சரியாக அமைந்தால், அவற்றினடியாய் பிறக்கும் செயற்பாடுகளும் சரியாக அமையும்; யதார்த்தமும் உண்மையும் துலங்கும். உள்ளீடுகள் மனோ இச்சையாகவும் ஊகங்களாகவும் மௌட்டீக நம்பிக்கைககளாகவும் இருப்பின், வெளியீடுகளும் அப்பண்புகளையே கொண்டிருக்கும்.

அல்-குர்ஆன் முற்று முழுக்க சமநிலையான நோக்குடையது. இலக்குமையப்பட்டதும், வளப்படுத்தும் தன்மையும், விழுமியம் சார்ந்ததுமான மனித இயல்பை அது எடுத்துரைக்கிறது. படைப் பின் உண்மைகளாகவும் உள்ளீடாகவும் அமைந்த பிரபஞ்ச நியதிகளையும் விதிகளையும் வெளிப்படுத்துகிறது. இந்நியதி களையும் விதிகளையும் அது ஒருபோதும் நிராகரிப்பதோ மீறிச் செல்வதோ இல்லை. சீரான மானிட இயல்பையும் பிரபஞ்ச நியதிகளையும் மனிதப் புரிதலுக்குள் குவிமையப்படுத்த அது விழைகிறது. இதனூடாக மனிதனது 'பித்றா' வழிப்படுத்தப்படு கிறது. அவனது ஆன்மீகப் பயணம் சமநிலை கொண்டதாக நெறிப்படுத்தப்படுகிறது. மனிதனது 'பித்றா' சார்ந்த நோக்கங் களையும், வளப்படுத்தல் மற்றும் நாகரிகம் சார்ந்த தேவை களையும் ஆக்கபூர்வமான வழிகளில் நிறைவேற்றிக் கொள்ள தூண்டுதல் அளிக்கப்படுகிறது. இதன் மூலமாக மனித யத்தனம் சீரடைகிறது. சூழவுள்ள பிரபஞ்ச விதிகளை சரியாகப் பயன் படுத்த அவனால் முடிகிறது. அவனது இருப்பின் பெறுமதி அதிகரிக்கின்றது. உழைத்தல், சீர்திருத்தல், சிறப்பாகச் செய்தல், வசப்படுத்தல், வளப்படுத்தல், கொடை, அர்ப்பணம் என்பவற் றின் மூலம் இவ்வுலகிலும் இறைவனிடத்திலும் அவனது அந் தஸ்து உயர்கிறது. ஏனெனில் மனிதனது உண்மையான பெறுமதி யும் பயனும் திருப்தியும் உழைப்பாலும் கொடையாலுமே நிதர் சனமாகின்றன. ''நீங்கள் உங்களுக்காக நன்மையைச் செலவிடுங் கள்; கஞ்சத் தனத்திலிருந்து பாதுகாக்கப்பட்டவர்களே வெற்றி பெற்றவர்கள்''. *(ஸூறா தகாபுன்: 16)*

இவ்வாறு அல்-குர்ஆனிய அகில நாகரிக நோக்கும், நபித்துவக் காலத்தில் அது சாதித்தவையும் ஒரு சேர வெளிக்கொணரப்படு

மாயின், மனித வாழ்வில் அது நடைமுறைச் சாத்தியமே என்பது நிதர்சனமாகி விடும். மனித இயல்போடும் நியதிகளோடும் அது எவ்வகையிலும் முரண்படுவதில்லை என்பதும் தெளிவாகும். இது பற்றிய ஆய்வில் ஈடுபட விழைபவர் சத்தியத்தைக் கண்டறியும் நோக்கில் 'வஹீ' மற்றும் 'பித்றா' வுக்கிடையில் காய்தல்-உவத்த லற்ற அறிவார்ந்த ஒப்பீட்டு முறையைக் கைக் கொள்வது அவ சியம். வஹீயை புரிந்து கொள்ளும் முனைவின் போது அறிவுக்கு சுதந்திரமாக செயற்பட இடமளிப்பதும் அவசியம்.

## நபித் தோழர்களுக்கும் நாட்டுப் புற அறபிகளுக்கும் மத்தியில் இஸ்லாமிய நோக்கு

நாட்டுப்புற அறபிகளின் கண்ணோட்டமும், அதனோடொட் டிய இனம் மற்றும் குலம் சார்ந்த பாரம்பரியங்களும் நபித்தோழர் கள் சுமந்திருந்த குர்ஆனிய நோக்கை விகாரப்படுத்துவதில் பங்களிப்புச் செய்தன. பின்னர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சமூகங்களின் கண்ணோட்டமும், அவை சுமந்திருந்த எதேச்சாதி கார வரலாறும் நாகரிகமும் கூட நபித்தோழர்களது குர்ஆனிய நோக்கை விகாரப்படுத்தின. கால இடப் பரிமாணங்கள் கடந்த அல்-குர்ஆனிய உரைக்கும், நபிகளாரது நடைமுறை சார்ந்த உரைக்கும் இடையில் காணப்பட்ட நுணுக்கமான வித்தியாசத் தைப் புரிந்து கொள்ளாமையும் அல்-குர்ஆனிய நோக்கு சிதை வடைய மற்றொரு காரணமாய் அமைந்தது. நபிகளாரது நடை முறை சார்ந்த உரையானது சிலை வணங்கிகளான நாட்டுப் புற அறபிகளை நாடோடி நாகரிகப் பண்பிலிருந்து மீட்டு, உலகளா விய மானிட சமூகத்தைக் கட்டியெழுப்புவதை நோக்கியதாக அமைந்திருந்தது என்பது இங்கு மனங்கொள்ளத் தக்கது.

ஆக- உலகையே திகைப்பிலாழ்த்தும் வகையில் நபித்தோழர் களிடம் காணப்பட்ட அல்-குர்ஆனிய அகில நோக்கு வேறு; நாட்டுப்புற அறபிகளுக்கான நபி(ஸல்) அவர்களது வழிகாட்டல் களைப் பிரதிபலித்த நோக்கு வேறு. இவ்விரண்டுக்கும் இடை யிலான வேறுபாட்டை நாம் புரிந்திருப்பது அவசியம்.

ஏனெனில், நபித்தோழர்களது ஈமான் சார்ந்த அல்-குர்ஆனிய நாகரிக கண்ணோட்டத்துக்கும், நாட்டுப்புற அறபிகளது 'அறிவுத் தரத்தை' மையமாகக் கொண்ட கண்ணோட்டத்துக்கும் இடையில் மிகப்பெரும் வித்தியாசம் இருந்தது. நபி(ஸல்) அவர்களைச் சூழ இருந்த தோழர்கள் அல்-குர்ஆனின் மாணவர்களாக இருந்தார்கள். 'நிச்சயமாக நான் பூமியில் ஒரு பிரதிநிதியைப் படைக்கப் போகிறேன்' என்ற இறை நோக்குடன் மனிதன் படைக்கப்பட்டது முதல், அல்லாஹ் பூமியையும் அதில் உள்ளவர்களையும் அனந்தரமாகப் பெறும் வரையிலான முழு மொத்த அல்-குர்ஆனிய அகில நோக்கையும் அவர்கள் புரிந்திருந்தனர். புத்தாக்கம், அழகுபடுத்தல், வசப்படுத்தல், வளப்படுத்தல், அனுபவித்தல் முதலிய அனைத்தும் அந்தப் புரிதலில் உள்ளடங்கியிருந்தன.

இந்த உம்மாவில் வாழ்ந்த அறிஞர்களது வரலாற்றை நாம் கவனித்தால், மதீனத்துப் பாசறையில் பயின்றவர்களின் வாரிசுகள் கால ஓட்டத்தில் சமூக வாழ்விலிருந்து ஒதுக்கப்பட்டிருந்ததையும், தனியாள் விவகாரங்களில் கவனம் செலுத்துவோராக அவர்கள் மாற்றப்பட்டிருந்ததையும் கண்டுகொள்ளலாம். அதன் பின்னர் உம்மாவின் அதிகாரத்தில் கோத்திர மற்றும் குழுவாத அரசியல் ஆதிக்கம் பெற்றிருந்ததையும் நாம் அவதானிக்கலாம்.

இவையனைத்தும் அல்-குர்ஆனுடனும், அதன் அகில நாகரிக நோக்குடனுமான சிந்தனைத் தொடர்பை மேலும் பலவீனப்படுத்தின. கால, இட, வர்த்தமானங்களால் மாறவும் வளர்ச்சியுறவும் கூடிய நிகழ் யதார்த்தத்தின் மீது அந்த அகில நோக்கைப் பிரயோகிக்கும் பண்பையும் அவை பலவீனமாக்கின. இப்பலவீனம் உம்மாவின் நோக்கில் குழப்பமொன்றை உருவாக்கியது. இதனால் உம்மாவில் வாழ்ந்த பல கற்றறிவாளர்கள் வணக்க வழிபாடுகளோடும் தனிநபர் சார்ந்த வியாபாரத் தொடர்புகளோடும் தமது புலமையை சுருக்கிக் கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டனர். இந்நிலையில் முஸ்லிம்களது இஸ்லாமிய அகிலநோக்கு சீர்குலைந்து, வாழ்வின் அர்த்தம் மற்றும் இலக்கு பற்றிய வழிகாட்டலின்றி விடப்பட்டனர். மட்டுமன்றி இந்நோக்கின் பல கருத்

தாக்கங்களில் சமநிலையின்மை என்ற தோற்றப்பாடும் பரவலடைந்தது.

வகை மாதிரியான அந்த ஆத்மீகப் பின்னடைவுக் காலங்களில் உம்மாவின் சிந்தனையிலும் அகில நோக்கிலும் ஏற்பட்ட இப் பரிதாப நிலையின் பகைப்புலத்தில் 'சுய மறுப்பு'க் கோஷங்கள் எழுந்தன. இக்கோஷங்களுக்கு எதிர்வினையாக 'சுயத்தை சம நிலையாக நிலைநிறுத்தல்' என்ற கருத்து நிலையே தனிநபர் மட்டத்திலும் சமூக மட்டத்திலும் தோற்றம் பெற்றிருக்க வேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக, 'சுய மையவாதம்' என்ற சுயநலக் கருத்தாக்கம் தோற்றம் பெற்றது. இதன் விளைவாக, உழைப்பு, சீர்திருத்தம், அர்ப்பணம் என்பவற்றுக்குப் பதிலாக, குழப்பமும் அச்சமும் இழிவும் சந்தர்ப்பவாதமும் பண்பாட்டு வீழ்ச்சியும் பொது நிறுவனங்களில் சரிவும் ஏற்பட்டன. இவை அனைத்தும் சேர்ந்து இன்று நாம் அனுபவிக்கின்ற வீழ்ச்சிக்கும் விளிம்பு நிலை வாழ்வுக்கும் வழிகோலின. சிறுபான்மைகளாகவும் இனக் குழுமங்களாகவும் கோத்திரங்களாகவும் பிரிவுகளாகவும் முஸ்லிம் உம்மா பிளவுபட்டு இஸ்லாமிய நாகரிகம் சரிவுறும் அவலமும் ஏற்பட்டது.

தோழர்களை நோக்கிய நபி(ஸல்) அவர்களது உரையாடலானது அன்பு, கண்ணியம், கௌரவம் ஆகிய பண்புகளைக் கொண்டிருந்ததேயன்றி, ஏளனம், இழிவுபடுத்தல், அச்சுறுத்தல் போன்ற பண்புகளைக் கொண்டிருக்கவில்லை என்பது இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகும். இதுவே அல்-குர்ஆனிய நோக்கினதும், அதன் அகிலநாகரிக அந்தஸ்தினதும் சிறப்புப் பண்புமாகும். ''கண்ணியம் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் முஃமின் களுக்கும் உரியது''. (ஸூறா அல்-முனாபிகூன்: 08)

## அல்-குர்ஆனிய அகில நாகரிக நோக்கு என்பது என்ன?

இஸ்லாமிய அகில நோக்கு என்பது ஏகத்துவம் சார்ந்தது; இலக்கு மையப்பட்டது; விழுமியமும் வளப்படுத்தல் சிந்தனையும் கொண்டது; நன்மை பயக்கும் நோக்குடையது; நாகரிகப் பண்பு கொண்டது; சமநிலையான மனித இயல்பைப் பிரதிபலிக்கக் கூடியது. அந்தவகையில், சமநிலையான மனித இயல்புக் கூறுகளை மனித அறிவில் குவிமையப்படுத்துவதை நோக்காகக் கொண்ட அறிவியல் கண்ணோட்டமாக அது உள்ளது. இதன் மூலம் மனித வாழ்வின் பயணத்திற்கு அது வழிகாட்டுகிறது. மனிதன் தனது சுயத்தை தனிநபர் மற்றும் சமூகப் பரிமாணங்களில் சாத்தியப்படுத்த அது உதவுகிறது. மனித சுயத்தின் தேவைகளையும் சுகண்டிகளையும் -அவனது ஆன்மீக, புத்தாக்க, நாகரிகப் பரிமாணங்களில்- சமநிலையோடு நிறைவேற்ற அது வழிகாட்டுகிறது.

''ஆணோ, பெண்ணோ எவர் ஒருவர் ஈமான் கொண்டவராக சிறந்த செயல்களில் ஈடுபடுகிறாரோ அவருக்குச் சிறந்த வாழ்வை நாம் வழங்குவோம். அவர்கள் செய்தவற்றுக்கான கூலியையும் மிகச் சிறந்த முறையில் வழங்குவோம்''. (ஸூறா நஹ்ல்:97)

இத்தகு பண்புகள் கொண்ட அல்-குர்ஆனிய நோக்கே சிறந்த வாழ்வையும் நாகரிகத்தையும் கட்டியெழுப்புவதற்கான தூண்டலையும் உள்ளார்ந்த ஆற்றலையும் மனிதனுக்கு வழங்க முடியும். ஏனெனில் பிரதிநிதித்துவம், நாகரிகம் என்பவை அடிப்படையில் காலத்திற்கும் இடத்திற்கும் உகந்த அறிவும் வளப்படுத்தலுமாகும். அல்-குர்ஆனிய அகில நாகரிக நோக்கின் இலக்கும் இதுதான். அந்த வகையில் அல்-குர்ஆனிய அகில நாகரிக நோக்கானது 'சமநிலையான மனித சுயத்தை சாத்தியப்படுத்துகின்ற' ஆக்கத்திறன் கொண்டதொரு கண்ணோட்டம் எனலாம்.

எனவே, (சில பிழையான கருத்தாக்கங்கள் வாதிப்பது போல்) இஸ்லாமிய அகில நாகரிக நோக்கானது மனிதனது 'சுய மறுப்பை'

நோக்கிய அழைப்பன்று; மனிதனது சுயத்தையும் வாழ்வையும் பலி கொடுத்து, பாரமான கடமைகளையும் அர்ப்பணங்களையும் அவன் மீது சுமத்தும் கண்ணோட்டமும் அன்று.

அல்-குர்ஆனிய அகில நோக்கு என்பது ஈமானிய -ஏகத்துவப் பார்வையும் நன்மையும் வளப்படுத்தும் பண்பும் கொண்டதொரு நேர்மையக் கண்ணோட்டமாகும். அல்-குர்ஆனுடன் நன்கு பரிச்சயம் கொண்ட எவருக்கும் இதனைப் புரிந்து கொள்ள முடியும். அதன் மூலம் மனிதன் தனது சுயத்தை சாத்தியப் படுத்துவதோடு, அல்லாஹ்வின் அன்பையும் திருப்தியையும் பெற்றுக் கொள்ள முடியும். ஏனெனில் அல்-குர்ஆனிய அகில நோக்கில், இறையன்பையும் திருப்தியையும் பெறுதல் என்பது மனிதன் தனது சுயத்தை அல்லாஹ் படைத்த அமைப்பில் சாதிப் பதிலேயே தங்கியுள்ளது. நன்மையான மனித வாழ்வை அல்லாஹ் நாடியது போன்று அதன் முழுமையான ஆத்மீக -சடப் பரிமாணங்களில் அமைத்துக் கொள்வதிலும் அது தங்கியுள்ளது. குர்ஆனிய கண்ணோட்டத்தின் படி, அல்லாஹ்வே படைப்பாளன்; சத்தியமானவன்; நன்மைகள் நிறைந்தவன்; நீதியானவன்; சாந்தியானவன்; முழுமையானவன்; தூயவன். அதே குர்ஆனிய கண்ணோட்டத்தின் படி, தீமையும் ஷைத்தானியப் பண்புமேவிஷமமானவை; அநீதியானவை; கடும்போக்குடையவை; அத்துமீறலானவை. இந்த வகையில், ஒரு முஸ்லிமிடம் இஸ்லாமிய அகிலநோக்கு சீர்பெற்றுவிட்டால், அவன் நன்மைகள் நிறைந்த மனிதனாக மாறுவான்; நன்மைகளை விரும்புவான்; தீமையையும் ஷைத்தானையும் வெறுப்பான்.

ஆக- நமது இளம் தலைமுறையின் உள்ளங்களில் நாம் பதிக்க வேண்டிய இஸ்லாமிய அகிலக் கண்ணோட்டம் அன்பும் கண்ணியமும் சமாதானமும் கொண்ட கண்ணோட்டமே. ஏகத்துவ நம்பிக்கையும் அறிவும் உளத்தூய்மையும் அதில் ஊடுபாவி நிற்க வேண்டும். அல்லாஹ்வின் மீதான அடியானின் அன்பினாலும், அடியான் மீதான அல்லாஹ்வின் அன்பினாலும் மனிதன் அங்கு இன்புற வேண்டும். அப்போதுதான் மனிதன் சுதந்திர நாட்டத்துடன் அல்லாஹ்வை வணங்கும் நிலை தோன்றும்.

இப்பார்வையிலிருந்துதான் அல்லாஹ்வை நினவுபடுத்தும் கிரியைகளான தொழுகையும் திக்ரும் பொருள் கொண்டவை யாகின்றன. ஏனெனில் அவை அல்லாஹ்வுடனான தொடர் பாடலை பிரதிபலிப்பவை.

''நிச்சயமாக தொழுகை மானக் கேடானவற்றையும், வெறுக்கத் தக்கவற்றையும் விட்டு தடுத்து விடும். அல்லாஹ்வின் நினைவு தான் மிகப் பெரியது. நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிந்த வனாக இருக்கின்றான்''. *(ஸூறா அன்கபூத்:45)*

அல்லாஹ்வை நோக்கிய முஸ்லிம் உணர்வை முன்னிறுத்தி உளவியல் மற்றும் சமூகவியல் ஆய்வுகள் முன்வைக்கப்படுவது அவசியம். அதிலும் குறிப்பாக, நவீன வாழ்வின் மீதும் சடவாத நாகரிகத்தின் மீதும் இன்று பரவியிருக்கும் எதிர்மறையான சிந்தனா -கலாசாரத் தாக்கங்களின் பின்புலத்தில் இது அதிக முக்கியத்துவம் பெறுகிறது. அவ்வாய்வுகள் அகில நாகரிக நோக்கை பிரதிபலிப்ப தோடு, கொடையும் அருளும் கிருபையும் கொண்ட அல்லாஹ் வின் அன்பை மையப்படுத்தி அமைதல் வேண்டும். பெற்றோரின் பயிற்றுவிப்பு மற்றும் பாடசாலைப் பயிற்றுவிப்பு சார்ந்த எழுத் தாக்கங்கள் மூலமாக இதனைச் சாதிக்க முடியும். முஸ்லிமின் மீதும் குழந்தை மீதும் அல்லாஹ் கொண்டுள்ள அன்பை எடுத்துக் காட்டும் வகையில் இவ்வாக்கங்களின் சொல்லாடல் அமைந்தி ருப்பது அவசியம். அல்லாஹ்வின் அருட்கொடைகள், அவனது கண்காணிப்பு, மனிதனை அவன் கண்ணியப்படுத்தியுள்ள விதம் என்பவை பற்றிச் சிந்திக்க வளர்ந்தோரைத் தூண்டும் வகையிலும் அவை அமைதல் வேண்டும்.

இங்கு இன்னொரு விடயமும் தெளிவுபடுத்தப்பட வேண்டி யுள்ளது. இறைவனை நினைப்பதும் அவனுடனான தொடர்பும் மனித உணர்வில் இயல்பானது. ஆனால் அறிவு, நற்செயல், சீரிய செயற்பாடு, புத்தாக்கம் என்பவற்றின் மூலமாக மனிதன் தனது பிரதிநிதித்துவப் பணியை நிறைவேற்றும் போது இந்த இறை யன்பும் தொடர்பும் உரிய விளைவைத் தர வேண்டும். இல்லை யெனில் அதற்குப் பயனோ பொருளோ இருக்கப்போவதில்லை.

துரதிஷ்டவசமாக, அல்-குர்ஆனிய நோக்கு பற்றியும் அதன் சமூக நாகரிகப் பரிமாணங்கள் பற்றியுமான பிரக்ஞை அற்றுப் போனமை தரங்கெட்ட நாகரிகப் படையெடுப்பொன்று ஏற்பட வழியமைத்து விட்டது. நவீன நாகரிகத்தின் பௌதீக அறிவியல் சாதனைகள் மீது முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட பிரமிப்பும் இப் படையெடுப்புக்கு இன்னொரு காரணம். கலாசாரப் படை யெடுப்பொன்றை மேற்கொள்வதன் நிமித்தம் நவீன நாகரிகம் கொண்டிருந்த பலமான ஆயுதங்களும் வழிமுறைகளும் மூலோ பாயங்களும் கூட இதற்கு கணிசமாகப் பங்காற்றியுள்ளன. பயிற்று விப்புக்கும் சிந்தனைக்குமான இயக்கம் பலவீனமாகவும் மேம் போக்காகவும் காணப்பட்டதால், உம்மாவின் அங்கத்தவர்களிடம் நம்பிக்கை, சிந்தனை, கல்வி மற்றும் மனப்பாங்கு சார்ந்த சிறந்த எதிர்க்கட்டமைப்பொன்று அற்றுப் போயிருந்தமையும் இந்நிலை ஏற்படக் காரணமாயிற்று.

அல்-குர்ஆனிய அகிலநாகரிக நோக்கின் செயல்திறனானது நேர்மையச் சிந்தனையின் நிபந்தனைகள் பூர்த்தியடைவதன் மூலமே கைவரப் பெறும். இது முறையே முழுத்திருப்தி, ஈமா னியப் பலம், சீரிய இலக்கு, விழுமிய நோக்கு என்பவற்றை வற் புறுத்தி நிற்கின்றன. விஞ்ஞானத் தன்மை கொண்ட சீரிய சிந்தனா முறையொன்றிலிருந்து பிறக்கும் செயல்வாதமும் இங்கு முக்கி யம். சமநிலையான மானிட 'பித்றா'வுடன் இயைந்து செல்லக் கூடிய இயக்கமும் அவசியம். அவ்வியக்கமோ வசப்படுத்தல், புத்தாக்கம், பூரணத்துவம், நியதிகளைக் கருத்திற் கொள்ளல் என்ப வற்றின் மீது கட்டெழ வேண்டும். அல்லாஹ் அல்-குர்ஆனில் பின்வருமாறு கூறுகின்றான்: ''செயற்படுங்கள் அல்லாஹ்வும் அவனது தூதரும் விசுவாசிகளும் உங்களது செயற்பாட்டை பார்ப்பார்கள்... என நபியே கூறுவீராக!'' (ஸூறா தௌபா:105)

வளப்படுத்தல் சார்ந்த அல்-குர்ஆனிய நாகரிக நோக்கில், மேற் குறித்த இறை வசனங்கள் வெற்றிகரமான மானிட செயல்வாத மொன்றுக்கான மூன்று அடிப்படைகளை விளக்குகின்றன. ஒன்று: நம்பிக்கைப் பலம். இரண்டு: ஆக்கத்திறன். மூன்று:

பொருத்தமான செயல்வாதம். குறித்த செயல் இலக்குமையப் பட்டதாகவும், நியதிகளைப் பேணியதாகவும், அறிவார்ந்ததாகவும் அமைவதை இம்மூன்றாவது அடிப்படை குறிக்கிறது.

உம்மாவும், முஸ்லிம் தனிமனிதனும் தம்மிடமுள்ள உள்ளார்ந்த சக்தியை வெளிக்கொணர விரும்பினால் அல்-குர்ஆனிய அகில நோக்கை ஆழ்ந்து புரிந்துகொள்ள வேண்டும். அதனையும் அதன் பெறுமானங்களையும் கோட்பாடுகளையும் தமது நம்பிக்கையிலும் மனப்பாங்கிலும் மீளக் கொண்டுவர வேண்டும். தமது சிந்தனையிலும் செயலிலும் முனைவுகளிலும் பிரபஞ்ச நியதிகளை அனுசரிக்கும் அறிவியல் முறைமையைக் கைக்கொள்ள வேண்டும். அப்போதுதான் தமது சுயத்தையும்,சமநிலையான ஆத்மீக வழிப்பட்ட 'பித்றா'வையும் அவர்களால் தாபிக்க முடியும்; நாகரிக வளப்படுத்தல் சார்ந்த தெரிவுகளையும் ஒழுங்கமைத்துக் கொள்ள முடியும்.

## அல்-குர்ஆனிய அகில நோக்கில் 'நாமும் பிறரும்'

அல்-குர்ஆனிய அகில நோக்கின் அழகு மற்றொரு கோணத்தில் இங்கு வெளிப்படுகிறது. அல்-குர்ஆனிய நோக்கின் அகிலம் தழுவிய பரிபூரண ஏகத்துவப் பரிமாணம் வெளிப்படும் இடம் இது. பிறருடனான மனித உறவு இங்கு ஒன்றுக்கொன்று தொடர்புற்றதாகவும், ஒன்றையொன்று முழுமைப்படுத்துவதாகவும், ஓர் அற்புதமான நாகரிக ஒழுங்கிலும் துலங்குகிறது. அந்த ஒழுங்கு இலக்குமையப்பட்டது; ஆக்கபூர்வமானது. அதன் மூலமாக மனித சமூகத்தில் நீதி, சகிப்பு, சகோதரத்துவம், சமாதானம் ஆகிய பெறுமானங்களால் அமைந்த நாகரிக சூழலில் தனிமனிதன், சமூகம், மனிதம் என்பவற்றின் அர்த்தங்கள் நிதர்சனமாகின்றன.

ஒரு மனிதனுக்கும் அவனது சகோதர மனிதனுக்கும் இடையிலான உறவானது இனம், நிறம், குலம், முஃமின், முஃமினல்லாதவர் என்பவற்றைத் தாண்டியே உருவாகிறது. ஏனெனில், அவர்கள் அனைவரும் மனிதர்கள்; முழு மொத்த மனிதம் என்ற ஒருமைப்பாட்டினால் பிணைக்கப்பட்டவர்கள்; மிகப் பெரும்

மனிதக் குடும்பத்தில் சம அந்தஸ்துடைய சகோதரர்களாக படைக் கப்பட்டவர்கள்.

''மனிதர்களே, ஒரே ஆத்மாவிலிருந்து உங்களைப் படைத்த உங்கள் இறைவனைப் பயந்து கொள்ளுங்கள்''.(ஸூறா நிஸா:01)

அடுத்தவருடனான தனிநபர் உறவானது சமூகம் சார்ந்த உற வாகும். ஒரே ஆன்மாவிலிருந்து கிளை பிரியும் மானுட ஒருமைப் பாட்டு உறவு அது. அதிலிருந்துதான் 'ஆண்களும் பெண்களும்' கிளை பிரிந்து, 'ஜோடிகளாகவும்' சமூகங்களாகவும், சமுதாயங் களாகவும் மாறி முழுமை பெறுகிறார்கள். 'அன்பும் கிருபையும்' அவர்கள் அனைவரையும் பிணைக்கிறது.

நாமும் பிறரும் என்போர் மனிதர்களே. அவர்களே சமூகங் களாகவும் கோத்திரங்களாகவும் இணைந்து பல்வேறு மானிடக் குழுமங்களாக கிளை பிரிந்திருக்கின்றனர். அவர்கள் 'ஐக்கியத் துடன்' பன்மையை சாத்தியப்படுத்துகின்றனர். இதன் மூலம் அவர்களுக்கு மத்தியில் பரஸ்பரத் தொடர்பும் அறிமுகமும் ஒருமைப்பாடும் ஏற்படுகின்றன. ஒருமைப்பாடு என்பது பரஸ்பரத் தொடர்புக்கான முன் நிபந்தனையாகும். அதனால்தான் பரஸ்பரத் தொடர்பும் அறிமுகமும் ஒருமைப்பாடும் ஏற்படும் வகையில் முழுமொத்தமனித இனமும் குழுக்களாகவும் கோத்திரங்களாக வும் ஆற்றல்களாகவும் சக்திகளாகவும் வேறுபட்டிருக்கிறது. அல்-குர்ஆனிய நோக்கில் இந்த வேறுபாடு அல்லது பன்மைத்துவம் என்பது இனவாதமோ மேலாண்மையோ அன்று. மாறாக அது தனிமனிதனதும் சமூகத்தினதும் நிலைபேற்றுக்கு அவசியமான ஐக்கியமும் வளப்படுத்தல் சார்ந்த ஒருமைப்பாடும் ஆகும்.

நாமும் பிறரும் எவ்வளவுதான் வித்தியாசப்பட்ட போதும் மானிட அடிப்படையில் அனைவரும் சமமே. அஜமியை விட அறபிக்கோ, கறுப்பரை விட வெள்ளையருக்கோ (இறையச்ச மின்றி) சிறப்பில்லை. மனிதர்களது ஆற்றல்களும் சக்திகளும் வித்தியாசப்பட்டிருப்பது உண்மைதான். ஆனால் அது ஒருவர் மீது மற்றவர் மேலாண்மை செலுத்தவோ அத்துமீறவோ அன்று.

மானிட ஐக்கியத்தில் அவர்கள் பரஸ்பரம் உதவி செய்து கொள்வ தற்கும் ஒருமைப்படுவதற்குமே அந்த வித்தியாசம். ஏனெனில், அவர்களது இந்த ஐக்கியமே பிரபஞ்சத்தை வசப்படுத்தும் தேவை களைப் பூர்த்தி செய்யும் நாகரிகங்களையும் கலாசாரங்களையும் உற்பவிக்கும். அந்தவகையில், இவ்வித்தியாசம் ஒவ்வொரு தனி நபருக்கும் இன்றியமையாதது; அருளாக அமைவது. இது அல் லாமல் எந்த மனிதனுக்கும் தனியான எந்த இருப்பும் உலகில் கிடையாது.

மனித குல ஐக்கியம் மற்றும் சகோதரத்துவம் என்ற நோக்கில், 'நாமும் பிறரும்' என்ற உறவை -பகைமையிலும் வெறுப்பிலும் கூட- நீதியே ஆள வேண்டும். நீதி இல்லாவிட்டால் மானிடத் தொடர்புகளுக்கோ பிரதிநிதித்துவப் பொறுப்புக்கோ எவ்வித அர்த்தமும் இல்லாது போய்விடும்.

ஒரு முஸ்லிம் தனது வாழ்விலும் உறவுகளிலும் நீதியையும் சமநிலையையும் இலக்காகக் கொண்டு செயற்படா விட்டால், அவரது ஈமானும் இஸ்லாமும் போலி வாதங்களாகி விடும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் அவர் தன்னை மிக வினைமையுடன் மீள்பார்வை செய்து ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டும்.

அபூ தர் (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அல்லாஹ் பின் வருமாறு கூறுவதாக நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''எனது அடியார்களே, அநீதியிழைப்பதை என்மீது நான் 'ஹராம்' ஆக்கிக் கொண்டேன். அதனை உங்கள் மீதும் 'ஹராம்' ஆக்கியுள்ளேன். எனவே, உங்களுக்கிடையில் அநீதியிழைக்க வேண்டாம்''.

'நாமும் முஸ்லிமான பிறரும்' என்பது அடையாளமும் நம்பிக் கையும்நோக்கும் சார்ந்த சகோதரத்துவமாகும். மனித வாழ்விலும் முடிவிலும் அடிப்படையானது இத்தகைய சகோதரத்துவமே. இந்த வகையில், சமநிலையான முஸ்லிம் சகோதரத்துவம்தான் மிக கண்ணியமான மானிட சகோதரத்துவமாக அமைகிறது. ஏனெ னில், அகீதாவே ஆழமான மானிட ஆன்மீக உறவுமாகும். அல்-குர் ஆனிய அகில நோக்கில், 'நாமும் பிறரும்' என்பது வேற்றுமையில்

ஒற்றுமையையும், ஒற்றுமையில் வேற்றுமையையும் சுட்டுகிறது. சமநிலையான மானிட இருப்பை சாத்தியப்படுத்துவதில் ஏற்படும் படித்தரங்களைத் தவிர வேறெந்த வகையிலும் யாருக்கும் அங்கு சிறப்புக் கிடையாது. 'சமநிலையான மானிட இருப்பு' என்பது 'பித்றா'வையும், அதன் நோக்கையும், அதன் பொறுப்புக் கூறும் தன்மையையும், உலக வாழ்வில் அதன் பிரதிநிதித்துவப் பொறுப் பையும் குறித்து நிற்கிறது.

## அல்-குர்ஆனிய அகில நோக்கு என்பது உலக சமாதான நோக்கு

இறுதி மார்க்கமாகிய இஸ்லாம் மனித இனத்தின் உலகளாவிய அறிவியல் யுகத்துக்கு வழிகாட்டியாகவும் நன்மாராயமாகவும் வந்தது. நீதி, சகோதரத்துவம், அருள், அமைதி, வளப்படுத்தல் என்பவற்றுக்கான கண்ணோட்டம் அது. இதனால்தான் அல்-குர் ஆனிய அழைப்பு குறிப்பிட்டதோர் இனக் குழுமத்தையோ சமூகத்தையோ மையப்படுத்தியதாக இருக்கவில்லை. முழு மனித இனத்துக்கும் சர்வ உலகங்களுக்குமான அழைப்பாக அது அமைந் திருந்தது. ஏலவே மனித இனம் கடந்து வந்தநாகரிகக் கட்டங் களின் இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களின் தொனி அதில் இல்லை. புத்தகம், அறிவு, சிந்தனை, ஆழ்ந்த நோக்கு, பகுத்தறிவு, சான்று, திருப்தியோடு ஏற்கச் செய்தல், வழிகாட்டல், சகோதரத் துவம், நீதி, வளப்படுத்தல், சமாதானம் என்பவற்றின் அழைப்பு அது. இந்தவகையில், அல்-குர்ஆனிய நோக்கு அறிவியல் யுக மனிதனுக்கான அகில நோக்காக அமைந்தது. சீரான மனித இயல்பையும் மாறாத பிரபஞ்ச நியதிகளையும் கொண்டு மனித இனத்துக்கு அது வழிகாட்டியது. வளப்படுத்தல் சார்ந்த இலக்கு களை நோக்கியும், சமாதானம் மற்றும் பாதுகாப்புக்கான கட்ட மைப்பை நோக்கியும் மனித இனத்தை அது திசைப்படுத்தியது.

அந்தவகையில், வரலாற்றுக்கு முற்பட்ட இருள் மண்டிய அறி யாமை யுகத்தின் இறுகிய, இனவாத, குலவாத, சடவாதக் கண் ணோட்டங்களை அது கடந்து நின்றது. 'இஸ்லாத்தின்' அல்லது

சமாதானம் என பொருள்படும் 'ஸலாமின்' தூது பூகோள அறிவியல் கால கட்டத்தையும் மானிட ஒருமையையும் பிரதிபலிப்பதாக அமைந்தது. இன உணர்வுகள், குல- கோத்திரவாதப் பகைமைகள், அறிவுக்குப் பொருந்தாத மௌட்டீகச் சடங்குகள் என்பவற்றைக் கடந்ததாகவும் அது அமைந்தது. மற்றமைகளை ஓரங்கட்டுகின்ற இன, கோத்திர, குலவாதங்களுக்கு மறுகிடையாக, ஐக்கியத்துக்கும் ஆக்கபூர்வமான ஒருங்கிணைப்புக்குமான அடிப்படைகளை அது மானிடக் கட்டமைப்பினுள் துலக்கி வெளிப்படுத்தியது.

இன, குல, கோத்திரவாதங்களின் தொடக்கமும் தத்துவமும் முரண்பாட்டு முகங்களின் மீதே குவிமையம் கொண்டிருந்தன. முரண்பாட்டை அவை ஒதுக்கலுக்கும் மேலாண்மைக்குமான சாதனமாகப் பாவித்ததுடன், போராட்டம், பகை, பரஸ்பர அநீதி என்பவற்றின் தூண்டுகோலாகவும் கையாண்டன. சமூகங்கள், நாடுகள், இனங்கள் என்பவற்றுக்கிடையிலான மானிட உறவுகளில் தோன்றும் வேறுபாடுகளையும் பன்மைத்தன்மையையும் அவை போராட்டமாகவும் அநீதியாகவும் அத்துமீறலாகவும் மாற்றின. இப்பின்புலத்தில்தான் நவீன மனித சமூகம் காலனித்துவத்தின் அநியாயங்களையும் கொடூர உலகப் போர்களையும் சுவைத்தது. அதிகாரத்தை மட்டுமே நம்பும் வெறிபிடித்த அடக்குமுறை அரசுகளின் அழிவாயுதப் போட்டா போட்டி இன்று வரை மனித இனத்தை அச்சுறுத்திக் கொண்டிருப்பதும் இதனால்தான். ஆனால் இஸ்லாத்தின் அழைப்போ ஒற்றுமை, ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி, உறவு, அன்பு, கருணை, சமாதானம் என்பவற்றை நோக்கியே அமைந்திருக்கிறது.

ஆக அல்-குர்ஆனியக் கண்ணோட்டமே மனித இனத்தின் ஓர்மையையும், பன்மைத்துவ அர்த்தங்களையும், ஒருங்கிசைவையும் மனித ஐக்கியம் என்னும் சட்டகத்தினுள் எடுத்துக் காட்டிய ஏக கண்ணோட்டமும் தத்துவமும் ஆகும். அன்பு, உபகாரம், நீதி, அநீதியையும் அத்துமீறலையும் எல்லா நிலைகளிலும் எல்லாத் தரப்புகள் மீதும் தடைசெய்தல் என்பவற்றின் மூலமாக இதனை அது சாதித்தது.

சமூகங்களைக் கட்டியெழுப்புவதிலும் அவற்றுக்கிடையிலான உறவுகளிலும் இந்த அல்-குர்ஆனிய அகில நோக்கை முற்படுத்து வது முஸ்லிம் உம்மாவினதும் மனித சமூகத்தினதும் முக்கிய கடமையாகும். இதுவே அறிவியல் மயப்பட்ட, அகிலம் தழுவிய இக்கட்டத்தை வழிநடாத்துவதற்கான வழி. நீதியையும் சமாதா னத்தையும் கொண்ட நாகரிகத்தை நிலைபேறடையச் செய்வதற் கான வழியும் இதுவே. ஆனால், இது கோட்பாடு சார்ந்ததாக மாத்திரம் இருத்தல் போதாது. அறிவார்ந்ததாகவும், பயிற்றுவிப்பு மற்றும் மனப்பாங்கு மாற்றம் சார்ந்ததாகவும், நிறுவன அமைப் பாக்கம் சார்ந்ததாகவும் இது அமைய வேண்டும். இதன் மீதே மனித ஐக்கியம், ஒருங்கிசைவு, ஒத்துழைப்பு என்பவற்றை விசு வாசிக்கும் உலகளாவிய மானிட சமாதான ஒழுங்கு நிலைபெற முடியும். இந்நிலையிலேயே ‘பூமியை வசப்படுத்தும்’ பிரதிநிதித் துவப் பணியை மனித உலகில் செயற்றிறனுடன் மேற்கொள் வதும், நீதியையும் சமாதானத்தையும் அறிவார்ந்த அமைப்பில் நிலை நிறுத்துவதும் சாத்தியமாகும்.

சத்திய இஸ்லாத்தின் நாகரிகமே மனித இனத்தை சீர்திருத்த வும் வழிகாட்டவுமான மார்க்கமாகும். நவீன சடவாதத்தின் கோரப் பிடியிலிருந்தும் அநியாயங்களிலிருந்தும் மனித இனத்தை ஆத் மார்த்தமாக கடைத்தேற்றும் வழியும் அதுவே. இன்று அந்தச் சட வாதமோ தன் பேரழிவுக் கருவிகளால் மனித இனத்தின் இருப் பையே அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.

அறிவியல் அடிப்படை மீதும் பிரபஞ்ச நியதிகளை அனு சரித்தும் அமைந்திருந்த அல்-குர்ஆனிய அகில ஆன்மீக நாகரிக நோக்கானது இன்று மீண்டும் தூய்மைப்படுத்தப்பட வேண்டி யுள்ளது. மௌட்டீக -கோத்திர- இனவாதத் தாக்கங்களிலிருந்தும், இஸ்றாஈலிய்ய திரிபுகளிலிருந்தும், பௌராணிக ஐதீகங்களிலிருந் தும் அது தூய்மைப்படுத்தப்பட வேண்டும். அல்-குர்ஆனின் பால் மீளல், அதன் நோக்கங்களையும் உரையாடலையும் சரியாகப் புரிந்து கொள்ளல், அதன் முழு மொத்த நோக்கை கவனித்தல் என்பவற்றின் மூலமே இது சாத்தியமாகும். அப்போதுதான்

இக்கோட்பாடு மனித வாழ்வில் நிதர்சனமாகி, அதன் செல் நெறியைச் சீர்படுத்தும் வாழ்வின் அதியுயர் நோக்கங்களையும் இலக்குகளையும் சாதிக்க வழிகாட்டும்.

அல்-குர்ஆனிய அகில நோக்கையும் முழுமொத்த இஸ்லாமிய கலாசார நாகரிக ஒழுங்கையும் முஸ்லிம்கள் பேணி நடந்திருந் தால், உம்மாவின் மீதும் மனித சமூகத்தின் மீதும் இஸ்லாத்தின் தாக்கம் பன்மடங்காக இருந்திருக்கும். இன்று நாம் காண்பதை விடவும் பரந்துபட்டதாக இஸ்லாம் உலகின் நாலா புறங்களிலும் பரவியிருக்கும். முஸ்லிம்களை சிந்தனைக் குழப்பமோ சோர்வோ பீடித்திருக்காது. சீர்கேடு பரவக் காரணமாய் அமைந்த சர்வாதிகார நிறுவனங்களும் ஒழிக்கப்பட்டிருக்கும்.

இங்கு நாம் ஒரு புறத்தில் முஸ்லிமுக்கும் இஸ்லாத்துக்கும் இடையிலான வேறுபாட்டையும், மறுபுறத்தில் தஃவாவுக்கும் அரசுக்குமிடையிலான வேறுபாட்டையும் விளக்குவது அவசியம். அந்த வகையில், இஸ்லாம் என்பது மனிதனுக்கு வழிகாட்டவும், அகில நாகரிக நோக்கினூடாக அவனது இருப்பின் பொருள், நோக்கம், பிரதிநிதித்துவ ஆற்றல் என்பவற்றை உணர்த்தவும் வந்த இறுதித் தூதாகும்.

அல்-குர்ஆன் பூமியின் பிரதிநிதியாகப் படைக்கப்பட்ட மனி தனை நோக்கிப் பேசுகிறது. ஒவ்வொரு மனிதனும் தனது இய லுமைக்கும் நாட்ட சக்திக்கும் ஏற்பவே இஸ்லாத்திலிருந்தும் அதன் போதனைகளிலிருந்தும் எடுத்துக் கொள்கின்றான். முஸ் லிம்கள் என்போர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட மனிதர்கள். எனினும் நடத்தை சார்ந்த விடயத்தில் அவர்கள் தமது அறிவுக் கும் உணர்வுக்கும் நாட்ட சக்திக்கும் ஏற்ப நடந்துகொள்ள விடப் பட்டுள்ளனர். அந்த வகையில், அவர்களுக்கு மத்தியில் ஏனைய மனிதர்களைப் போலவே ஈமானியப் பலத்திலும் நடத்தையிலும் பேணுதலிலும் ஏற்றத் தாழ்வுகள் இருக்க முடியும். எனவே ஒரு முஸ்லிமின் நடத்தைக் கோலங்களுக்கு அவன் சார்ந்திருக்கும் நம்பிக்கையையும் மார்க்கத்தையும் பொறுப்பாக்குவது தவறாகும். ஒருவர் தனது நடத்தையில் மார்க்கத்தையும் நம்பிக்கையையும்

பேணி நடந்து கொள்கிறாரெனில், அவர் பின்பற்றும் மார்க்கத்தின் தாக்கமே அதற்குக் காரணம் என்பதில் ஐயமில்லை. அதேவேளை மார்க்கத்தையும் அதன் இலக்குகளையும் அடிப்படைகளையும் விட்டு அவர் பிறழ்வாராயின், அந்தப் பொறுப்பு அக்குறித்த முஸ்லிம் நபரையே முழுமையாகச் சாரும்.

இவ்வாறேநாம் தஃவா, அரசு ஆகிய இரண்டையும் குழப்பிக் கொள்ளாதிருப்பதும் அவசியம். ஏனெனில் தஃவா என்பது வழி காட்டல், கற்பித்தல், நெறிப்படுத்தல் என்பவற்றை இலக்காகக் கொண்டது. உள்ளத்தையும் மனச்சாட்சியையும் நோக்கி முன் வைக்கப்படும் அழைப்பு அது. ஆனால் அரசு அல்லது தேசம் என்பது மனித சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கான பல்வேறு முன்னேற்றகரமான பிரதிமைகளைக் கொண்ட மனித அரசியல் இருப்பாகும். அது ஏதோ ஒரு வகையில் மனித சமூகங்களோடும், அவற்றின் சமூக அரசியல் ஒழுங்குகளோடும், நிலங்களோடும், நலன்களோடும், உள்ளக ஏற்பாடுகளோடும், பிற சமூகங்கள் மற்றும் தேசங்களுடனான வெளியக ஏற்பாடுகளோடும்தொடர் புற்ற ஒன்று.

தேசமும் மானிட அரசியல் சமூகமும் தோன்றியது முதல் இன்று வரை அதன் உறவுகள் சமாதான நிலையில் இருந்து வந்தி ருக்கின்றன. அல்லது ஒப்பந்தங்களால் ஆளப்பட்டு வந்திருக் கின்றன. அல்லது முரண்பாடாகவும் மோதலாகவும் யுத்தமாகவும் இருந்து வந்திருக்கின்றன. இம்மூன்றாவது நிலையில், பலமே முடிவுகளைத் தீர்மானிக்கும் காரணியாக இருந்திருக்கிறது.

இஸ்லாமிய அகில நாகரிக நோக்கானது இத்தொடர்புகள் அனைத்தையும் நீதி, சமாதானம் எனும் அடிப்படைகளிலேயே மதிப்பீடு செய்கிறது. இக்கண்ணோட்டத்தின் படி, உள்ளக விவ காரங்களில் அடிப்படையானது நீதியும் பரஸ்பர உதவியுமே. தீர்மானம் எடுப்பதற்கும் சீர்திருத்தத்துக்குமான அதன் சாதனம் கலந்தாலோசனையும் உபதேசமுமே. உறவுகள் சீர்குலைந்து அநீதி தோன்றி விட்டால் அங்கு தீர்ப்புச் சொல்வது ஷரீஆவும் சட்ட முமே. அது முடியாத போது, தவறுகளைத் திருத்துவதற்கான

வழியாக சிவில் சாத்வீகப் போராட்டங்கள் அமையும். உரிமைகளை நிலை நாட்டும் விடயத்தில் பிறருடனான தொடர்பானது பொறுப்பாளர்களுக்கிடையிலான பேச்சுவார்த்தையின் அடிப்படையில் அமைந்திருக்கும். உரிமைகளைப் பெறுவதற்கு யுத்தம் புரிதல் தவிர்ந்த வேறு மார்க்கமேதும் இல்லாத பட்சத்தில் மாத்திரமே அத்தெரிவு முன்னிலை பெறும்.

மேற்குலகு இஸ்லாமிய உலகுடன் நெருங்கிப் பழகிஅதன் சமூகவியல் மற்றும் பௌதீகவியல் கலைகளை கற்கத் தொடங்கிய ஆரம்ப நாட்களில், அல்-குர்ஆனிய ஏகத்துவ நோக்கை ஏற்காது, பிரபஞ்ச நியதிகள் சார்ந்த அறிவியல் முறைமையை மாத்திரம் எடுத்துக் கொண்டமை ஒது துரதிஷ்டமே. இதுவே அங்கு இனத்துவேசமும் வன்முறையும் சமூக நோய்களும் பரவுவதற்கு காரணமாக அமைந்தது. இஸ்லாத்தின் மீதான மேற்குலகின் பகைமை மிகப் பழமையானது என்பதையும் இங்கு குறிப்பிடுதல் பொருந்தும்.கிறிஸ்தவ மதகுருமாரும் இஸ்லாம் பற்றிய அவர்களது புனைவுகளும் இப்பகைமை தோன்றக் காரணமாகின.

'கிலாபா றாஷிதா' என்னும் நேராட்சி யுகம் முடிவுக்குக் கொண்டுவரப் பட்டமையும் துரதிஷ்டமே. அந்த கிலாபத் நேராட்சியின் கருத்தாக்கங்களையும் பெறுமானங்களையும் தலைமைத்துவ மாதிரிகளையும் சீரிய நிறுவனங்களாக விருத்தி செய்யும் இயலுமையும் அதனோடு சேர்த்து அழிக்கப்பட்டு விட்டன. அத்தகைய நிறுவனங்கள் வளர்த்தெடுக்கப்பட்டிருந்தால் குறித்த கருத்தாக்கங்களதும் கொள்கைகளதும் தொடர்ச்சியான நிலைபேற்றை அவை உத்தரவாதப்படுத்தியிருக்கும். வரலாற்றுப் போக்கினையும் மானிட நாகரிகத்தையும் மாற்றியமைத்த அல்-குர்ஆனிய அகில நாகரிக நோக்கின் நிலைபேறும் அதன் மூலம் உத்தரவாதப்படுத்தப் பட்டிருக்கும்.

மேற்குலகும் நவீன மானிட நாகரிகமும் சமூக-பௌதீக அறிவியலின் கடிவாளத்தை இஸ்லாமிய நாகரிகத்திலிருந்தே பெற்றுக் கொண்டன. எனவே முஸ்லிம் உம்மா தனது சுயம் பற்றிய பிரக்ஞைக்குத் திரும்பி அகில நாகரிக நோக்கு தொடர்பாக அறிந்து

கொள்ளத் தொடங்கியிருக்கும் இக்கட்டத்தில், நிறுவன எண்ணக் கருவை கவனத்தில் எடுத்துக் கொள்வது அவசியம். அதன் மூல மாக நீதி, சுதந்திரம், சகோதரத்துவம், கலந்தாலோசனை, வளப் படுத்தல், சமாதானம் முதலியதனது பெறுமானங்களை ஸ்திரப் படுத்திக் கொள்வதும் அவசியம். ஏனெனில், இந்நிறுவன ஒழுங் குகள் இல்லாத போது சுயநல அதிகாரங்கள் மீண்டும் தலை தூக்கும். அடக்குமுறை, சீர்கேடு, வன்முறை, இயலாமை, அறி வீனம், எதேச்சாதிகாரம், செல்வத்தை ஏகபோகமாக அனுபவித்தல் என்பவற்றை நோக்கி உம்மாவை அவை தள்ளி விடும்.

அல்-குர்ஆனிய அகில நாகரிக நோக்கை வெளிக்கொணர்வதும், அதன் பரிமாணங்களைப் புரிந்துகொள்வதும், அதனடியாக சமூக நிறுவனங்களை உருவாக்குவதுமே முஸ்லிம் உம்மாவின் சீர்திருத் தத்திற்கான முதல் அடிப்படையாகும். மனித இனத்தின் அமைதி, வளம், நாகரிகம், கலாசாரம், நேர்வழி என்பவற்றுக்கும் அது இன்றியமையாதது.

இஸ்லாமிய நோக்கினதும் முறைமையினதும் அடிப்படைக் கோட்பாடுகளை முன்வைக்க முன்னர், வஹீயையும் அதன் (குர்ஆன், ஸுன்னா என்னும்) மூலாதாரங்களையும் புரிந்து கொள் வதில் கால -இடப் பரிமாணங்களின் முக்கியத்துவம் பற்றிக் கலந்துரையாடுவது அவசியம். அப்போதுதான் நிலையானது எது, மாறக்கூடியது எது என்ற குழப்ப நிலையை தவிர்க்க முடியும்.

## நிலையானதும் மாறக் கூடியதும்: காலம், இடம்.

மார்க்கத்தின் முதல் மூலாதாரமாகவும் மனித 'பித்றா'வை வழி காட்டி நெறிப்படுத்தக் கூடிய அடிப்படை மூலாதாரமாகவும் வஹீயே காணப்படுகின்றது. இறுதியானதும் உலகளாவியதுமான இஸ்லாமியத் தூதில் இம்மூலாதாரத்தை பிரதிநிதித்துவம் செய் வது அல்-குர்ஆனே. அந்த அல்-குர்ஆன் அல்லாஹ்வினால் அவ னது கண்ணியமிக்க தூதருக்கு அறிவிக்கப்பட்ட வார்த்தைகளா கும்.

அல்-குர்ஆன் ஓர் உலகளாவிய இறுதி இறைத்தூது என்ற வகையில் ஸ்திரத்தன்மை எனும் பண்பைக் கொண்டுள்ளது. அது இலக்குகளையும் பெறுமானங்களையும் கோட்பாடுகளையும் கொண்ட தூது என்பதே இதன் பொருளாகும். கால, இடப்பரி மாண மாற்றங்களின் போது அல்-குர்ஆனுக்கு இவை ஸ்திரத் தன்மை என்ற பண்பை வழங்குகின்றன. ஆனால் மனித வாழ்வு நிலைமைகளும் தகவலறிவும் சவால்களும் மாறக் கூடியவை; வளர்ச்சியடையக் கூடியவை. அந்தவகையில், இஸ்லாத்தின் பெறு மானங்களதும் கோட்பாடுகளதும் பிரயோக வடிவம் கால-இட யதார்த்தங்களுக்கேற்ப மாற்றமுறுவதாகவும் வளர்ச்சியடைவதாக வும் அமைவது அவசியம். இங்குதான் நபி(ஸல்) அவர்களது ஸுன்னா பல்வேறு மாதிரிகளை முன்வைத்து, இஸ்லாமியத் தூதின் இரண்டாவது மூலாதாரம் என்ற முக்கியத்துவத்தைப் பெறுகிறது. அல்-குர்ஆன் வெற்றுக் கோட்பாடுகளையும் கற்பனை களையும் கொண்ட நூலாக அன்றி, மனிதனுக்கு அறிவார்ந்த வழியைக் காட்டும் இறைத்தூது என்பதை ஸுன்னா உறுதிப் படுத்துகிறது.

ஸுன்னாவின் வசனங்களில் கால -இடக் காரணிகளின் தாக் கத்தை நாம் புரிந்து கொள்வதும் முக்கியமானது. ஏனெனில், இஸ்லாமியத் தூதின் மாறாக்கோட்பாடுகளை கால-இட மாற்றங் களின் மீது பிரயோகிப்பது தொடர்பான நபியவர்களது ஆழ்ந்த அறிவை அவ்வசனங்கள் வெளிப்படுத்துகின்றன. இங்கு நாம் அல்-குர்ஆனியக் கோட்பாடுகளையும் பெறுமானங்களையும் கால- இடமாற்றங்களின் மீது பிரயோகித்தலோடு தொடர்பான பாடங்களையும் படிப்பினைகளையும் கண்டுகொள்ளலாம்.

அல்-குர்ஆனுக்கு வழங்கப்பட்டிருக்கும் தெய்வீகப் பாதுகாப் புக்கான விளக்கம் இதுதான். நபி(ஸல்) அவர்கள் தமது சொல் லும் செயலும் ஏவல்களும் எழுதப்படக் கூடாது என்பதில் கவ னமாக இருந்ததற்கான காரணமும் இதுதான். ஏனெனில் அவை அல்-குர்ஆனைச் சேர்ந்தவையல்ல. இஸ்லாமிய ஷரீஆவின் நிலை யான மூலாதாரமாகிய அல்-குர்ஆனும் தனது நடைமுறைசார்

பிரயோகங்களும் ஒன்றோடொன்று கலந்து விடலாம் என்ற அச்சத்தின் காரணமாகவே நபி(ஸல்) அவர்கள் அவ்வாறு தடுத்திருந்தார்கள். அல்-குர்ஆனைப் பிரயோகிக்கும் போது கால-இட மாற்றங்களை கவனத்தில் கொள்வது அவசியம் என்பதை இது வலியுறுத்துகிறது.

ஆக -கண்ணியமான வேதத்தையும் பரிசுத்த ஸுன்னாவையும் நாம் புரிந்துகொள்வது அவசியம். பிரபஞ்ச மானிட இயல்புகளை அறிவதும், கால-இட யதார்த்தத்தை அதன் இயலுமைகளோடும் சவால்களோடும் தெரிந்து கொள்வதும் நமக்கு இன்றியமையாதவை. கல்வி முறைமைகளை மீளமைப்பதற்கு இவை அவசியமாக இருப்பதோடு, அல்-குர்ஆனிய அகில நாகரிக நோக்கிலிருந்து பயன் பெறுவதற்கும், அதன் நம்பிக்கையையும் சிந்தனையையும் புரிந்து கொள்வதற்கும் கூட இவை அவசியமானவை. அப்போதுதான் உம்மாவின் எழுச்சி முழுமை பெறும். நீதி, அறிவு, அகிலத்துவம், சமாதானம் என்பவற்றைக் கொண்ட நாகரிகத்தின் மீட்டுருவாக்கமும் முழுமை பெறும்.

## யதார்த்த லட்சியவாதம்

இப்போது நேரடியாக பதில் காண வேண்டிய கேள்வி இதுதான்: அல்-குர்ஆனிய அகில நாகரிக நோக்கும் முஹம்மதியத் தூதும் தத்துவஞானிகளின் எழுத்துகளையும் கற்பனைகளையும் போன்றதொரு மனோரதியக் கற்பனாவாதமா? அது மனிதனின் யதார்த்த வாழ்வோடு தொடர்பற்ற அறிவியல் சிற்றின்பமா? அல்லது அது மனித வாழ்வை உடன்பாடான வகையில் வழிப்படுத்தும் யதார்த்த பூர்வக் கண்ணோட்டமா? தனது ஆக்கபூர்வமான ஆன்மீக சக்தியால் அநியாயமும் தீமையும் நாசகாரத் தன்மையும் மிருக குணமும் கொண்ட சடவாதத்தை மிகைக்கும் ஆற்றல் அதற்கு உள்ளதா?

முதற்பார்வையில் இக்கேள்விக்கு சாதக பதிலொன்றை வழங்குவது கடினமாகவே தோன்றும். குறிப்பாக இஸ்லாமிய உம்மா இன்று அனுபவித்து வரும் பிரிவினை, உள்முரண்பாடு, அநீதி,

சுயநலம், வறுமை, அறியாமை என்பவற்றின் பகைப்புலத்தில் இது கடினமானதுதான். மட்டுமன்றி, அதன் கட்டமைப்பிலும் ஒழுங்குகளிலும் அகில நாகரிகத் தொடர்புகளிலும் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி இங்கு கவனிப்புக்குரியது. அல்-குர்ஆனிய அகில நாகரிக நோக்குக்கும் முஹம்மதியத் தூதின் வழிகாட்டலுக்கும் எதிர்த் திசையாக இவ்வீழ்ச்சி சென்றிருக்கிறது.

இவ்வினாவுக்கு ஆரோக்கியமான பதிலொன்றை அளிப்பதற்கு முன்னர் சில அடிப்படை உண்மைகளை நாம் மனம் கொள்வது அவசியம்.

முதலாவது உண்மை: மனித இயல்பு வெறுக்கக்கூடிய எதையும் அல்-குர்ஆனிய அகில நோக்கு முன்வைக்கவில்லை. அக்கண் ணோட்டத்தினூடாக பூமியில் நாகரிகமொன்று கட்டியெழுப்பப் பட்டமையே மனித வரலாறு கண்ட மிகப் பெறுமதி வாய்ந்த வெற்றியாகும்.

இரண்டாவது உண்மை: அல்-குர்ஆனிய நோக்கையும் அதன் கால-இடப் பரிமாணங்களையும் நடைமுறைப்படுத்திக் காட்டிய மிகச் சிறந்த மாதிரி நபி(ஸல்) அவர்களது காலமாகும். அந்த வகையில், அல்-குர்ஆனிய அகில நோக்கு என்பது மனித யதார்த் தத்தில் நடைமுறைப்படுத்த முடியாத கற்பனாவாதக் கோட் பாடன்று. அல்-குர்ஆனிய அகில நோக்கின் பெறுமானங்களையும் கோட்பாடுகளையும் மனித வாழ்வில் தீட்சண்யத்துடன் பிரயோ கித்தமையே இங்கு நபி (ஸல்) அவர்கள் வகித்த பாத்திரமாகும். அக்கண்ணோட்டத்தின் யதார்த்தத் தன்மையை மனிதர்கள் கண்டு கொள்ளும் வகையில் இப்பணியை அன்னார் செய்து முடித்தார் கள். மனிதனுக்குள் மறைந்திருக்கும் ஆன்மீக நாகரிகக் கட்டு மானம், சீர்திருத்தம், நன்மை என்பவை சார்ந்த ஆற்றல்களை மனித வாழ்வில் சாத்தியப்படுத்துவதற்கான இயலுமையை இதன் மூலம் அன்னார் வெளிப்படுத்தினார்கள்.

மூன்றாவது உண்மை: நன்மை மற்றும் சீர்திருத்தத்தின் பெறு மானங்களையும், நாகரிக கட்டுமானக் கோட்பாடுகளையும்

*யதார்த்த வாழ்வில்பிரயோகிக்கும் விடயத்தில் மனிதர்களுக்கிடை யிலும் சமுதாயங்களுக்கிடையிலும் வித்தியாசம் உண்டு.*

*அந்தவகையில், நன்மையும் நீதியும் நலிவடைந்து காணப் படும் சமூகங்கள் தம்மையும் தமது மானிட நாகரிகத்தையும் சீர்திருத்திக் கொள்ளுதல் தொடர்பாக நிராசை அடைய வேண்டிய தில்லை. அந்நிலைக்கு இட்டுச் சென்ற காரணிகளுக்கே அவர்கள் பரிகாரம் தேட வேண்டும். அதுவன்றி, இஸ்லாமும் அதன் அகில நாகரிக நோக்கும் ஒரு கற்பனா வாதமே என்ற உள்நோக்கம் கொண்ட எந்த அறிவீனமான கூற்றுக்கும் அவர்கள் செவிசாய்க்கத் தேவையில்லை. ஏனெனில், நடைமுறைக்கு ஒவ்வாத கற்பனா வாதத்துக்கும் நடைமுறைச் சாத்தியமான இலட்சியவாதத்துக்கும் இடையில் வித்தியாசம் உள்ளது. இலட்சியவாதம் இல்லாவிடின் வீழ்ச்சியும் சீர்கேடும் விலங்குத்தனமான சடவாதமுமே மேலோங் கும். இந்நிலையில் ''அவர்கள் விலங்குகளைப் போன்றவர்கள்; இல்லை, அவற்றை விடவும் மோசமானவர்கள்''. (ஸூறா அஃறாப்:179)*

*அதேவேளை மனித ஆத்மாவின் பயணத்தை திசைப்படுத்தும் முனைவின் போதுகாலம்-இடம் சார்ந்த அதன் தேவைகளையும் அபிலாஷைகளையும் பொருட்படுத்தாத இலட்சியவாதத்துக்கும் பெறுமானம் இல்லை. நடைமுறைச் சாத்தியமான இலட்சிய வாதம்தான் அத்துமீறலும் அநீதியும் கொண்ட மிருக நிலைச் சட வாதத்தின் மாய இருளுக்குள் மனித இனம் மேலும் ஆழ்ந்து விடாமல் காப்பாற்றுகின்ற மீட்புக் கயிறாக உள்ளது.*

*அல்-குர்ஆனிய அகில நாகரிக நோக்கின் இலட்சியவாத இயல்பு பற்றிய வினாவில் நாம் பதிலளிக்க வேண்டிய இன்னொரு பாகமும் உள்ளது. ஒரு முஸ்லிம் இந்த அல்-குர்ஆனிய இலட்சிய வாதத்தை சாத்தியப்படுத்த வேண்டுமாயின், தனது அனைத்து வாழ்வியல் செயற்பாடுகளிலும் இப்பெறுமானங்களையும் கோட் பாடுகளையும் முழுமையாக கடைப்பிடிக்க வேண்டுமா? அதாவது ஒருவர் முஸ்லிமாக இருக்க வேண்டுமானால், எல்லா விதமான தவறுகளையும் விட்டு தூய்மையானவராக இருக்க வேண்டுமா?*

நாம் முன்னர் சுட்டிக் காட்டியது போன்று, அச்சமூட்டும் தொனியை நோக்கிப் பிசகிய இஸ்லாத்தின் அழைப்பு மொழி இவ்வாறானதொரு தோற்றப்பாட்டையே ஏற்படுத்தி வைத்திருக் கிறது. அல்-குர்ஆனிய நோக்கு என்பது உம்மாவின் மானிட -கலாசார யதார்த்தத்தில் நடைமுறைக்குப் பொருத்தமற்றது எனும் அபிப்பிராயத்தையும் அது தோற்றுவித்துள்ளது. மனித ஆத்மாவில் நல்ல சக்திகளுக்கும் தீய சக்திகளுக்கும் இடையில் நடக்கும் உளவியல் போராட்டம் ஒரு பிரபஞ்ச யதார்த்தம் என்ற வகையில், தவறும் பிசகும் இடம்பெறுதல் இயல்பானதாகும். பாவங்களி லிருந்து பாதுகாக்கப்பட்ட பண்பு இறை தூதர்களுக்கு மட்டுமே உரியது. அதுவும் அவர்களது தூதுடன் தொர்புற்ற விடயங்களில் மாத்திரமே பிரயோகமாகும். ஏனெனில் ''ஆதமின் சந்ததிகள் அனைவரும் தவறு செய்யக் கூடியவர்கள். தவறு செய்பவர்களில் சிறந்தவர் மன்னிப்புக் கேட்பவரே''. அல்-குர்ஆனியக் கண் ணோட்டம் இக்கட்டமைப்பையும் போராட்டத்தையும் உறுதி செய்கிறது. இப்போராட்டத்தை எதிர்கொள்வது எவ்வாறு என்ப தையும்,மனித உள்ளத்தில் நன்மையின் சக்திகளை வெற்றி பெறச் செய்வதற்கான வழிகள் என்ன என்பதையும் அது காட்டித் தருகின்றது.

ஆக- மனித ஆத்மாவில் நல்ல சக்திகளுக்கும் தீய சக்திகளுக் கும் இடையில் நடக்கும் உளவியல் போராட்டம் என்பது ஓர் அகில யதார்த்தமாகும். நன்மையும்விழுமியமும் வெற்றி பெற வேண்டும் என்ற வேட்கைமனித இயல்பு. அவ்வாறே தவறு நேர்வதும் பிழை ஏற்படுவதும் கூட மனித யதார்த்தம்தான். அல்-குர்ஆனிய நோக்கில் இதில் அவநம்பிக்கை தோன்ற இட மில்லை. இந்நிலைக்கான நிவாரணம் மனித உள்ளத்தில் காணப் படும் நன்மையின் சக்திகளைப் பலப்படுத்துவதே. நம்பிக்கை யிழக்காதிருப்பதும் சீர்திருத்தத்தில் ஒரு பகுதிதான். உள்ளத்திற்கு ''அதன் நன்மையையும் தீமையையும்'' உணர்த்திய அல்லாஹ் அருளாளன்; அன்பாளன்; இரக்கம் நிறைந்தவன்; தாராளத்தன்மை கொண்டவன். தவறுகள் மீது பிடிவாதம் காட்டாமல் மீண்டு

வருவோரை அவன் ஏற்றுக் கொள்கிறான். அந்த வகையில் அல்-குர்ஆனிய நோக்கு என்பது நன்மையையும் நேர்வழியையும் எடுத்துக் காட்டி அதற்கான பாதைகளை இலகுபடுத்திக் கொடுக் கும் சக்தியாக நிற்கிறது.

மனித உள்ளத்தில் நன்மை, சீர்திருத்தம், வளப்படுத்தல் என் பவை சார்ந்த ஆற்றல்கள் காணப்படுகின்றன. அவற்றை விருத்தி செய்து திசைப்படுத்தும் அல்-குர்ஆனிய அகில நாகரிக நோக்கு என்பது வேறு; அந்நோக்கையும் அதன் பெறுமானங்களையும் கோட்பாடுகளையும் பிரதிபலிக்கின்ற மனித நடத்தை என்பது வேறு. இவ்விரண்டையும் நாம் பிரித்தறிவது அவசியம். ஏனெ னில் மனிதனிடத்தில் இயல்பாகவே உள்ளார்ந்த போராட்ட மொன்று நிகழ்ந்து கொண்டிருக்கிறது. பிறழ்வுகளுக்கு உட்படுத் தக் கூடிய சக்திகள் அவனைச் சூழ்ந்திருக்கின்றன. இதற்கான பரிகாரம் தனிநபர்களையும் சமுதாயங்களையும் நாகரிகங்களை யும் அழிவுக்கு இட்டுச் சென்ற நிகழ்வுகளையும் சூழ்நிலைகளை யும் அறிவதும், சீர்திருத்தச் செயற்பாட்டினால் அவற்றை எதிர் கொள்வதுமே.

இத்தகைய சீர்திருத்தத்தையும் மாற்றத்தையும் கொண்டு வர வும், தவறுகளது தாக்கத்தை கட்டுப்படுத்தவும் முற்படுகின்ற சமுதாயங்களிடம் தமது கலாச்சாரம், உரையாடல் பாணி, பயிற்று விப்பு முறை என்பவை தொடர்பாக ஆழமான, விமர்சன ரீதியான பார்வை இருப்பது அவசியம். அப்போதுதான் அவற்றின் நோக்கு சரியாக அமையும்; கல்விமுறை ஒழுங்கு பெறும்; சிந்தனை சீர டையும்; மனப்பாங்கு உயர்வடையும். தனிநபர்களதும் சமூகங் களதும் நலன்களையும் தேவைகளையும் நிறைவேற்றும் போது கூட நன்மையையும் சரியானதையும் தேடுவோராக சமூகத்தின் பெரும்பான்மையினர் அப்போதுதான் மாற்றம் பெறுவர்; தவறு களும் பிழைகளும் சமூகம் வெறுக்கின்ற விதிவிலக்கான அம்ச மாக மாறும்; மனம் அவற்றில் பிடிவாதமாக நிலைத்திருக்காமல் வெறுத்து, நன்மையை நோக்கித் திரும்பி வரும்.

உம்மாவின் இன்றைய நிலை எவ்வாறாக இருப்பினும், உம்மாவின் சிந்தனையாளர்களும் கற்றறிவாளர்களும் சீர்திருத்த வாதிகளும் அதன் கலாசாரம், சிந்தனா முறைமை, பெற்றோரிய பயிற்றுவிப்பு, வளவாளர் உருவாக்கம், குடும்பம் முதல் பாட சாலை உள்ளிட்ட நிறுவனக் கட்டுமானம் என்பவற்றிலுள்ள குறைபாடுகளை இனம் கண்டு நிவாரணம் அளிப்பதில் தமது பணியை சரியாக மேற்கொண்டிருக்க வேண்டும். அவ்வாறு செய்திருந்தால், உம்மாவை அதன் ஆரோக்கிய நிலைக்கும் நாகரிக வகிபாத்திரத்துக்கும் மீட்டுக் கொண்டு வரும் பணி இவ்வளவு மயக்கமானதாகவோ கடினமானதாகவோ இருந்திருக்காது. மட்டு மன்றி, அல்-குர்ஆனிய அகில நாகரிகநோக்கே உம்மாவின் முழு மொத்த கண்ணோட்டமாகவும் வாழ்க்கை முறையாகவும் அப் போது மாறியிருக்கும்.

நாம் நமது வாழ்வை கட்டியெழுப்பும் போதும், அதன் தடை களை கடக்கும் போதும் இஸ்லாம் என்பது சமநிலையானதொரு மானிடநோக்கு என்பதை மனங்கொள்ளல் வேண்டும். நமது மீட்புப் படகாகவும், பாதுகாப்பான திசை காட்டியாகவும் அதுவே உள்ளது. அபாயங்களிலிருந்து கடைத்தேற்றி பாதுகாப்பாக நம்மைக் கரைசேர்க்க வல்லதும் அதுவே.

ஆக- இஸ்லாம் என்பது காட்டுமிராண்டித் தனமும் மேலாதிக்க வெறியும் கொண்ட இனவாதம் அன்று; துறவறமும் இழிவும் பௌராணிகத் தன்மையும் கொண்ட கற்பனையுமன்று; மிருகத் தனமும் கேளிக்கையும் வர்க்க இழுபறியும் கொண்ட சடவாதமும் அன்று. இஸ்லாம் என்பது சமநிலைப் பண்பும் ஆன்மீகமும் கொண்டதொரு வாழ்வியல் யதார்த்தமாகும்.

# அல்-குர்ஆனிய அகிலநோக்கின் அடிப்படைக் கோட்பாடுகள்

அல்-குர்ஆனிய அகில நோக்கின் முழுமொத்த அம்சங்களையும் பிரபஞ்ச -நாகரிகப் பரிமாணங்களையும் நன்கு புரிந்துகொண்டால் மட்டுமே அதன் அடிப்படைக் கோட்பாடுகளையும் பெறுமானங்களையும் சரிவர கிரகித்துக்கொள்ள முடியும். ஏனெனில் இக்கோட்பாடுகளும் பெறுமானங்களும்தான் அந்நோக்கை ஸ்தூலப்படுத்துவதற்கு அவசியமான தொடக்கப் புள்ளிகளாகும். முஸ்லிம் உம்மாவின் சிந்தனா முறையை நியமப்படுத்தும் கருவிகளும் அவைதான். இக்கருவிகள் முஸ்லிம் மனிதனை உயிர்ப்புள்ள யதார்த்தமாக மாற்றுவதோடு சமூகத்தின் நாகரிகப் பயணத்தையும் திசைப்படுத்துகின்றன. செயற்பாடு, வினைத்திறன், வளர்ச்சி, முன்னேற்றம் என்பவற்றுக்கான சக்தியையும் நாட்டத்தையும் உம்மாவுக்கு அவை வழங்குகின்றன. மாறும் சூழ்நிலைகள், இயலுமைகள், சவால்கள், அறிவியல் முன்னேற்றம் என்பவற்றுக்கு ஏற்ற வகையில் முழுமொத்த (மகாஸித்) இலக்குகளை சாத்தியப்படுத்த அவை உதவுவதோடு, அவ்விலக்குகளைச் சாதிக்கும் வழிமுறைகளில் புத்தாக்கத்தை ஏற்படுத்தவும் துணைபுரிகின்றன.

இனி, இக்கோட்பாடுகளை சற்று விரிவாக கவனிப்போம்.

### *1. ஏகத்துவம் (தவ்ஹீத்).*

இஸ்லாமிய அகில நோக்கின் அடிப்படைக் கோட்பாடு ஏகத்துவமாகும். மனிதன் தனது சுயத்தை ஆரம்பமாகவும் முடிவாகவும் புரிந்துகொள்ளும் வகையில் அவனது ஆன்மீகப் பரிமாணத்தை சமநிலையோடு விளக்குகின்ற அகிலம் தழுவிய கோட்பாடு இந்த ஏகத்துவமே. வாழ்வையும் உலகையும் அவற்றுக்கு அப்பாற்பட்ட விடயங்களையும் விளங்கிக் கொள்வதற்கான மானிடத் தர்க்கத்தின் எல்லையாகவும் அது உள்ளது. அல்-குர்ஆன் இதனை பின்வருமாறு கூறுகின்றது: ‘‘அல்லாஹ்வைத் தவிர வேறு படைப்பாளன் இருக்கின்றானா? அவனே வானம், பூமியிலிருந்து

உங்களுக்கு வாழ்வாதாரம் அளிக்கின்றான். அவனைத் தவிர வேறு இறைவன் கிடையாது''. (ஸூறா பாதிர்: 13) ''உமக்கு முன்னர் நாம் அனுப்பிய தூதர்கள் அனைவருக்கும் என்னைத் தவிர வேறு இறைவன் கிடையாது எனவும், என்னையே வணங்குமாறும் வஹீ அறிவித்தோம்''.

படைப்பாளனின் ஒருமை, ஆற்றல், தனித்தன்மை, பூரணத் துவம், அற்புதமான ஒருங்கிசைந்த படைப்பு என்பன எவ்வாறு படைப்புக்கள் ஏக காலத்தில் ஒருமைத் தன்மையையும் பன்மைத் தன்மையையும் ஒரு சேரக் கொண்டிருக்கின்றன என்பதற்கு விளக்கமாக அமைகின்றன.

பிரபஞ்ச இயல்பும் அதன் ஒருங்கிசைந்த ஒழுங்கும் படைப் பாளனது ஒருமைத் தன்மையையும் ஆற்றலையும் வலியுறுத்தி நிற்கின்றன. அவ்வாறே பிரபஞ்சத்தின் அற்புதத் தன்மையும் அதன் செய் நேர்த்தியும் ஒழுங்கும் படைப்புகளின் காரண அடிப் படையிலான ஒருமைத் தன்மையை வற்புறுத்துகின்றன.

### 2. பிரதிநிதித்துவம்

''பூமியில் எனது பிரதிநிதியைப் படைக்கப் போகின்றேன் என உமது இறைவன் வானவர்களிடம் கூறிய தருணத்தை நினைத்துப் பாருங்கள்'' (ஸூறா அல்-பகறா: 30) என அல்-குர்ஆன் பிரஸ் தாபிக்கிறது. இப்பிரதிநிதித்துவக் கோட்பாடு மனித இயல்புடன் எந்த வகையிலும் தொடர்புறாத குர்ஆனியத் திணிப்பன்று. மாறாக, அது ஏனைய படைப்புக்களை விட்டும் மனிதனை சிறப் பிக்கும் வகையில் தனிநபர்களாகவும் சமூகங்களாகவும் நிற்கும் மனித இனத்துக்கு அல்லாஹ்வினால் வழங்கப்பட்டுள்ள ஆற்ற லாகும். மனிதன் தனது உலகத்தில் செயற்படவும், தன் தேவை களை நிறைவேற்றிக் கொள்வதற்காக பிரபஞ்சத்தை வசப்படுத்த வும் அந்த ஆற்றல் உதவுகிறது. தனது பார்வைகள், தெரிவுகள், பிரபஞ்சம் சார்ந்த நோக்குகள், கொள்கைகள், பெறுமானங்கள் என்பவற்றை ஸ்தூலப்படுத்தவும் அந்த ஆற்றல் அவனுக்கு உதவு கிறது. ஏனெனில் சமநிலையான பெறுமானங்களையும் கோட்பாடு

களையும் ஸ்தூலப்படுத்தாத சடப்பொருளுக்கு எந்தப் பெறுமான மும் கிடையாது. அவ்வாறே சடப்பொருளின் மீது ஸ்தூலப்படுத் தப்படாத பெறுமானங்களுக்கும் கோட்பாடுகளுக்கும் கூட பெறு மானம் கிடையாது.

இவ்வாறாக பிரதிநிதித்துவக் கோட்பாடானது அது சுமந்துள்ள செயற்பாட்டுச் சுதந்திரத்தினாலும்  தெரிவு சார்ந்த பொறுப்பினா லும் மனித வாழ்வின் கருவாக அமைந்துள்ளது. நல்ல செயற் பாடுகள், புத்தாக்கம், வளப்படுத்தல் என்பவை சார்ந்த இலக் காகவும் அது உள்ளது.

### 3. நீதியும் நடுநிலையும்

மனிதனின் அனைத்து வாழ்வியல் நடவடிக்கைகளிலும் அநீதிக்கு எதிர்நிலை நீதியாகும். கருத்தியல் ரீதியாகவும், சட ரீதியாகவும், சமூக-பொருளாதார-அரசியல் ரீதியாகவும் சீரான மனித செயற்பாடுகளின் உட்கருவாக நீதி உள்ளது. நீதியும் நடுநிலையும் அற்றுப் போகும் போது மானிட இருப்பினதும் பிரதிநிதித்துவ செயற்பாட்டினதும் அனைத்துப் பரிமாணங்களும் பொருளற்றவையாக மாறிவிடும். நீதிதான் மனித செயற்பாட் டுக்கு சமநிலையான உள்ளார்த்தத்தை வழங்குகின்றது. அதன் இலக்கையும் விழுமியப்பண்பையும் நிதர்சனப்படுத்துகின்றது. சீரான 'பித்றா'வை ஸ்தூலப்படுகின்றது. இந்த வகையில்தான் மனிதனுக்கு வழங்கப்பட்ட முதல் கட்டளையாக நீதி அமைந்தது. அந்த நீதியைக் கொண்டே அல்லாஹ் தனது உயர்ந்த மெய்மையை அநீதியை விட்டும் தூய்மைப்படுத்தி இருக்கிறான். மனிதன் தனது நெறிபிறழ்வினாலும், நீதியாளனாகிய அல்லாஹ்வைத் தவிர்த்து வேறு சக்திகளுக்கு அடிமைப்படுவதனாலும் தனக்குத்தானே அநீதியிழைத்துக் கொள்கிறான்.

அல்-குர்ஆன் கூறுகின்றது: ''நிச்சயமாக அல்லாஹ் நீதி வழங்கு மாறும், உபகாரம் புரியுமாறும், உறவினர்களுக்கு ஈந்து வாழு மாறும் கட்டைளையிடுகின்றான். மேலும், மானக்கேடானதிலிருந் தும் பாவத்திலிருந்தும் வரம்பு மீறுவதிலிருந்தும் தடுக்கிறான்.

*நீங்கள் நல்லுணர்வு பெற வேண்டும் என்பதற்காக இவ்வாறு அவன் உபதேசிக்கின்றான்''. (ஸூறா நஹ்ல்: 90) ''அல்லாஹ் அவர்களுக்கு அநீதியிழைக்கவில்லை. மாறாக, தமக்குத்தாமே அவர்கள் அநீதியிழைத்துக் கொண்டார்கள்''. (ஸூறா தௌபா: 70) ''உலகத்தாருக்கு அநீதியிழைப்பதை அல்லாஹ் விரும்புவ தில்லை''. (ஸூறா ஆல இம்ரான்: 108)*

*நபி(ஸல்) அவர்கள் கூறியதாக ஜாபிர் பின் அப்துல்லாஹ் (றழி) பின்வருமாறு அறிவிக்கிறார்: ''அநீதியை அஞ்சிக் கொள் ளுங்கள்; நிச்சயமாக அநீதி மறுமை நாளின் இருள்களாக வரும். கஞ்சத்தனத்தைப் பயந்து கொள்ளுங்கள்; அதுதான் உங்களுக்கு முன்பிருந்தவர்களை அழித்தது. இரத்தத்தை ஓடச் செய்யவும், தடை செய்யப்பட்டவற்றை ஆகுமாக்கிக் கொள்ளவும் அது அவர் களைத் தூண்டியது''.*

*அப்துல்லாஹ் பின் உமர்(றழி) பின்வருமாறு அறிவிக்கிறார்: ''ஒரு முஸ்லிம் அடுத்த முஸ்லிமின் சகோதரனாவான். அவன் அவனுக்கு அநீதியிழைக்கவோ அவனைக் கைவிடவோ மாட் டான்'' என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

### *4. சுதந்திரம்.*

*ஏனைய படைப்பினங்களை விட மனிதன் உயர் அந்தஸ் துடையவன். பிரதிநிதித்துவ ஆற்றல்கள் கொண்டவன். இந்த ஆற்றல்கள் அவனுக்கு கண்ணியத்தையும் சுதந்திரமாகச் செயற் படும் உரிமையையும் பெற்றுக் கொடுக்கும் அதேவேளை, பிரதிநிதித்துவப் பொறுப்பை அவன் மீது சுமத்துகின்றன.*

*இந்த வகையில், தனது இயலுமைக்குள் தனது விருப்பையும் நாட்டத்தையும் வெளிப்படுத்தும் உரிமையை மனிதன் பெறு கிறான்: ''எந்த ஆன்மாவையும் அதன் சக்திக்கு அப்பால் அல் லாஹ் நிர்ப்பந்திப்பதில்லை''. (ஸூறா அல்-பகரா: 286) ''அல்லாஹ் எந்த ஆன்மாவையும் தான் அதற்கு வழங்கியதற்கு அப்பால் நிர்ப்பந்திப்பதில்லை''. (ஸூறா தலாக்: 07)*

சுதந்திரம் என்பது இருவகை என்ற தெளிவு இங்கு அவசியம்.

***முதல் வகை:*** மனச்சாட்சி சார்ந்த தனிப்பட்ட சுதந்திரம். மனிதனது தனிப்பட்ட நம்பிக்கை மற்றும் அகில நோக்கு தொடர்பான அபிப்பிராயங்களை இது குறிக்கிறது. இதில் எவரும் எவர் மீதும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களையோ கண்ணோட்டங்களையோ திணிக்க முடியாது. உபதேசம் அல்லது அழைப்பு தவிர்ந்த வேறு வகைகளில் இதில் எவரும் குறுக்கீடு செய்ய முடியாது.

***இரண்டாவது வகை:*** சமூகவியல் துறை, மனிதத் தொடர்புகள், நலன் பரிமாற்றம் என்பவை தொடர்பான சுதந்திரம். சமூக அங்கத்தவர்களுக்கு மத்தியிலான கலந்தாலோசனையின் அடிப்படையிலும் உடன்பாட்டின் அடிப்படையிலும் இதன் வரையறைகள் வகுக்கப்பட்டிருக்கும். இதன்படி, சமூகத்திலுள்ள எந்த உறுப்பினரும் தனது சீரிய இலக்குகளை எந்தவிதத் தடையுமின்றி நிறைவேற்றிக் கொள்ள முடியும். ஆயினும் இச்சுதந்திரம் பிறரது அல்லது சமூகத்தினது நலன்களுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதாக அமைந்துவிடக் கூடாது. தனிப்பட்ட சர்வாதிகார நலன்களைப் பிரதிபலிப்பதாகவோ, சமூக மட்டக் கலந்துரையாடல் அற்றதாகவோ இருக்கவும் கூடாது. அவ்வாறு இருக்குமாயின் அது சமூகத்தை சீர்கேட்டின் பாலும் அடக்குமுறையின் பாலும் தள்ளிவிடும்.

உம்மாவை மீளக் கட்டமைத்து மனித நாகரிகத்தை திசைப்படுத்த வேண்டிய அதிமுக்கியமான இக்கட்டத்தில் ஒரு விடயத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது தனிமனிதனுக்கு வெறுமனே அவன் தனிமனிதன் என்ற வகையில் எந்த இருப்பும் கிடையாது. மனிதன் என்பவன் அடிப்படையில் தனது படைப் பினாலும் 'பித்றா' வினாலும் சமூகம் சார்ந்தவன். சமூகம் இன்றி அவனுக்கு சுயமோ இருப்போ இல்லை. சமூகம் என்பது அதன் இருப்பினாலும் இயல்பினாலும் தனிநபரின் இருப்பிடமாகவும் இயங்கு தளமாகவும் சுதந்திரத்துக்கான சட்டகமாகவும் காணப்படுகின்றது.

அந்த வகையில் சமூகமே இறுதியில் மற்றமை களுடனான தனிநபர் தொடர்புக்கு அவசியமான நியமங்களை வரையறை செய்ய வேண்டும். இங்கு தனிநபர் உரிமைக்கும், சமூகத்தின் உரிமை, நலன்கள், நிலைபேறு என்பவற்றுக்கும் மத்தியில் சமநிலை பேணப்படுவது அவசியம். நலன்களை ஏற்படுத்தல், தீங்குகளைத் தவிர்த்தல், அடக்குமுறையை தடைசெய்தல் என்பவற்றைச் சாத்தியப்படுத்துகின்ற கலந்தாலோசனை அடிப் படையிலான வழிமுறை ஒன்றினூடாகவே இது சாத்தியமாகும்.

**5. பொறுப்பேற்பு.**

மனிதன் ஏகத்துவ இயல்பும் ஆன்மீகப் பண்பும் கொண்ட சீரான, சுயாதீனமான 'பித்றா' உடையவன். அறிவார்ந்த பிரதி நிதித்துவ ஆற்றல்கள் அவனிடம் உண்டு. தனது சீரான 'பித்றா' மூலம் பிரபஞ்சத்தின் நோக்கத்தை அவன் தெரிந்து கொள்கிறான். இந்த அனைத்தின் மூலமாக -தனது இயலுமைகளதும் தெரிவு களதும் எல்லையில்- தனக்கென தீர்மானிக்கும் சுதந்திரம் ஒன்று உள்ளதை அவன் புரிந்துகொள்கிறான். இந்த தெரிவுகளதும் தீர்மானங்களதும் பொறுப்பு அவனதுதோளின் மீதே விழுகிறது. அவை நன்மையெனில் அவனுக்கு நன்மை கிட்டும்; தீமை யெனில் தீமை கிட்டும்.

''இன்றைய தினம் எந்தவொரு ஆன்மாவுக்கும் அநீதியிழைக் கப்பட மாட்டாது. நீங்கள் செய்து கொண்டிருந்ததற்கான கூலியே வழங்கப்படும்''. *(ஸூறா யாசீன்: 54)*

**6. இலக்கு.**

மனிதன் ஏகத்துவ இயல்பும் பிரதிநிதித்துவ அந்தஸ்தும் கொண்டவன். ஏனைய படைப்புகளிலிருந்து அவனை வேறாக்கி கண்ணியப்படுத்தக் கூடிய அறிவு சார் வல்லமைகளை அல்லாஹ் அவனுக்கு வழங்கியுள்ளான். தன்னைச் சூழவுள்ள பிரபஞ்சத்தின் அற்புதத் தன்மையை காணும் அவன், ஆன்மீகப் பண்பும் மனச் சாட்சியும் கொண்ட தனது 'பித்றா'வின் மூலமாக பிரமாண்ட மான இப்பிரபஞ்சத்திற்கு ஒரு நோக்கம் இருக்க வேண்டிய

*அவசியத்தைப் புரிந்து கொள்கிறான். பூரணமான பண்புகள் கொண்ட படைப்பாளன் இன்றி இவ்வாறான பிரபஞ்சத்தின் இருப்பை அவனால் கற்பனை செய்ய முடியாது. அதுஅவனது கற்பனைத் திறன், ஆற்றல், தர்க்கம் என்பவற்றுக்கு மிகவும் அப்பாற்பட்டது.*

*''வானத்தையும் பூமியையும் அவற்றுக்கு இடைப்பட்டவற்றை யும் நாம் விளையாட்டாகப் படைக்கவில்லை''. (ஸூறா அன்பியா:16)*

*அல்-குர்ஆனிய கண்ணோட்டத்தில் மனிதன் என்பவன் பொரு ளும் இலக்கும் வினைமையும் நன்மையும் கொண்ட வாழ்வு டையவன். உலக வாழ்வில் அவன் சாதிக்கும் அனைத்துக்கும் உண்மையான விளைவொன்று உண்டு. அது உடலின் மரணத் தைத் தாண்டி ஆத்மாவின் சாஸ்வத உலகு வரை நீட்சி பெறு கிறது. இவ்வுலக வாழ்வில் சாதித்தவைகளை மனிதன் அங்கு அறுவடை செய்கிறான். அந்த வகையில், சீர்திருத்தம், உபகாரம் புரிதல், புத்தாக்கம், வளப்படுத்தல் முதலிய பெறுமானங்களை யும் அறிவையும் ஆன்மாவையும் மனச்சாட்சியையும் உடைய மனிதன் கால்நடைகளுக்குச் சமமாக நோக்கப்படுவது பொரு ளற்றது; பகுத்தறிவால் ஏற்க முடியாதது.*

### 7. விழுமியம்.

*படைப்பாளன் பற்றியும் படைப்பினங்களின் ஒருங்கிசைவு பற்றியும் மனிதன் இயல்பாகவே கொண்டுள்ள அறிவின் மூலமாக இப்பிரபஞ்சத்திற்கு ஒரு படைப்பாளன் இருப்பதை புரிந்து கொள் கிறான். பிரபஞ்சத்துக்கும் படைப்புகளுக்கும் ஓர் இலக்கு உள்ள தையும், அவையனைத்தும் சில உயர்வான விழுமிய நோக்கங் களுக்காகப் படைக்கப்பட்டுள்ளன என்பதையும் அவன் தெரிந்து கொள்கிறான். இதைத்தான் அல்-குர்ஆனிய நோக்கும் எடுத்தியம் புகிறது. மனிதன் (தனியாளாகவும் சமூகமாகவும் நின்று) தனது வாழ்வுப் பயணத்தில் வளப்படுத்தலுக்கும் சீர்திருத்தத்துக்குமான பாதையைத் தெரிவு செய்வதா? அல்லது அத்துமீறலுக்கும் விஷமத்*

துக்குமான பாதையைத் தெரிவு செய்வதா? என்பதை பொறுப் புணர்வோடு தீர்மானிப்பதற்கு அந்நோக்கு வழிகாட்டுகிறது.

மனிதனிடத்தில் காணப்படும் 'பித்றா' சார்ந்த இந்த ஆன்மீக உணர்வுதான் இவ்வுலகில் ஒரு குழந்தையாக கண்விழித்தது முதல் அவனிடம் காணப்படும் மதம் மற்றும் விழுமியம் சார்ந்த உணர்வுக்கும் வினாக்களுக்கும் அபிலாஷைகளுக்கும் அடிப்படை யாக அமைகிறது. அவனது நடத்தையை ஆன்மீக ஒளியும் மனச் சாட்சியும் ஆளுகை செய்வதும் இவ்வகையில்தான். இது அத்து மீறலும் அநியாயமும் அடக்குமுறையும் மிருக குணமும் கொண்ட ஸ்தூல உடலின் தூண்டுதலுக்கு மறுகிடையானது.

## 8. கலந்தாலோசனை செய்தல்

அல்-குர்ஆனிய அகில நாகரிகநோக்கின் படி, மனிதன் உலகை வளப்படுத்தும் பணிக்காகவே பூமியில் பிரதிநிதியாக படைக்கப் பட்டான். அதனாலேயே வளப்படுத்தலுக்கும் வசப்படுத்தலுக்கு மான அறிவாற்றல் அவனுக்கு வழங்கப்பட்டது; சுதந்திரமும் தெரிவு செய்வதற்கான ஆற்றலும் வழங்கப்பட்டது; நன்மை, சீர்திருத்தம், வளப்படுத்தல் என்பவற்றை இலக்காக கொள்கின்ற சீரான 'பித்றா'வும் கொடுக்கப்பட்டது.

இப்போது எழும் கேள்வி இதுதான்: பிரதிநிதித்துவப் பணி யானது (தனிநபர் பணியாக அமைய முன்னர்) தலைமுறை தலைமுறையான பொதுவான மனித இனப் பணியாக அமைக் கப்பட்டது ஏன்?

இக்கேள்விக்கான பதில் இதுதான்: பிரதிநிதித்துவப் பணி என்பது ஒவ்வொரு தனிநபரதும் பணியாக இருக்கின்ற அதே நேரம், முழு மனித இனத்தோடும் தொடர்புபட்ட கூட்டுப் பணியுமாகும். தனிநபர்கள் ஊடாக சமூகங்கள், தலைமுறைகள் என அது நீட்சி பெறுகிறது. இந்த வகையில் அது மானிட சுதந் திரத்துக்கும் பொறுப்புணர்வுக்கும் முக்கியமான பரிமாணங் களை வழங்குகிறது. ஏனெனில் பொறுப்புணர்வு என்பது சீர் திருத்தத்தையும் வளப்படுத்தலையும் இலக்காகக் கொண்டது. சீர்கேட்டையும் வரம்புமீறலையும் அது நிராகரிக்கிறது.

தனிநபர் சுதந்திரம் என்பது தனிநபரது உரிமை என்பதில் ஐய மில்லை. ஆனால் அந்த உரிமை ஏனைய தனிநபர்களது அல்லது சமூகத்தினது உரிமைகளோடு விளையாடுவதை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது. எதிர்காலத் தலைமுறைகளின் உரிமை கள், நலன்கள், இருப்பு, பாதுகாப்பு, வளப்படுத்தல், சீர்திருத்தம் என்பவற்றைப் பாதிப்பதாகவும் அது அமையக் கூடாது.

இங்குதான் 'ஷூறா' என்னும் கலந்தாலோசனையின் வகி பாத்திரம் மேலெழுகிறது. அந்த 'ஷூறா தனிப்பட்ட மனோ இச்சைகளுக்கோ அதிகார வர்க்கத்தின் நலன்களுக்கோ செல் வாக்கிற்கோ அடிபணியாமல், சமூக மட்ட கலந்தாலோசனையின் அடிப்படையில் இடம்பெறும். தனிநபர்களதும் சமூகத்தினதும் ஆகுமாக்கப்பட்ட உரிமைகளை பாதுகாப்பது அதன் இலக்காக இருக்கும். மனித இருப்பின் நோக்கையும், வளப்படுத்தல், சீர்திருத்தம், பாதுகாப்பு என்பவை தொடர்பான பொது நலன் களையும் தடையின்றிச் சாத்தியப்படுத்த அது முனையும்.

ஆக- 'ஷூறா' என்பது தனிநபர்களதும் சமூகத்தினதும் மனித இனத்தினதும் வாழ்விலிருந்து பிரிக்க முடியாத அங்கம். தனி நபரும் சமூகமும் 'கிலாபத்' என்ற கண்ணியப் பொறுப்பைச் சுமப்பதற்கு இன்றியமையாத கருவியாகவும் அது உள்ளது. சீரான மானிட இயக்கத்தை நிர்வகிக்கவும், மானிட சிந்தனையை செயலூக்கப்படுத்தவும், முதிர்ச்சியான சமூகக் கருத்தாக்கங்களை கட்டுருவாக்கவும் 'ஷூறா' என்னும் கோட்பாடு அவசியமாகிறது. உரையாடல், தொடர்பாடல், சமநிலை, உடன்பாடு, சகிப்புத் தன்மை என்பவற்றை ஏற்படுத்துகின்ற அடிப்படையான மானிட சமூகவியல் சாதனமாக அது தொழிற்படுகிறது. அடக்குமுறை, அத்துமீறல், அநீதி, ஆக்கிரமிப்பு, சீர்கேடு முதலிய தீங்குகளி லிருந்து உம்மாவை உம்மாவின் மூலமே பாதுகாப்பதற்கான கேடயமாகவும் அது உள்ளது.

இந்தவகையில், 'உம்மா'வின் அகில நாகரிக நோக்கு, நலன்கள் பற்றிய அதன் புரிதல், வளமான வாழ்வியல் தெரிவுகளைத் தீர் மானிக்கும் அதன் உரிமை என்பவற்றின் பின்புலத்தில் அதிகாரப்

பொறுப்பை ஏற்கும் அருகதை உம்மாவுக்கே உரியது. அதிகார மோகம் கொண்ட தனிநபர்களுக்கு அதில் பாத்தியதை கிடையாது. எனினும் எப்போது உம்மா இப்பண்பை இழக்கிறதோ, அப்போது அதிகார இயல்பு கொண்ட தனிமனிதர்கள் அதனை மேலாண்மை செய்ய முற்படுவர். தமது நலன்களை ஈட்டும் கருவியாக உம்மாவை அவர்கள் வசப்படுத்திக் கொள்வர். அதிகாரத்தையும் செல்வத்தையும் தமது ஏகபோக உரிமையாக ஆக்கிக் கொள்வர். தமது கேளிக்கையாலும் சீர்கேட்டினாலும் தேசங்களிலும் சமூகங் களிலும் காணப்படுகின்ற வளர்ச்சிக்கும் புத்தாக்கத்துக்குமான இயலுமைகளை அழித்து விடுவர். இப்பகைப்புலத்தில்தான், நாக ரிகங்களின் எழுச்சியிலும் வீழ்ச்சியிலும் சுதந்திரமும் ஷூறாவும் விஷேட முக்கியத்துவம் பெறுகின்றன.

### 9. சுதந்திரமும் ஷூறாவும்: நாகரிகங்களின் நிலைபேற்றுக்கு இன்றியமையாத நிபந்தனைகள்.

சுதந்திரமும் கலந்தாலோசனையும் இருக்குமிடத்தில் அடக்கு முறைக்கும் அநீதிக்கும் சீர்கேட்டுக்கும் இடமில்லை என்பது ஓர் எளிய உண்மை. அறிவீனம், வழிபிறழ்வு, போலிப்புனைவு என்பவற்றின் இருளிலேயே அநீதியும் சீர்கேடும் வளர்கின்றன. பரஸ்பரத் தொடர்பும் கலந்தாலோசனையும் கொண்ட சுதந்திர மனிதர்களை எல்லா நேரத்திலும் வழிபிறழச் செய்து விட முடி யாது. நீதியே சுதந்திரத்தையும் கலந்தாலோசனை செய்யும் பண் பையும் உற்பவிக்கிறது. நீதியின்றி சுதந்திரமோ கலந்தாலோச னையோ இல்லை.

முஸ்லிம் உம்மா இன்று எழுச்சியடையவும் தனது நாகரிக ஆரோக்கிய நிலையை மீட்டெடுக்கவும் வேண்டிய கட்டத்தி லுள்ளது. இந்நிலையில், சுதந்திரத்துக்கும் ஷூறாவுக்கும் நாகரி கங்களின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் இடையிலான தொடர்பை அது புரிந்து கொள்வது மிக முக்கியமானது. சமூகங்களின் உயர் விலும் தாழ்விலும் இவை எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என்பதை அது அறிதல் வேண்டும். மட்டுமன்றி, சிந்தனையாளர் களும் தலைவர்களும் சீர்திருத்தவாதிகளும் அவர்களது நிகழ்

யதார்த்தத்துடன் எவ்வாறு உறவாடுகிறார்கள் என்பதை அறிந்து, அதற்கேற்ப தன்னை மீள் தகைமைப்படுத்த அது உழைக்க வேண்டும். அப்போதுதான்வளப்படுத்தலும் நன்மையும் கொண்ட தனது தனித்துவமான நாகரிகப் பயணத்தையும் அந்தஸ்தையும் அதனால் மீளப் பெற முடியும்.

இன்றைய மனித நாகரிகம் தலைக்கேறிய சடவாதத்தினாலும் இனவாதத்தினாலும் அவதிப்படுகிறது. போலி ஜனநாயக கோஷங்களும் முறைகேடான 'சுதந்திர'மும் அதனை நலிவடையச் செய்திருக்கின்றன. அதிகாரமும் பணபலமும் கொண்ட வர்க்கத்தினால் ஆளப்படும் ஊடகங்களதும், போலி ஆய்வு நிறுவனங்களதும் பிழையான வழிகாட்டல்களால் அது திணறிக் கொண்டிருக்கிறது. இதன் விளைவாக உருவாகியிருக்கும் சுரண்டல், அநீதி, வெகு மக்களது அறியாமை, வறுமை என்பன மனித குலத்தை அழிவின் பால் இழுத்துச் சென்று கொண்டிருப்பது தெளிவாகத் தெரிகிறது. இஸ்லாத்தின் ஆத்மீக நாகரிகம் மீண்டும் எழுச்சி பெறாவிட்டால் இந்தப் பேரழிவை நிறுத்துதல் துர்லபம்.

நவீன சடவாத நாகரிகத்தை போலித் தன்மையும் பிறழ்வுகளும் பீடித்துள்ளன. அதன் அகில நோக்கு விகாரமடைந்துள்ளது. பொருளாதார -தொழில்நுட்ப- அதிகாரச் சுரண்டல்களுக்கு அது பலியாகியுள்ளது. இவை அந்நாகரிகம் இன்னுமின்னும் அடக்குமுறை, அநீதி, சீர்கேடு என்பவற்றை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றன என்பதற்கான குறிகாட்டிகளாகும். அதன் சமூக நாகரிகக் கட்டமைப்பும் உலக ஒழுங்கும் சரிந்து விழப் போகின்றன என்பதை இவை சான்றுப்படுத்துகின்றன.

சமூக கட்டுமானப் பணியில் நிறுவனங்களின் வகிபாத்திரம் தொடர்பாக கவனம் செலுத்துவது இத்தீர்க்கமான கட்டத்தில்மிக அவசியம். ஏனெனில், ஆரோக்கியமான அடிப்படைகளின் மீது நிறுவனங்களைக் கட்டியெழுப்புவதன் மூலமே 'பிர்அவ்னிய-புரோகிதப்' பிறழ்வுகள் தோன்றுவதை தடுத்து நிறுத்த முடியும். இந்நிறுவன முறைமையே பிறழ்வுகளையும் ஒழுங்கீனங்களையும் வேரோடு அகற்றக் கூடிய வகையில் 'ஷூறா' ஒழுங்கினை நிலை

நிறுத்தும்; போலித்தனத்தையும் சீர்கேட்டையும் தோலுரித்து சுதந் திரத்தைப் பாதுகாக்கும்; உழைப்புக்கும் புத்தாக்கத்துக்குமான பாதையை திறக்கும்.

மேலே சுட்டிக்காட்டிய விடயங்களின் பின்னணியில் பின்வரும் கேள்வியை எழுப்புதல் பொருந்தும். இலவசமாக கிடைக்கும் செல்வங்கள் மட்டுமன்றி, ஐயத்துக்கிடமாக பெறப்படும் வருமானங்கள், நலன்கள், கடன்கள், உதவிகள், தரகு என்பனவும் சேர்ந்து அடக்குமுறையும் சீர்கேடும் இன்னும் அதிகரிப்பதற்கான தூண்டுகோலாக மாறி விட்டனவா? அதிகாரத்தின் மீதும் செல்வத்தின் மீதும் நிலவுகின்ற ஏகபோக ஆதிக்கத்தை அப்படியே தொடரச் செய்யும் வகையிலான தேக்க நிலையும் மேட்டுக் குடித்தனமும் இன்னும் தொடர வேண்டுமா?

இந்த விடயம் தொடர்பாக சிந்தனையாளர்களும் சீர்திருத்த வாதிகளும் உரிய கவனம் எடுக்கா விடில், உம்மாவின் எழுச்சி அதன் தொடக்கத்திலேயே காயடிக்கப்பட்டு விடும்; மலர்ந்து கனி தர முன்பே அதன் கரு கலைக்கப்பட்டு விடும்.

உம்மாவின் எழுச்சி இவ்வாறு அதன் கருவிலேயே கலைக்கப் பட்டு, பயணத் தடம் திசை மாறி விடாமல் பாதுகாக்க சிந்தனை யாளர்களும் சீர்திருத்தவாதிகளும் கற்றறிவாளர்களும் முன்வரு வார்களா? நாகரிக அனந்தரத்தைப் பெறுவதற்கான உம்மாவின் வரலாற்றுத் தகைமையை உண்மையாகவே அவர்கள் மீட்டுத் தருவார்களா? அதன் மூலம் மனித நாகரிகத்தின் செல்நெறியைச் சீர்செய்து கடைத்தேற்றுவார்களா?

வளமும் நன்மையும் கொண்ட நமது அகில நாகரிக நோக்கை நாம் மீட்டுக் கொண்டு வருவோமா? நமது சிந்தனையிலும் உரையாடலிலும் பயிற்றுவித்தல் முறைகளிலும் ஏற்பட்ட குளறு படிகளைச் சீர் செய்வோமா? நமது அகில நோக்கின் பெறுமானங் களையும் கருத்தாக்கங்ளையும் சிந்தனா முறைமையையும் பாது காக்கும் வகையிலான நிறுவனங்களைக் கட்டியெழுப்புவோமா?

எத்தனை தடைகள் காணப்பட்ட போதும் இவையனைத்தும் சாத்தியமே. ஏனெனில் இவற்றை செயலூக்கப் படுத்துவதற்கான

அனைத்துத் தகைமைகளும் 'உம்மா'விடம் உண்டு. சிந்தனை யாளர்களதும் சீர்திருத்தவாதிகளதும் பயிற்றுவிப்பாளர்களதும் முயற்சியின் மூலம் இதனை சாதிக்க முடியும். பெற்றோர் தமது எதிர்கால சந்ததிகளின் நலனுக்காக இதய சுத்தியுடன் செய்யும் தியாகமும், செலவிடும் ஆற்றலும் கூட இதற்கு பெரிதும் உதவும். ஏனெனில், 'பிர்அவ்னிய' கொடும் பிடிக்கும் 'புரோகித' போலித் தனங்களுக்கும் மத்தியில் பிள்ளைகள் மீது அதிகம் செல்வாக்குப் படைத்தோர் அவர்களது தாய் தந்தையரே. சரியான உறுதியும் நோக்கும் அவர்களிடம் காணப்படுமாயின் இதனை இலகுவாகச் சாதிக்க முடியும்.

நமக்குள்ளிருக்கும் மனிதத்தை நாம் கண்ணியப்படுத்து வோமா? நமது சுயத்தையும் சுதந்திரத்தையும் மதித்துப் பாது காப்போமா? நமது சமூக கட்டுமானத்தின் பிரதான கூறுகளிலும் சமகால நாகரிகத்தின் மீதும் அறிவு, நீதி, கலந்தாலோசனை, பரஸ்பர கூட்டுறவு, பாதுகாப்பு, சமாதானம் என்பவற்றுக்கான நிறுவனங்களை தோற்றுவிப்போமா?

இக்கருத்தும் பிரதிநிதித்துவத்திற்கான நமது தகைமையும் பூரணமடைய வேண்டுமானால், அதற்கான தயாரிப்பை நாம் மேற்கொண்டாக வேண்டும். நியதிகள் சார்ந்த முழுமையான அறிவே அந்தத் தயாரிப்பு. அதன் மூலமாகத்தான் சீர்திருத்தத்தி னதும் வளப்படுத்தலினதும் நோக்கத்தைப் பேணி பிரதிநிதித்துவப் பணியின் பயனை நாம் அடைய முடியும்; மனிதனின் தேவை களுக்கும் புத்தாக்கத்துக்கும் இயைபாக அதனை வசப்படுத்தவும் முடியும்.

### *10. நியதிகள் சார்ந்த முழுமையான அறிவு.*

மனிதனைச் சூழவுள்ள பிரபஞ்சம் பற்றிய அறிவும் சிந்தனை யும் ஆரோக்கியமான 'பித்றா'வும் படைப்பாளனது ஏகத்துவம் குறித்த இயல்பான விசுவாசத்திற்கு அவனை இட்டுச்செல்கிறது. மனித வாழ்வின் நோக்கம் மற்றும் விழுமியம் பற்றிய புரிதலுக்குப் பணிய வேண்டிய கடப்பாட்டையும் ஏற்படுத்துகிறது. அறிவைப் பயன்படுத்துவதன் மூலமே இது சாத்தியமாகும்.

மனித இயல்பு பற்றியும், பிரபஞ்ச நியதிகள் பற்றியும், வாழ்வின் யதார்த்தம் பற்றியுமான சரியான புரிதலே வாழ்வையும் பிரபஞ்சத்தையும் புரிந்து கொள்வதற்கான இயல்பறிவான வழியாகும். நியதிகள் சார்ந்த, முழுமையான, குறிக்கோளுடைய, அறிவார்ந்த அணுகுமுறை இல்லாது விடில், நாம் இன்று காண்பது போன்று சீர்கேடும் ஒழுங்கீனமும் நிறைந்த உலகொன்றையே தொடர்ந்தும் காண நேரிடும். அத்தகைய நிலையை சீரான 'பித்றா' வும் பகுத்தறிவும் ஏற்றுக் கொள்ளாது.

முஸ்லிம் பகுத்தறிவின் செல்நெறி கிரேக்க பௌராணிகக் கற்பனைகளாலும் கட்டுக் கதைகளாலும் தாக்கமடைந்து திசை தவறாமல் இருந்திருந்தால், முதல் நிலை உருவாக்குனர்களாக முஸ்லிம்களே இருந்திருப்பர். ஏனெனில் அல்-குர்ஆனிய அகில நாகரிக நோக்கின் வழிகாட்டலின் கீழ் பல்வேறு அறிவியல் கலைகளின் கொடுமுடியைப் பிடித்திருக்கத் தகுதியானவர்கள் அவர்களே.

முஸ்லிம் உம்மாவின் இன்றைய அறிவியல், சீர்திருத்த,நாகரிக செல்நெறியை சீர்செய்ய வேண்டிய கடப்பாடு முஸ்லிம் புலமையாளர்களுக்கும் சிந்தனையாளர்களுக்கும் சீர்திருத்தவாதிகளுக்கும் உள்ளது. எனவே அவர்கள் மூடக் கற்பனைகளையும் கட்டுக் கதைகளையும் புறமொதுக்கி, அல்-குர்ஆனிய அகில நாகரிக நோக்கின் மீதமைந்த, நியதி வழிப்பட்ட அறிவியலையும் அறிவியல் முறைமையையும் மீட்டெடுக்க வேண்டும். கல்வி, பயிற்றுவிப்பு, கலாசாரம் ஆகிய துறைகளின் இயங்கு திசையை சீர்செய்வதன் மூலம் இதனைச் சாதிக்க முடியும். உம்மாவின் சிந்தனையையும் நிறுவனங்களையும் கட்டியெழுப்புவதற்கும், அடுத்த கட்ட அறிவியலாளர்களையும் வளவாளர்களையும் உருவாக்குவதற்கும் அவசியமான அடிப்படைச் செயற்பாடு இதுதான். அனைத்து வாழ்வியல் துறைகளிலும் அறிவியல் மனப்பாங்கை கட்டியெழுப்பக் கூடிய இஸ்லாமிய அறிவைப் பாதுகாக்க அவசியமான நடவடிக்கையும் இதுதான்.

சிந்தனையாளர்களும் பயிற்றுவிப்பாளர்களும் தலைவர்களும் உம்மாவின் சீர்திருத்த இயக்கத்தை வழிநடாத்த விரும்பின் ஓர் உண்மையைப் புரிந்துகொள்வது அவசியம். மனித செயற் பாட்டை இயக்குவதற்கோ அதன் இலக்கையும் இயங்கு திசை யையையும் வரையறுப்பதற்கோ அறிவும் பகுத்தறிவுத் தராசும் மாத்திரம் போதுமானதல்ல. ஏனெனில் இவ்விவகாரம் மனிதனின் மன எழுச்சியிலும், ஏதோவொரு செயற்பாட்டைத் தெரிவு செய்வ தற்கான அவனது நாட்டத்திலுமே பெரிதும் தங்கியுள்ளது. அது அவனது அவ்வப்போதைய மனச்சாய்வுக்கேற்ப பகுத்தறிவுத் தராசுடனும் அறிவின் புற உண்மைகளோடும் உடன்படவும் முடியும்; முரண்படவும் முடியும்.

எனவே சீர்திருத்த முனைவுகளுக்குகல்வியிலும் பாடசாலை யிலும் மாத்திரம் கவனம் செலுத்துதல் போதாது. மனிதனது லௌகீக -உளவியல் உருவாக்கத்தின் அடிப்படையாக அமை கின்ற குழந்தைப் பருவம் அதனினும் முக்கியமானது. இப்பரு வத்தில் வழங்கப்படும் பயிற்சியானது மானிட உளவியல் உரு வாக்கத்தில்தாக்கம் செலுத்துகின்ற மிக முக்கிய காரணியாக கருதப்படுகிறது. இத்தகைய உருவாக்கமே மனித உள்ளத்திலும், அடிப்படையான அவனது பண்புகளிலும் நிலையான தாக்கத்தை ஏற்படுத்த வல்லது. மனிதனது தெரிவுகளை வழிநடாத்துவதில் மிகப் பிரதான பாத்திரத்தையும் அதுவே வகிக்கிறது.

ஆக, உம்மாவினதும் அதன் அங்கத்தவர்களதும் சிந்தனா முறை யில் தோன்றியுள்ள விகற்பங்களை சீர் செய்வது முஸ்லிம் தனி மனிதனதும் சமூகத்தினதும் முக்கிய பொறுப்பாகும். அதேவேளை இளம் தலைமுறையினரைப் பயிற்றுவிக்கும் முறையிலும் அவர் களோடு சொல்லாடும் முறையிலும் ஏற்பட்ட பிறழ்வுகள் சீர் செய்யப்பட வேண்டும். அதன் மூலமே உம்மாவின் எதிர்காலத் தலைமுறையைக் கட்டியெழுப்பும் பணி சீரடையும். அதற்கு முன்னர், அறிவு மற்றும் உளக் கட்டுமானத்தின் அடிப்படையாக அமைகின்ற உம்மாவின் அகில நோக்கு மீட்டெடுக்கப்பட வேண் டும். அதன் மூலம்தான் உம்மா தனது தலைமுறைகளின் தூய

அகீதாவைமீட்டெடுக்க முடியும். அந்த அகீதா ஆன்மீகப் பண்பு டையது; ஏகத்துவமானது; விழுமியம் சார்ந்தது; வளப்படுத்தும் இயல்புடையது.

### 11. உலகளாவிய இயல்பு.

மனித உருவாக்கத்தின் அனைத்துக் கட்டங்களும் ஒன்றோ டொன்று ஊடுபாவி முழுமையடைந்து நிற்கும்மனித இனம் என்ற கட்டத்தை இது குறிக்கின்றது. தனிநபர், குடும்பம், கோத்திரம், சமூகம், மொழி, நிறம், இனம் ஆகிய அனைத்துச் சார்பியங்களும் தொடர்புற்றுப் பிணைந்து ஈற்றில் மனிதன் அல்லது மனித இனம் என்ற வட்டத்தில் சங்கமிக்கும் நிலை இது.

உலகளாவிய இயல்பு என்பது மனிதனது நாகரிகத்தினதும் அறிவாற்றல்களதும் முதிர்ச்சி நிலையாகும். இற்றை வரையான காலம் மற்றும் இடம் சார்ந்த பல தடைகளை அது நீக்கியிருக் கிறது. மனிதனை நோக்கிய மானிட உரை மட்டுமே அதற்கு ஏற்புடையது. ஏனெனில் சர்வதேச இயல்புஎன்னும் உலகில் -நாகரிக ரீதியிலோ மானிட ரீதியிலோ- இனவாதங்களுக்கு இட மில்லை. அவ்வாறே இந்த உலகளாவிய தன்மையை சாத்தியப் படுத்திக் காட்டிய அறிவியலிலும் மூடநம்பிக்கைகளுக்கோ பௌராணிகப் புனைவுகளுக்கோ இடமில்லை.

இஸ்லாத்துக்கு முன்னைய அனைத்துத் தூதுகளும் அந்தந்த சமூகக் குழுமங்களுக்காக மாத்திரம் அருளப்பட்டவை. இஸ்லாம் மட்டுமே ஆதமுடைய சந்ததியைச் சேர்ந்த அனைத்து மக்களுக்கு மாக அருளப்பட்டது. அந்தவகையில் அதன் அழைப்பு உலகளா வியதாக, முழு மனித சமூகத்துக்குமானதாக அமைந்திருந்தது. நியதி சார் அறிவியலே அதன் வழிமுறையாக இருந்தது. ‘கிதாப்’ (பனுவல்) மற்றும் ‘இக்ரஃ’ (வாசிப்பீராக!) என்றவாறாக அதன் தூதும் வாதங்களும் அமைந்திருந்தன. நீதியும் சமாதானமும் அதன் இலக்குகளாய் இருந்தன. ஏனெனில், நீதியின்றி உலகளாவிய இயல்போ சமாதானமோ சாத்தியமில்லை.

‘உலகமயமாக்கல்’ (Globalization) என்பது புதியதொரு விடயம் என்றே பலர் நினைக்கின்றனர். அது தவறான எண்ணம். கால -இடத் தடைகளை தகர்க்கின்ற நவீன வசதிகளும் பௌதீக வள மும் கொண்ட காலனிய ஆதிக்க சக்திகளது சுரண்டல் மனோ பாவத்தின் புதுப் பெயரே இந்த உலகமயமாக்கல் ஆகும். இதன் மூலமாக அவை தமது அநியாயத்தையும் சுரண்டலையும் அத்து மீறலையும் மேலும் மேலும் ஆழப்படுத்திக் கொள்கின்றன.

‘உலகளாவிய இயல்பு’ என்பது ‘உலகமயமாக்கல்’ என்பதி லிருந்து வேறானது. ஏனெனில், உலகளாவிய இயல்பு என்பது பரஸ்பரத் தொடர்பு; சகோதரத்துவம்; அன்பு; நீதியான நலன் பரிமாற்றம்; மனிதர்களுக்கிடையிலான சமாதானம். ஆனால் உலக மயமாக்கல் என்பது ஆக்கிரமிப்பு; அடக்குமுறை; சுரண்டல்; பேராசை; எல்லா வகையிலுமான உலகப் போர்கள்; அநீதியும் சுரண்டலும் மிக்க காலனிய ஒழுங்கு.

மனித சமூகத்துக்கான இறுதி அழைப்பாகிய முஹம்மதியத் தூது தோன்றிய காலம் தொட்டு மனித இனம் அறிவியல் பண் பையும் உலகளாவிய இயல்பையும் அனுபவித்து வந்திருக்கிறது. அதனோடு இணைந்து தொடர்பாடல் இயக்கமும் வளர்ந்து வந்தி ருக்கிறது. மானிட சமூகங்களுக்கிடையிலான தொடர்பிலும் நலன் பரிமாற்றத்திலும் காணப்பட்ட கால -இடத் தடைகளும் படிப்படியாக தகர்க்கப்பட்டு வந்திருக்கின்றன. இந்த அனைத்தும் சேர்ந்து இன்று மனித இனத்தையும் அதன் சமுதாயங்களையும் ஒரே உலகளாவிய சமூகமாக ஒன்றுபடத் தூண்டியிருக்கின்றன.

ஒரே உலகளாவிய சமூகம் என்பதும் ஒரே உலகளாவிய அரசு என்பதும் ஏறக்குறைய கனவாகவே பார்க்கப்பட்ட போதிலும், இன்றைய உலகளாவிய மானிட இயக்கமானது அதனை தவிர்க்க முடியாததோர் உண்மையாக ஆக்கியிருக்கின்றது.

இன்று சிந்தனையாளர்களும் சீர்திருத்தவாதிகளும் மனித இனத்தின் கனவையும் மனிதனின் பிரதிநிதித்துவ அவாவையும் சாதிப்பதற்கான பெரும் வாய்ப்பொன்றின் முன் நிற்கிறார்கள்.

சகோதரத்துவம், நீதி, சமாதானம், வளப்படுத்தல் என்பவற்றை சாதிப்பதற்கான சந்தர்ப்பம் இது. உலகளாவிய தன்மை என்ற இயக்கத்தினூடாகவும், சமுதாயங்களுக்கிடையிலான தொடர்பாடல் மூலமாகவும் இதனை அவர்கள் சாத்தியப்படுத்த முடியும். இவ்வாய்ப்பைத் தவற விடுவது மிகப் பெரும் துன்பமாகவே முடியும்.

இப்போது எழும் மிகக் கூர்மையான கேள்வி: சடவாதமும் மிருக குணமும் இனவெறியும் சுரண்டலும் கொண்ட உலகமயமாக்கல் சக்திகள் இந்த சமூகத்தின் இயல்பையும் ஒழுங்கையும் வரையறுக்கப் போகின்றனவா? அல்லது அல்-குர்ஆனிய அகில நாகரிகத்தைக் கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதில் புலமையாளர்களும் சிந்தனையாளர்களும் வெற்றி பெறுவார்களா?

### *12. சமாதானம்.*

அல்-குர்ஆனிய அகில நோக்கின் படி, சமாதானம் என்பது மனித ஒருமைப்பாட்டுக்கும் மனித உறவுகளிலான நீதிக்குமான அடிப்படை நியமமாகும். அல்-குர்ஆனிய நோக்கில், மனித இனம் என்பது ஒருமையில் வகைமையும் வகைமையில் ஒருமையுமாகும். அவ்வாறே மனித இனக் கட்டமைப்பானது தனிமனிதன் தொடக்கம் முழு மனிதப் பரம்பரை வரை ஒன்றோடொன்று தொடற்புற்ற கலப்புக் கட்டமைப்பாக உள்ளது. அந்த வகையில், ஒன்றுக்குள் மற்றொன்றாக ஊடுபாவி நிற்கும் இத்தொடர்புகளை ஆளுகை செய்யவும் நியமப்படுத்தவும் சமாதானம் என்ற கோட்பாடு இன்றியமையாதது.

அல்லாஹ் கூறுகின்றான்: ''விசுவாசம் கொண்டோரே, ('அஸ்-ஸில்ம்' என்னும்) சமாதான மார்க்கத்தில் முழுமையாக நுழைந்து விடுங்கள்!'' (ஸூறா அல்-பகறா:208)

இங்கு நாம் குறிப்பிட்டவை இஸ்லாமிய சிந்தனையின் சில முக்கிய கோட்பாடுகளும் நியமங்களுமே. இஸ்லாமிய ஆய்வியல் முறைமைக்கான மேலும் பல நியமங்களை பெறக் கூடிய

வகையில் இவற்றை நாம் இன்னும் விரிவாக பாகுபடுத்தி நோக்க முடியும். அதன் மூலமாக இஸ்லாமிய சிந்தனையானது நன்மையும் வளப்படுத்தும் இயல்பும் கொண்ட தனது அதியுயர் நோக்கங்களை அடைந்து கொள்வதும் சாத்தியமாகலாம்.

### 13. சீர்திருத்தமும் வளப்படுத்தலும்.

உழைப்பும் பிரபஞ்சப் படைப்புகளிலிருந்து பயன் பெறுவதும் மனிதனது இயல்பான பண்பு. உலக வாழ்வுக்கும் நிலைபேற்றுக்குமான தேவைகளை இதனால் அவன் அடைந்து கொள்கிறான். பூமியில் அவன் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டதன் விளைவு இது. எனினும், உலக வாழ்வுக்கான யத்தனத்தின் போது இரு வகையான சக்திகள் அவனுக்குள் போராடுகின்றன. ஒன்று: வன்முறை, பலம், அநீதி, வரம்புமீறல் என்பவற்றினூடாக தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முனைகின்ற மண் சார்ந்த மிருக குணம். மற்றையது: மனிதனை அநீதியிலிருந்தும் அடக்கு முறையிலிருந்தும் விலக்கி, சத்தியம், நீதி, அன்பு முதலிய பெறுமானங்களைப் பேணி நடக்குமாறு தூண்டுகின்ற 'பித்றா' சார்ந்த சீரான ஆன்மீகக் குணம்.

வளப்படுத்தலும் சீர்திருத்தமும் மனித நாட்டத்தில் இயல்பானது. பூமியில் மானிட இருப்பின் இலக்கு அது. அல்-குர்ஆனிய நாகரிக நோக்கிலிருந்து அதனை வேறு பிரிக்க முடியாது. ஏனெனில் வாழ்வியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான உழைப்பும் முயற்சியும் புத்தாக்கமும் இன்றி மனித இருப்புக்கு எந்தப் பெறுமானமும் இல்லை.

எனினும் மனிதன் தனது வாழ்வுத் தேட்டத்தின் போதும், தனது சுய அடையாளத்தை ஸ்தாபித்துக் கொள்வதற்கான முனைப்பின் போதும் நன்மையான வழியையே தேர்ந்தெடுக்க வேண்டும். ஏனெனில் அநீதியும் சீர்கேடும் அவனது இருப்பை அழித்து நாசப்படுத்தி விடும்; பிரபஞ்சத்தினதும் படைப்புகளதும் ஒழுங்கமைப்பையும் சீர்குலைத்து விடும்.

## *14. அழகு: உண்மையா? ஊகமா?*

சீர்திருத்தம் மற்றும் வளப்படுத்தல் பற்றிய புரிதல் முழுமை யடைவதற்கு அல்-குர்ஆனிய அகில நோக்கில் ‘அழகு’ என்ற பெறுமானம் பெறுகின்ற இடம் குறித்த சொல்லாடல் அவசியம். ஏனெனில் அழகு என்பது ‘கட்புலனான’ பிரபஞ்சத்தின் புத்தாக் கத்திலும், அதன் கச்சிதமான அமைப்பிலும், ‘பித்றா’ சார்ந்த உணர்விலும் விரவிக் கிடக்கும் ஒரு பிரபஞ்சப் பெறுமானமாகும். அவ்வாறே அது வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் மனித உள்ளத்தின் இயல்பான தேவையும் அபிலாஷையும் இன்பமும் ஆகும். அழகு என்ற பெறுமானம் ‘கட்புலனான’ பிரபஞ்சத்தில் பரவிக் கிடப்பது போலவே ‘எழுதப்பட்ட’ வஹீயிலும் விரவி நிற்கிறது. படைப்பாளனது அற்புதப் படைப்புகளையும், மனித னது கண்ணும் செவியும் இன்புறும் வகையில் வழங்கப்பட் டுள்ள அருட்கொடைகளையும் பற்றி வஹீவிபரிக்கும்போது இந்த அழகு வெளிப்படுகிறது.

ஆனால் துரதிஷ்டவசமாக இஸ்லாமியச் சொல்லாடல்களில் நீண்ட பல காலமாக ‘சுய மறுப்புத்’ தொனிமிகைத்து நின்றதால், ‘சுயமுனைப்பு’ என்ற பண்பு முஸ்லிம் உள்ளத்திலிருந்து மறைந்து விட்டது. இது புத்தாக்க அழகின் மீதான ரசனை உணர்வையும் படிப்படியாக அணைத்து விட்டது.

அழகுணர்வும் படைப்பின் புதுமைகளை ரசிப்பதும் மனித இயல்பாகும். அந்த அழகைத் தேடிச் செல்வதானது அல்-குர் ஆனுடன் இயைந்து நின்று ‘சுயத்தை ஸ்தாபிக்கும்’ முனைப்பின் முக்கியமான கூறாகும். ஆனால் அழகை ரசித்தல் என்ற இப்பண்பு சமநிலையான, அறிவார்ந்த இயல்பிலிருந்து விலகிச் சென்று விடலாகாது. ஏனெனில் இயல்பான மனிதத் தேவைகள் கூட காய்தல் -உவத்தலின்றி சரியான வழிமுறைகளுக்கூடாகவே நிறை வேற்றப்பட வேண்டும் என்பது இஸ்லாத்தின் நிலைப்பாடு.

நபித்துவக் காலத்தில் எவ்வளவு சவால்கள் காணப்பட்ட போதும், உள்ளங்களை அடிக்கடி ஆறுதல் படுத்திக் கொள்ளுமாறு

நபி (ஸல்) அவர்கள் உபதேசித்திருப்பதைக் காண்கிறோம். ஏனெனில் உள்ளங்கள் உழைப்பினால் சோர்வுறும் போது சலிப்படைகின்றன. ஒரு சந்தர்ப்பத்தில் சில அன்ஸாரித் தோழர்கள் திருமண விழா ஒன்றை கொண்டாடிக் களிக்க விரும்பியபோது, வேறு சில தோழர்கள் அதில் குறுக்கீடு செய்ய முற்பட்டனர். ஆனால் ஆடிப் பாடி மகிழ்வடைகின்ற மனிதனின் மன இயல்பை மதித்த நபியவர்கள் அதனை அனுமதித்தார்கள். மற்றொரு சந்தர்ப்பத்தில் நபியவர்களே பாடல் புனைந்து கொடுக்க, மக்கள் தம்பட்டம் போன்ற கருவிகளை இசைத்து மகிழ்வோடு அதனைப் பாடியிருப்பதை காண்கிறோம்.

மட்டுமன்றி, மதீனாவுக்கு வந்த அபீஸீனியக் கோஷ்டியொன்றின் விளையாட்டுகளையும் கலாசார நடனங்களையும் கண்டு களிப்பதற்காக நபி (ஸல்) அவர்கள் தமது மனைவியான ஆயிஷா (றழி) அவர்களோடு சென்றிருந்ததையும் அறிகிறோம்.

நேர்ந்து விட்ட ஏதோ ஒரு தவறுக்காக, காணும் இன்பத்திலிருந்து கண்ணையும், கேட்கும் இன்பத்திலிருந்து செவியையும், புத்தாக்க இன்பத்திலிருந்து மனதையும் நாம் தடுத்து விடக்கூடாது. அதேவேளை இந்த ரசனையானது ஷரீஆ அங்கீகரித்த வரையறைக்குள் நிற்பதையும் நாம் உத்தரவாதப் படுத்திக் கொள்ள வேண்டும்.

அழகு என்பது உலக வாழ்வின் மயக்கும் இன்பங்களுள் ஒன்று. அல்-குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது: ''நிராகரிப்பவர்கள் பூமியில் மேற்கொள்ளும் (இன்பமான) செயற்பாடுகள் உங்களை மதி மயக்கி விட வேண்டாம். அது மிகக் குறைவான இன்பமே. பின்னர் அவர்களது ஒதுங்குமிடம் நரகமாகும். அது மிகக் கெட்ட தங்குமிடமாகும்''. (ஸூறா ஆல இம்ரான்: 196-197)

அழகுத் தேட்டமும் புத்தாக்கமும் மனிதனது சுயத்தை சீராகவும் இயல்பாகவும் ஸ்தாபிக்கும் வகையில் அமைந்திருக்குமாயின், அதுவே உலக -மறுமை இன்பமாகும். அதேவேளை, அது வெறுக்கத்தக்கதாகவும் பாவமாகவும் அமையுமாயின், மதி மயக்கும் அற்ப இன்பமாகமாறிவிடும்.

# அல்-குர்ஆனிய அகில நோக்கு: சீர்திருத்தத்துக்கும் வளப்படுத்தலுக்குமான தூண்டுகோலும் தொடக்கப் புள்ளியும்

முஸ்லிம் உம்மா தனது அல்-குர்ஆனிய அகில நோக்கை மீளப் பெற வேண்டுமாயின், நபித்துவக் காலத்தையும் கிலாபத் நல் லாட்சிக் காலத்தையும் ஒட்டிய இஸ்லாமிய வரலாற்றை மனக் கண்ணில் நிறுத்துவது அவசியம். அக்காலத்தின் இலக்கும், அல்-குர்ஆனிய அகில நாகரிக நோக்கும் ஏற்படுத்திய தாக்கம் நன்கு அவதானிக்கப்பட வேண்டும். அந்த நோக்கும் காலப் பிரிவும் இஸ்லாமிய வரலாறு நெடுகிலும் மட்டுமன்றி பொது வாக மனித நாகரிக வரலாற்றிலும் விட்டுச் சென்ற அற்புதமான தடயங்கள் ஊன்றிக் கவனிக்கப்பட வேண்டும்.

அதே நேரம், நவீன மேற்குலக மனிதனது சடவாத நாகரிகத் தின் உள்ளடக்கத்தையும் உண்மை நிலையையும் அல்-குர்ஆனிய அகில நோக்கின் ஒளியில் நாம் புரிந்து கொள்வதும் அவசியம். ஏனெனில், மேற்குலக சடவாத நாகரிகமானது அனைத்து மதங் களையும் வஹீயின் வழிகாட்டலையும் புறமொதுக்கி விட்டது. குறித்த சமூகங்களுக்கென பிரத்தியேகமாக அருளப்பட்ட தூதுகள் தமது பணியை முடித்து விட்டிருந்ததும், அம்மதங்களில் ஏற்பட்ட திரிபுகளுமே இதற்குக் காரணம். அம்மதங்களை மேற்கு சமூகங் கள் முற்றாக ஓரங்கட்டும் நிலையை இது ஏற்படுத்தியது. இதனால் நவீன மேற்கு நாகரிகம் ஆன்மீகப் பண்போ நடத்தையோ விழுமியமோ அற்ற சடவாதத்தை நோக்கிச் சென்றது. இனவெறி, பலசாலிகளின் மேலாதிக்கம் முதலிய வனவாழ்வுப் பண்புகள் அங்கு மேலோங்கின. மனிதத் தொடர்புகளிலும் நடத்தையிலும் சமூக விழுமிய மனப்பாங்கு அற்றுப் போனது. இதனால் ஆன்மா இன்றி மண்ணின் பண்புகளை மாத்திரம் கொண்ட விலங்குகள் போன்று அவர்கள் மாறினர்.

இவ்வாறான எதிர்மறைப் பண்புகளுக்கு மத்தியிலும், பௌதீக வசப்படுத்தலுக்கும் பிரதிநிதித்துவத்திற்கும் அவசியமான அடிப்

படைகளை லோகாயதக் கலைகளின் மீது மேற்குலக சடவாத நாகரிகம் சாதித்துக் காட்டியது. பிரதிநிதித்துவத்திற்கான முக்கிய தகைமைகளுள் ஒன்றான பிரபஞ்ச நியதிகள் சார்ந்த பௌதீக அறிவியல் முறைமையை அது பேணியமையே இச்சாதனைக்குக் காரணம் எனலாம்.

ஆக- இஸ்லாம் சரியாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும். அல்-குர்ஆனிய அகில நாகரிக நோக்கு பல்வேறு விகாரங்களி லிருந்து தூய்மைப்படுத்தப்பட வேண்டும். இஸ்லாத்தின் சிந்தனா முறைமையும் கோட்பாடுகளும் மூடநம்பிக்கைகளிலிருந்தும் பிறழ்வுகளிலிருந்தும் சுத்தி செய்யப்பட வேண்டும். இளந் தலை முறையினரைப் பயிற்றுவிக்கும் வழிகள் சீர்செய்யப்பட வேண் டும். அப்போதுதான் நவீன சடவாதத்தில் மூழ்கியுள்ள மனிதன் தனது இருப்பையே அச்சுறுத்தும் போர்களிலிருந்தும் அநியாயங் களிலிருந்தும் அபாயங்களிலிருந்தும் விடுபட மார்க்கம் பிறக்கும்; மனித இனத்தை அச்சநிலையிலிருந்து பாதுகாப்பும் உள அமைதி யும் நீதியும் நிறைந்த வாழ்வைநோக்கி அழைத்துச் செல்ல வாய்ப்புக் கிட்டும்.

இஸ்லாமிய சிந்தனையாளர்களும் புத்துயிர்ப்புவாதிகளும் மேற் கொள்ள வேண்டிய சீர்திருத்தப் பணி இதுதான். இப்பணிக்கு அவர்கள் விடயவாரியான அணுகுமுறை, துணிவு, பொறுமை என்பவற்றை அணிகலனாகக் கொள்வது அவசியம். அவற்றின் மூலமாகத்தான், கலாச்சாரத் தளைகளையும், ஆட்சி இயந்திரங் களில் படிந்துள்ள துருக்களையும் அகற்றி, சிந்தனைத் தேக்கத் திலிருந்தும் நாகரிகப் பின்னடைவிலிருந்தும் முஸ்லிம் உம்மாவை வெளிக் கொண்டு வர முடியும்.

## அகில நாகரிக நோக்கும் பண்பாட்டு மானிடவியல் எண்ணக் கருக்களும்

அல்-குர்ஆன், நபிவாழ்வு, நபித்தோழர் வாழ்வு, முஸ்லிம் உம்மாவின் பெறுமதியான முதுசங்கள், சமகால இஸ்லாமியப் பனுவல்கள் முதலிய அனைத்திலும் மானிட விழுமியக்

கோட்பாடுகள் என்னும் இஸ்லாமியப் பெருஞ் செல்வம் நிறைந் திருப்பதாக சதாவும் கேள்விப்படுகிறோம். ஆனால் சமகால இஸ் லாமிய சமூகங்களதுவாழ்விலும் தொடர்புகளிலும் இக்கோட் பாடுகளது தாக்கம் பெருமளவில் அற்றுப் போயிருப்பதையே அவதானிக்கிறோம்.

ஒரு சமுதாயத்தின் கோட்பாடுகளும் பெறுமானங்களுமே அதன் அகில நாகரிக நோக்கை செயலூக்கப்படுத்தும் கருவிகளாகும். குறித்த நோக்கு விகாரமடைந்து விட்டால் அதன் பெறுமானங் களும் கோட்பாடுகளும் கூட செயலிழந்து விடும். குறித்த அகில நோக்கு உற்பவிக்கும் செயலூக்கியையும் இலக்கையும் சமுதாய மும் அதன் அங்கத்தவர்களும் இழந்து விடுவதே இதற்குக் காரண மாகும்.

எனவே, இப்பெறுமானங்களும் கோட்பாடுகளும் எண்ணக் கருக்களும் உயிர்ப்பிக்கப்படல் வேண்டும். பயிற்றுவிப்பினூடாக அவை சமூக அங்கத்தவர்களின் மனதில் ஆழப் பதிக்கப்படல் வேண்டும். பரஸ்பரத் தொடர்பும் ஒன்றையொன்று பூரணப்படுத் தும் தன்மையும் கொண்ட நிறுவனங்களில் அவை ஸ்தூலப் படுத்தப்படல் வேண்டும். இச்செயற்பாடுகள் அனைத்தும் ஒன் றோடொன்று தொடர்புற்றவை; நாகரிகத்தையும் வரலாற்றையும் உருவாக்கும் செயல்திறன் கொண்டநேர்நிலைச் சமுதாயங்களைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமானவை.

ஆக- அல்-குர்ஆனிய அகில நாகரிக நோக்கை மீட்டெடுத்து அதில் ஏற்பட்டிருக்கும் திரிபுகளை நீக்காமல், கோட்பாடுகளை யும் பெறுமானங்களையும் வைத்து பெருமைப்படுவது மாத்திரம் போதாது. நமது பயிற்றுவிப்பு முறைமைகளையும் சிந்தனா முறைமைகளையும் சீர்படுத்துவன் மூலமும், முஸ்லிமின் மனச் சாட்சியோடு பேசுவதன் மூலமுமே இதனை சாத்தியப்படுத்த முடியும்.

## பாரிய உழைப்புகள் வீணாவதைத் தவிர்க்க இன்னும் சற்று தொலைநோக்கு அவசியம்

அல்-குர்ஆனிய அகில நாகரிக நோக்கு நபித்தோழர்களை எவ்வாறு மாற்றியமைத்தது என்பதை அறிந்தோம். அவர்கள் முன்வைத்த மாதிரிகளையும் நாகரிக சாதனையையும் கூட அறிந்தோம். மானிட நாகரிகத்துக்கு புத்துயிரளிப்பதில் அவர்களது பெரும் பங்கையும் அறிந்து கொண்டோம். இஸ்லாமிய அகில நாகரிக நோக்கைப் புரிந்து கொள்ளும் வகையில் அல்-குர்ஆனின் பால் முஸ்லிம்கள் பின்னர் மீளாதிருந்தமையே உம்மாவை குழப்பமும் மயக்கமும் சூழ்ந்து கொண்டமைக்கான காரணம் என்பதையும் அறிந்து கொண்டோம்.

உம்மாவின் ஆரோக்கியத்தையும் நோக்கையும் விழுமிய இயல்பையும் உந்துசக்தியையும் மீளப் பெற வேண்டுமாயின், அதன் முதுசங்களும் பயணமும் மீள்வாசிப்புச் செய்யப்பட வேண்டும். நல்லதையும் தீயதையும் வேறு பிரித்துக் காட்டக் கூடிய தீர்க்கமான விமர்சனக் கண்ணோட்டத்துடன் அந்த மீள்வாசிப்பு இடம்பெற வேண்டும். மதப்புரோகிதர்கள் குறித்தோ அரசியல் அதிகாரம் படைத்தோர் குறித்தோ எந்த அச்சமுமின்றி இதய சுத்தியோடும் அறிவியல் நேர்மையோடும் அது மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு சிந்தனா- பயிற்றுவிப்புத் தளங்களை ரோகங்களிலிருந்தும் விகாரங்களிலிருந்தும் தூய்மைப்படுத்தும் பணி அறிவியல் நேர்மையோடும் விமர்சன பூர்வமாகவும் மேற்கொள்ளப்பட்டதன் பிறகு அடுத்த கட்டப் பணி ஆரம்பமாகும். அகிலத்துவப் பண்பும், சமூக நாகரிக இயல்பும், சர்வதேச வியாபகமும் கொண்ட கண்ணோட்டமொன்றை விதைப்பதே அப்பணியாகும். அக்கண்ணோட்டம் அல்-குர்ஆனை மூலாதாரமாகக் கொண்டிருக்கும்; நபித்துவ வாழ்வியலின் பிரயோக ஞானத்தைப் பெற்றிருக்கும்.

அறிவு அல்லது அறிவியல் என்பது சிந்தனையாளர்களதும் அறிஞர்களதும் கல்வியியலாளர்களதும் உற்பத்தி; பாடசாலைகள தும் ஆசிரியர்களதும் ஆக்கம். ஆனால் பயிற்றுவிப்பும், (ஆன்மா, மனச்சாட்சி, சீரிய நடத்தை உள்ளிட்ட) வழிப்படுத்தலும் பெற் றோரதும் பயிற்றுவிப்பாளர்களதும் பணி. அதேவேளை இத் துறையில் ஊடகங்களும் சமூகச் சூழலும் கொண்டிருக்கும் தாக் கத்தையும் மறுப்பதற்கில்லை. ஆனால் கற்றல்-கற்பித்தல் கட் டொழுங்கின் இயக்கத்தில் அல்லது பயிற்றுவித்தல் கட்டொ ழுங்கின் இயக்கத்தில் கோளாறு ஏற்படுமளவுக்கு இவ்வகிபா கங்களுக்கிடையில் குழப்பநிலை தோன்றாதிருப்பது அவசியம்.

அல்-குர்ஆனியஅகில நாகரிகநோக்கின் அடிப்படையில் உம்மா வைக் கட்டியெழுப்புவதற்காக நாம் அனைவரும் வினைமை யோடு செயலாற்றுவதற்கான நேரம் வந்து விட்டது. சிந்தனை யாளர்களும்; சீர்திருத்தவாதிகளும் பயிற்றுவிப்பாளர்களும் தத் தமது பணியை நிறைவேற்றினால் இது சாத்தியமே. 'முயற்சித்த வர் பெற்றுக் கொள்வார்' 'சரியான பாதையில் பயணிப்பவர் இலக்கை அடைவார்'.

## இஸ்லாமிய சமூகவியல் கலைகளைக் கட்டியெழுப்புவதும் இஸ்லாமிய நோக்கை செயற்படுத்துவதும் எவ்வாறு?

இஸ்லாமிய சமூகவியல் கலைகளைக் கட்டியெழுப்புதல் தொடர்பாக நாம் பிரத்தியேக கவனம் செலுத்துவது அவசியம். ஏனெனில் அதன் மூலமே இஸ்லாமிய நோக்கை செயலுருப் படுத்தக் கூடிய சிந்தனையைப் பிறப்பிக்க முடியும். 'அறிவை இஸ்லாமிய மயப்படுத்தல்' என்றால் என்ன என்பது குறித்தும், அதனை எவ்வாறு சாத்தியப்படுத்துவது என்பது குறித்தும் நிலவுகின்ற சர்ச்சைக்கும் குழப்ப நிலைக்கும் அதன் மூலமே முடிவு கட்டவும் முடியும். ஏனெனில் அறிவை இஸ்லாமிய மயப்படுத்தல் என்ற விடயம் தெளிவற்றிருப்பதற்கான பிரதான காரணங்களுள் 'இஸ்லாமிய சமூகவியல் கலைகளை கட்டி

யெழுப்புதல்' என்ற விவகாரமும் ஒன்று. இக்கலைகளின் உள்ளடக்க இயல்பும் பணியும் என்ன என்பது இன்னும் தெளிவாக புரிந்துகொள்ளப்படவில்லை. அவ்வாறே, இஸ்லாமிய சிந்தனையோடும் முதுசங்களோடும் அவற்றுக்குள்ள தொடர்பு என்ன என்பது ஒரு புறமும், மேற்கத்திய சமூகவியல் கலைகளோடு அவற்றுக்குள்ள தொடர்பு என்ன என்பது பற்றி மறுபுறமும் மயக்கங்கள் காணப்படுகின்றன.

இத்தெளிவின்மையை நீக்குவதற்கு ஆரம்பமாக பாரம்பரிய இஸ்லாமியக் கலைகள் என்றால் என்ன என்பதையும், அவற்றின் பிரயோகங்கள் என்ன என்பதையும் நாம் வரையறுக்க வேண்டும். பின்பு நவீன சமூகவியல் கலைகளின் இயல்பு என்ன என்பதை வரையறை செய்ய வேண்டும்.

முதலில் பாரம்பரிய இஸ்லாமிய சிந்தனை மற்றும் இஸ்லாமியக் கலைகள் பற்றிய விவகாரத்திலிருந்து ஆரம்பிப்போம். பாரம்பரிய இஸ்லாமிய சிந்தனையின் மீது சட்ட நியாயவியல் (பிக்ஹ்) சார்ந்த போக்கே அதிக செல்வாக்குச் செலுத்துகிறது என்பது வெளிப்படை. 'பிக்ஹ்' என்பது அடிப்படையில் சமூக உறவுகளை ஆளுகை செய்யும் நியமங்களையும் விதிகளையும் கொண்டுள்ள சட்டத் தொகுப்பாகும்.

இஸ்லாமிய சிந்தனையின் செல்நெறியையும், இஸ்லாமிய சட்ட நியாயவியலோடு அதன் தொடர்பையும் முழுமைத்துவ ஆய்வு நோக்கில் அவதானிக்கும் போது ஓர் உண்மை புலப்படுகிறது. இஸ்லாமிய சட்ட நியாயவியலானது ஆரம்பம் தொட்டு தனது சிந்தனையையும் விதிகளையும் உள்ளடக்கத்தையும் நபித்துவக் காலத்தினதும், பின்னைய நேராட்சிக் காலத்தினதும் நடைமுறைப் பிரயோகங்களிலிருந்தே பெற்று வந்திருக்கிறது என்பது தான் அவ்வுண்மை.

எனினும் பின்னர் ஏற்பட்ட பல மாற்றங்கள் மேற்சொன்ன விதிகளையும் நியமங்களையும் சட்டங்களையும் பிற்கால இஸ்லாமிய சமூகங்களோடு எந்த வகையிலும் தொடர்பற்றவையாக்கி

விட்டன. நேர்வழி நடந்த கிலாபத்தின் வீழ்ச்சி, புதிய தேசங்களின் வெற்றி, அதனால் விளைந்த புதிய பிரச்சினைகள், ஆட்சி மற்றும் தேச நிர்வாகத்தில் ஏற்பட்ட அறபுக் கோத்திரவாத மேலாதிக்கம், அம்மேலாதிக்கத்தின் பிரத்தியட்ச விளைவாக உமையா ஆட்சியில் ஏற்பட்ட அரசியல் -பொருளாதார- சமூகவியல் பிறழ்வுகள், கால ஓட்டத்தில் உருவான அரசியல் மற்றும் சிந்தனா ரீதியான பலவீனங்கள் என இம்மாற்றங்களை நாம் பட்டியல் இடலாம். அந்த வகையில், அச்சட்டங்களிலும் நியமங்களிலும் விதிகளிலும் அதிகமானவை இன்றைய உலகில் வழக்கொழிந்து விட்ட சிந்தனையையும் யதார்த்தத்தையும் வரலாற்றையும் பிரதிபலிப்பவை என்றே கூறல் வேண்டும்.

நவீன மேற்கத்திய சமூகவியல் கலைகள் என்பதையும், (இஸ்லாமிய சமூகவியல் கலைகளுடன் தொடர்புற்ற) 'அறிவை இஸ்லாமிய மயப்படுத்தல்' என்பதையும் பொறுத்தவரை, அவை உள்ளடக்கத்தில் தொடர்புற்றிருப்பது போன்றே முறைமையிலும் தொடர்புற்றிருக்கின்றன. எனவே (உள்ளடக்கம், முறைமை ஆகிய) இவ்விரு விவகாரங்களையும் தனித்தனியாக வேறுபடுத்தினால் குறித்த நோக்கு தெளிவாகி விடும். அவற்றைக் கையாள்வதும் இலகுவாகி மாறிவிடும்.

இது பற்றிக் கலந்துரையாட முன்னர், அறிவியல் மற்றும் சமூகத் தொடர்பாடல் துறையில் சமூகவியல் கலைகளின் பணி என்ன என்பதை தெளிவுபடுத்துவது அவசியம்.

சமூகவியல் கலைகளின் வகிபாத்திரம் பற்றிய புரிதல் முழுமையடைய வேண்டுமாயின், ஒரு விடயத்தை நாம் கொள்கையளவில் அறிந்து ஏற்றாக வேண்டும். அதாவது சமூகவியல் கலைகளின் பணியும் வகிபாகமும் இஸ்லாமிய சட்ட நியாயவியலின் வகிபாத்திரத்திலிருந்து வேறானது என்பதே அவ்விடயம். சமூகவியல் கலைகளின் பணி சட்ட நியாயவியலின் பணியை விடப் பெரியது; விசாலமானது. அடிப்படையில் சமூகவியல் கலைகளின் பணி சமூகத்தை அதன் நாகரிக நோக்கின் ஒளியில் ஆய்வு செய்வதாகும்.

இஸ்லாமிய சமூகவியல் கலைகளின் பணி சமூகவியல் சிந்தனையை பிறப்பாக்கம் செய்வதே என்ற பொருளை இது தருகிறது. இவ்வாறு இஸ்லாமிய சமூகவியல் கலைகளால் பிறப்பிக்கப்படுகின்ற இஸ்லாமிய சிந்தனையிலிருந்தே சட்ட நியாயவியலானது தனக்குரிய விதிகளையும் நியமங்களையும் சாரமாக பெற்றுக்கொள்கிறது.

ஆக- சட்ட நியாயவியல் துறையின் பணியானது வடிவம் சார்ந்தது. சமூகவியல் கலைகளின் பணி சிந்தனை சார்ந்தது. உம்மாவின் பயணத்துக்கும் கட்டுருவாக்கத்துக்கும் நாகரிகத்துக்கும் பணிபுரிவதில் இவ்விரு அம்சங்களும் பறவையின் இரு இறக்கைகள் போன்று தொழிற்பட்டு ஒன்றையொன்று பூரணப் படுத்துகின்றன எனலாம்.

இங்கு தோன்றும் வினா இதுதான்: அறிவை இஸ்லாமியப் படுத்துதல் மற்றும் இஸ்லாமிய சமூகவியல் கலைகளை கட்டியெழுப்புதல் ஆகிய விவகாரங்களுடன் நவீன மேற்கத்திய சமூகவியல் கலைகள் எங்கே, எப்படி தொடர்புபடுகின்றன?

மேற்கத்திய சமூகவியல் கலைகளின் சிந்தனா உள்ளடக்கம் இரு விடயங்களால் தாக்கமடைந்திருக்கிறது என்பதை நாம் அறிவோம். முதலாவது விடயம்: மேற்கத்திய சுயாதீன சிந்தனைப் பகுதி. மேற்கத்திய அகில நோக்கு இச்சிந்தனையை பிரதிபலிக்கிறது. அடிப்படையில் இந்நோக்கு சடவாதச் சிந்தனை சார்ந்தது. மதங்களுக்கு அதன் மீது குறிப்பிடத்தக்க எந்தத் தாக்கமும் இல்லை.

இரண்டாவது விடயம்: மேற்கத்திய சமூகவியல் கலைகளின் ஆய்வறிவுப் பகுதி. மனிதனின் 'பித்றா'வையும் இயல்புகளையும் ஆய்வு செய்யும் முறைமையில் இது வெளிப்படுகிறது. குறித்த இயல்புகளை அவற்றின் யதார்த்தத்துடன் கையாளும் விதம், இலக்குகளுக்கேற்ப அவற்றைத் தகவமைக்கும் முறை, இருக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி சாதனங்களையும் தீர்வுகளையும் நிறுவனங்களையும் புத்தாக்கம் செய்யும் முனைப்பு,

அதன் மூலம் சவால்களை வெற்றி கொள்ளும் பண்பு என்பவற்றை இது குறிக்கிறது.

இவ்வகையில், மேற்கத்தியர்களது ஆய்வு நேர்மை சார்ந்த இப்பகுதியிலிருந்தும் அனேக புத்தாக்கங்களிலிருந்தும் நாம் பய னடைய முடியும்.

இப்போது எழும் அடுத்த வினா: 'பித்றா'வையும் சமூகவியல் விதிகளையும் சடவுலக விதிகளையும் ஆய்வு செய்தல் தொடர் பான மேற்குலகக் கோட்பாடுகளிலிருந்து பயன் பெறும்போது, மேற்குலகின் மீது நாம் தங்கியிருப்பதாக அது பொருள்படுமா? நமது அகில நாகரிக நோக்கிற்கு அன்னியமான ஒன்றை இறக்கு மதி செய்வதாக அது அமையுமா?

இல்லை; அதுசரியான வாதமன்று என்பதை நாமறிவோம். ஏனெனில், அறிவியல் நோக்கு மற்றும் உலகளாவிய இயல்பு என்பவற்றின் திசைகளை முதலில் அகலத் திறந்தது இஸ்லாம் தான். அறிவையும் ஆராய்ச்சியையும் சிந்தனையையும் தேடலை யும் தூண்டுகின்ற புதியதொரு யுகத்தின் விடியலாகவே இஸ்லாம் பிறந்தது. அறிவாராய்ச்சியையும் பிரபஞ்ச நியதிகள்மீதான ஆய்வுக் கலாசாரத்தையும் ஆரம்பித்து வைத்தது இஸ்லாமிய நாகரிகமே. அன்று மிலேச்சத்தனத்தில் மூழ்கியிருந்த மேற்குலகம் அறிவியல் நோக்கையும் பிரபஞ்ச நியதிகள் பற்றிய அறிவையும் இஸ்லாத் திலிருந்தே பெற்றுக் கொண்டது. மேற்கத்திய சமூகவியல் கலை கள் என்பவை பிரபஞ்ச நியதிகள் குறித்த இஸ்லாமிய ஆய்வு களின் நீட்சியே அன்றி வேறில்லை.

மானிட இயல்பு பற்றிய ஆய்வுகளிலும் படைப்பின் நியதிகள் பற்றிய தேடல்களிலும் ஆரம்ப கால முஸ்லிம்களே ஏனையோரை விட முன்னிலை வகித்தனர். எனினும், மிக ஆரம்ப கட்டத் திலேயே உம்மாவின் பயணத்தில் ஏற்பட்ட சறுக்கல்கள் அப் பயணத்தை இடைமறித்து விட்டன.

இதனால், மனித இனம் வஹீயின் வழிகாட்டலிலிருந்து நேரடியாக பயன் பெற முடியாது போனது. இஸ்லாமிய

நோக்கிலிருந்தும், அதன் அறிவு, உலகளாவிய இயல்பு, நீதி, பாது காப்பு, சமாதானம் என்பவற்றிலிருந்தும் கூட நீண்ட பல நூற் றாண்டுகள் பயனடைய முடியாமல் போனது.

மேற்சொல்லப்பட்ட அனைத்தும் ஒரு முஸ்லிம் நான்கு விட யங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்பதை வலியுறுத்து கின்றன:

1. கண்மூடித் தனமாகப் பின்பற்றுதல் எனும் வியாதியிலி ருந்து விடுபடல்; பகுப்பாய்வு, புத்தாக்கம், விமர்சன நோக்கு, முழுமைத்துவ அறிவியல் அணுகுமுறை என்ப வற்றை அணிகலனாகக் கொள்ளல்.

2. அல்-குர்ஆனிய அகில நாகரிக நோக்கு, அதன் பெறு மானங்கள், கோட்பாடுகள், மாறா அம்சங்கள் என்பவை பற்றிய அறிவைப் பெறுவதன் மூலமாக தன்னை தகை மைப்படுத்திக் கொள்ளல்.

3. மானிட -பிரபஞ்ச இயல்பை ஆய்வு செய்வதற்கான முறை மையை அறிதல்; கால-இட யதார்த்தத்தையும் அதன் பலங் களையும் இயலுமைகளையும் ஆய்வு செய்யும் முறையை அறிதல்.

4. இஸ்லாமிய முதுசங்களிலிருந்தும், விடயவாரியான ஆய்வு நேர்மை கொண்ட நவீன அறிவியல் சாதனைகளிலிருந்தும் பயனடைதல்.

ஆக- அறிவை இஸ்லாமிய மயப்படுத்துதல், இஸ்லாமிய சமூகவியல் கலைகளை மீட்டுருவாக்குதல், நவீன இஸ்லாமிய சமூகவியல் சிந்தனையை பிறப்பித்தல் என்பன அறிஞர்களும் ஆய்வாளர்களும் பல்வேறு துறைகளில் மேற்கொள்ளும் பணி களிலிருந்து வேறுபட்டவையல்ல என்பது தெளிவு. இப்போது நம் முன்னுள்ள பணி அல்-குர்ஆனிய அகில நாகரிக நோக்கை துலக்கியெடுப்பதொன்றுதான்.

## இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனத்தின் பங்களிப்புகள்.

இவ்விடயம் தொடர்பில் இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வ தேச நிறுவனம் மேற்கொண்டுள்ள அறிவியல் ஆக்கங்களிலிருந் தும் படிமுறையான அறிவியல் முன்னெடுப்புகளிலிருந்தும் கற் றறிவாளர்கள் அதிகம் பயன் பெறலாம். அறிவாராய்ச்சி மையங் களும்,முறையான இஸ்லாமிய சமூகவியல் ஆய்வுகளில் கவனம் செலுத்துவோரும் இத்திட்டங்களைக் கற்பதிலும் பின்பற்று வதிலும் விருத்தி செய்வதிலும் கூடுதல் உழைப்பை வழங்க வேண்டும். அதன் மூலம் இஸ்லாமிய சிந்தனைத் துறையில் வினைமை மிக்க உழைப்பு என்னும் சக்கரத்தை அவர்களால் முன்தள்ள முடியும்.

இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனம் எதிர்வரும் வருடங்களுக்கான தனது நிகழ்ச்சித் திட்டத்தில், இஸ்லாமிய சமூகவியல் கலைகளின் முறைமையியல் தொடர்பான நூலாக்கம், கல்விப் புல பயிற்றுவிப்பு என்பவற்றுக்கு அதிக யத்தனத்தைச் செலவிட எண்ணியுள்ளது; இஸ்லாமிய நோக்கின் பிரச்சினை களை தெளிவுறுத்தவும் உறுதி பூண்டுள்ளது.

உயர்கல்வி முறைமையை சீராக்கம் செய்வதில் இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனத்தின் மிக முக்கிய பங்களிப்பாக மலேசிய இஸ்லாமிய பல்கலைக்கழக மாதிரி அமைந்துள்ளது எனலாம். இப்பல்கலைக்கழகத்தின் வஹீ மற்றும் மானிடக் கலைகளுக்கான பீடத்தில் பிரதான சிறப்புத் தேர்ச்சி மற்றும் பகுதியளவான சிறப்புத் தேர்ச்சி என்ற ஒழுங்கு பின்பற்றப்படு கிறது. இஸ்லாமிய கற்கைகள் துறை இவ்விரு சிறப்புத் தேர்ச்சி களுள் ஒன்றாக அமைந்திருக்கும். ஒரு பட்டதாரி தனது கற்கைக் காலத்தை மேலதிகமாக ஒரு வருடத்தால் நீடித்து பகுதியளவான சிறப்புத் தேர்ச்சியைப் பூர்த்தி செய்து விட்டால், அவர் இளங் கலைமானிப் பட்டத்தின் இரு மட்டங்களைப் பூர்த்தி செய்த வராக மாறுவார். ஒன்று, இஸ்லாமியக் கற்கைகளுக்கானது; மற்றை யது, சமூகவியல் அல்லது மானிடவியல் கலையொன்றுக்கானது.

இந்த ஒழுங்கு பாரிய வெற்றியைப் பெற்றிருக்கிறது. இதன் பட்டதாரிகள் அதிக இஸ்லாமியப் பற்றும் முதிர்ச்சியும் கொண்ட வர்களாக வெளியேறுகின்றனர்; இஸ்லாமிய நாகரிக நோக்கு பற்றியும், மானிட நாகரிகப் பயணத்தில் உம்மாவின் வகிபாகம் பற்றியும் ஆழமான புரிதலையும் கொண்டுள்ளனர். தமது சிறப்புத் துறைகளிலும் இவர்கள் அதிக ஆற்றல் கொண்டிருக்கின்றனர்.

மலேசிய சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் நடை முறைப்படுத்தப்படும் பாடத்திட்டங்களுள் 'மேற்கத்திய கற்கை கள்' என்றும் ஒரு பாடம் உண்டு. இது மேற்கத்திய நாகரிகத்தை விளங்கிக் கொள்வதற்கு துணை புரிகிறது. மேற்கின் சாதகமான அம்சங்களுடன் ஆக்கபூர்வமான தொடர்பைப் பேணவும், பாதக மான அம்சங்களைத் தவிர்ந்து கொள்ளவும் கூட இது உதவுகிறது. அதே போன்று 'குடும்பமும் குழந்தை வளர்ப்பும்', 'புத்தாக்க சிந்தனையும் பிரச்சினைகளைத் தீர்த்தலும்'ஆகிய பாடங்களும் உண்டு. 'நாகரிகங்களின் எழுச்சியும் வீழ்ச்சியும்' எனும் பாடத்தை இணைப்பது பற்றியும் கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. அதே போன்று, அறிவை ஒருமுகப்படுத்தி இஸ்லாமிய மயப்படுத்தல் தொடர்பாக இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனம் கொண்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அமைவான அறிவியல் குழுக்களும் அங்கு காணப்படுகின்றன.

ஏற்பியல் மற்றும் தொழில்நுட்பக் கலைகளைப் பொறுத்த வரையில், அவற்றுடன் இஸ்லாமியக் கற்கைகளுக்கான பாடத் திட்டமொன்றும் இணைக்கப்படுவது சிறந்தது. இது அத்துறை களில் கற்கும் மாணவர்கள் இஸ்லாமியக் கற்கைகள் பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றுக் கொள்ள உதவுவதுடன், மேலதிக மாக தேடிக் கற்பதற்கும் வழிவகுக்கும்.

இவ்வாறு அறிவியல், மனப்பாங்கு, நாகரிகம் முதலிய எல்லா வகையிலும் பூரணத்துவம் மிக்க தலைமுறையொன்றை உருவாக் குவதற்கும், முஸ்லிம் உம்மாவின் அங்கத்தவர்களை தரமுயர்த்து வதற்கும் 'இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனம்' கலைத் திட்டமொன்றை முன்வைத்துள்ளது. பலரும் அதிலிருந்து

பயனடையலாம். அதன் மூலமாக இஸ்லாத்தின் நாகரிகத் தூதை செயல்வாதமாக முன்வைக்க உம்மா சக்தி பெறலாம்.

## இறுதியாக...

பல்கலைக்கழகப் பேராசிரியர்களாகப் பணிபுரியும் சகோதர சகோதரிகளையும், பல்கலைக்கழகம் சார்ந்த அல்லது சாராத ஆய் வியல் வளவாளர்களையும் கவனயீர்ப்புச் செய்ய வேண்டிய விடயமொன்று எஞ்சியுள்ளது.

பல எழுத்தாளர்களதும் சிந்தனையாளர்களதும் ஆக்கங்கள் ஏராளமான கோட்பாடுகளையும் கலைச் சொல் பிரயோகங்களை யும் உட்பொதிந்துள்ளன. அவை அடிப்படையான பல விவ காரங்கள் பற்றிப் பேசுகின்றன; பல பிரச்சினைகளைத் தீர்ப்ப தற்கான பாதைகளையும் வரைந்து தருகின்றன.

துறைவாரியான சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களது அறிவும் எழுதுகோல்களும் அக்கோட்பாடுகள் பற்றிய ஆய்வில் ஈடுபட வேண்டும். வாழ்வியல் அம்சங்களில் அவற்றைப் பிரயோகிப்ப தற்கான வழிவகைகளை அவர்கள் கண்டடைய வேண்டும். உம்மாவின் அறிவார்ந்த ஒழுங்குகளாகவும் சமூகவியல் பொறி முறைகளாகவும் வாழ்வுக் கலாசாரமாகவும் அவை மாற வேண் டும். இல்லையேல், சமூகத்தின் யதார்த்த வாழ்வு மீது எவ்விதத் தாக்கமுமின்றி புத்தகத்தின் பக்கங்களுக்குள் நிரந்தரமாக அவை சிறைப்பட்டு விடும்.

எனவே, இவ்விடயத்தில் துறைசார் நிபுணர்களது முயற்சிகள் ஒருங்கிணைந்து, உம்மாவுக்கு புதிய கண்ணோட்டங்களையும் செயற்பாட்டு முறைமைகளையும் வாழ்வியல் பிரயோகங்களை யும் வழங்க வேண்டும். உம்மாவும் அவற்றின் மூலமாக தனது சிந்தனையையும் முறைமைகளையும் நிறுவனங்களையும் புதுப் பிக்க வேண்டும்.

கோட்பாடு சார்ந்த சில விவகாரங்களை உம்மாவின் யதார்த்த நிலைமைகளின் மீது பிரயோகிப்பதற்கு இங்கு நான் முயன்

றிருக்கிறேன். சிந்தனா மற்றும் செயல் சார்ந்த பதிலீடுகளை முன் வைப்பதற்கும் என்னாலான அளவுக்கு முயன்றிருக்கிறேன். எனினும் இவை அவசியமான பணிகளுக்கான சில முற்குறிப்பு கள் மாத்திரமே. இவை விரிவு படுத்தப்பட வேண்டும்; கல்விசார் சிறப்புத் துறைகளாக பரிணமிக்க வேண்டும்; வாழ்வின் அனைத் துத் துறைகளிலும் மிக விரிவான வடிவங்களில் ஊடுபாவிச் செல்ல வேண்டும்.

‘முஸ்லிம் உம்மாவின் அகில நாகரிக நோக்கு’ என்ற விவகாரம் பற்றிய முழுமையான, ஆழமான, சிந்தனா மீளாய்வொன்றை இந்நூல் முன்வைக்கிறது. அந்த அகில நாகரிக நோக்கின் வரலாற்றுச் செல்நெறியை அது ஆய்வு செய்கிறது. ஆரம்ப முஸ்லிம் சமூகத்தின் முன்னேற்றத்துக்கான முக்கிய காரணியாக அந்நோக்கு எவ்வாறு இருந்தது என்பதையும் எடுத்துக் காட்டுகிறது. அந்த அகில நாகரிக நோக்கைப் பீடித்த ரோகங்களையும், அவற்றின் காரணமாக இன்று அது எதிர்கொண்டுள்ள அபாயங்களையும் கூட விவரிக்கிறது. இந்த வகையில், ‘அல்-குர்ஆனிய அகில நாகரிக நோக்கை’ புரிந்து கொள்ளவும், தெளிவுபடுத்தவும், நவ உலகுக்கு அதனை மீட்டெடுக்கவும் இந்நூல் பங்களிப்புச் செய்கிறது.




*அப்துல் ஹமீத் அபூ ஸுலைமான்*

மக்காவை பிறப்பிடமாகக் கொண்டவர். இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனத்தின் தலைவ ராகவும், மலேசியாவின் சர்வதேச இஸ்லாமியப் பல் கலைக்கழகத்தின் நிறுவுனராகவும் பணிப்பாளராகவும் (1988-1999) இருந்தவர். தனது கலாநிதிப் பட்டத்தை 1973 ஆம் ஆண்டு அமெரிக்காவின் பென்சில்வே னியா பல்கலைக்கழகத்தில் சர்வதேச உறவுகள் பற்றிய துறையில் பெற்றுக் கொண்டார். இஸ்லாமிய சிந்தனை சார்ந்த பல்வேறு புலங்களில் பல ஆய்வுகளையும் நூல்களையும் இவர் ஆக்கியுள்ளார். அவற்றுள் முக்கியமானவை வருமாறு:

- சர்வதேச உறவுகள் பற்றிய இஸ்லாமிய கோட்பாடு: சிந்தனைக்கும் இஸ்லாமிய முறைவழிக்குமான புதிய செல்நெறிகள்.
- முஸ்லிமின் சிந்தனா நெருக்கடி.
- வன்முறையும் அரசியல் போராட்டத்தை நிர்வகித்தலும்- கொள்கைக்கும் நடைமுறைத் தெரிவுக்கும் இடையில் இஸ்லாமிய நோக்கு.
- முஸ்லிமின் நாட்டசக்தி மற்றும் மனப்பாங்கு நெருக்கடி.
- நவீன இஸ்லாமிய சீர்திருத்தம்.

ISBN 978-955-8398-30-2



Published by
**Fuzin Texts**
23/3 Market Road, Dharga Town 12090
Sri-Lanka.